# உதயன்

28 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 314 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 20, திங்கள் 06.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


06 OCT 2014



உதயன் வாசகர்களுக்கு ஹஜ் பெருநாள் வாழ்த்துக்கள்

## யாழ்.வரும் ஜனாதிபதி விற்கவுள்ளார் மோ.சைக்கிள்



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளவுள்ள யாழ்ப்பாணப் பயணத்தின்போது, வெளிக்களப் பணிகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வுக்கு மோட்டார் சைக்கிள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. ஆண் அரச உத்தியோகத்தர்களுக்கு ரூபா 50 ஆயிரத்துக்கும், பெண் அரச உத்தியோகத்தர்களுக்கு 45 ஆயிரம் ரூபாவுக்கும் அவை கொடுக்கப்படவுள்ளன. அதற்காக நேற்று ஒரு தொகுதி மோட்டார் சைக்கிள்கள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கொண்டுவரப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

26 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்டத்தில் அதிகரிக்கிறது டெங்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஒக் 6

யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதத்தில் மட்டும் 92 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று வடக்கில் ஏனைய மாவட்டங்களிலும் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னாரில் 40 பேருக்கும், முல்லைத்தீவில் 5 பேருக்கும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 4 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். யாழ். மாவட்டத்தில் நாளாந்தம் குறைந்தது இருவர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 882 பேரும் வவுனியாவில் 105 பேரும், மன்னாரில் 89 பேரும்,

26 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வாகனம்-ஓட்டோ விபத்து: ஒருவர் சாவு

தென்மராட்சி, ஒக்.6

மிருசுவில்,கெற்பேலிப் பகுதியில் இராணுவ வாகனமும், ஓட்டோவும் விபத்துக்குள்ளானதில் ஓட்டோவில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதில் பயணித்த ஏனைய நால்வரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்றிரவு 7 மணியவில் நடந்துள்ளது. விபத்தில் கச்சாய் தெற்கை ஒரு பிள்ளையின் தந்

26 ஆம் பக்கம் பார்க்க

# உரிமைகளை பெறும்வரை தமிழர் போராட்டம் ஓயாது

## மாவை எம்.பி. ஜேர்மனியில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.6

"தமிழ்மொழிக்காகவும் இனத்துக்காகவும் ஒழுக்கத்துக்காகவும் இலட்சக்கணக்கான மக்களை நாம் தாய் மண்ணில் இழந்தோம். எனவே, தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்கும்வரை எமது போராட்டம் ஓயாது. அற வழி, மறவழியென இன்று இராஜதந்திர போராட்டம் வரை எமது போராட்டம் வளர்ச்சி கண்டுள்ளது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா ஜேர்மனியில் தெரிவித்துள்ளார்.

" தமிழ் மொழியை நாங்கள் பேசாவிட்டால், அதனை கையாளா விட்டால், அதில் வாழ்வும் வளமும் பெறாவிட்டால் நாங்கள் தமிழர்களாக இருக்க மாட்டோம் " என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜேர்மனியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 12 ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

உலகத் தமிழ் பண்பாட்டு தலைவர்களும் நிர்வாகிகளும் ஒரு கொள்கைப் பற்றோடும் இலட்சியப்பற்றோடும் தமிழை வளர்க்க வேண்டும், வாழ வைக்கவேண்டும் என் பதற்காக கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு மேலாக மிகப் பெரிய ஆற்றல் அறிவு கொண்டவர்களுடன் இந்த அமைப்பை பேணி வருகின்றனர்.

தமிழர்கள் வாழும் இடமெல்லாம் தமிழ் வாழவேண்டும் என்பதற்காக இந்த இயக்கத்தை இதய தாகத்தோடும் உணர்வுகளோடுகொள்கையுடனும் இலட்சிப்பற்றோடும் இயங்கிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

26 ஆம் பக்கம் பார்க்க

## 5 மாவட்டங்களில் புதிதாக ஐம்பது பஸ் தரிப்பிடங்கள்

யாழ்ப்பாணம்.ஒக்.6

வடக்கு மாகாண போக்குவரத்து மீன்பிடி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சால் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக நீண்ட காலப் பாவனைக்கு தகுந்த வகையில் 40 தொடக்கம் 50 பஸ் தரிப்பிட நிலையங்கள் இந்த மாதம் அமைக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய பல கிராமங்களில் பஸ் தரிப்பு நிலையங்கள் இல்லாத காரணத்தால் போக்குவரத்தின் போது பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் முதியவர்கள் மாற்று வலுவுடையவர்கள் பஸ்ஸுக்காக காத்திருக்கும்போது பாதிப்பை எதிர்கொள்கின்றனர். விசேடமாக பாடசாலை மாணவர்கள் பஸ் தரிப்பிடங்கள் இல்லாத காரணத்தால் வீதி விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகின்றது. மக்களால் வைக்கப்பட்ட கோரிக்

26 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்தேவியை பார்வையிட வருகின்றது அமைச்சர் குழு

யாழ்ப்பாணம். ஒக்.6

யாழ்தேவி ரயில் சேவையை நேரடியாக பார்வையிடுவதற்கு போக்குவரத்து அமைச்சர் தலைமையிலான குழுவினர் நாளை வருகை தரவுள்ளனர்.

எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்தேவி ரயில் சேவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள நிலையில் பரீட்சார்த்த ரயில் சேவைகள் தொடர்ச்சியாக 3 தினங்கள் கடந்த வாரம் நடைபெற்றிருந்தன.

இந்தநிலையில் பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவையைப் பார்வையிடுவதற்காக போக்குவரத்து அமைச்சர் தலைமையிலான குழுவினர் கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளனர். இந்தக்குழுவினர் ரயில் நிலையங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பில் ஆராயவுள்ளனர். (ற-14)

## போலித் தங்கம் விற்றோர் சிக்கினர் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.6

செப்பு, வெள்ளி மற்றும் சிறிதளவு தங்கம் கலந்து தயாரிக்கப்பட்ட போலி தங்க பிஸ்கட்களை விற்பனை செய்ய முயன்ற அநுராதபுரத்தைச் சேர்ந்த நால்வர் நேற்று நாவற்குழியில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த குறித்த நால்வரும், மாதகலைச் சேர்ந்த ஒருவருடன்

26 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வவுனியா நீதிமன்று முன் போராட்டம்

வவுனியா, ஒக்.6

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரி மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, எதிர்வரும் 10 ஆம் திகதி வவுனியா நீதிமன்றின் முன் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டம் காலை 9.30 மணியளவில் நடத்தப்படவுள்ளது. போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ள வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு இதுகுறித்து தெரிவித்துள்ளதாவது,

"கிளிநொச்சி, தர்மபுரத்தில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவி

26 ஆம் பக்கம் பார்க்க


வரையுங்கள் கார்ட்டூன்



வரைந்ததை அனுப்பி வையுங்கள்
தரம் கண்டு பிரசுரிப்போம்

வரையுங்கள் கார்ட்டூன்
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## யாழ். பஸ் நிலையம் முன்பாக ஆசிரியர்கள் இன்று போராட்டம்

### தமது 15 கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு

யாழ்ப்பாணம், ஒக் 6

தாம் முன்வைத்த 15 கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி ஆசிரியர் தினமான இன்று யாழ்.நகரில் மதியம் 2 மணிக்கு ஆசிரியர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர். அனைத்து ஆசிரியர்களையும் அந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"1994 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆசிரியர் சேவையின் சிறப்புகளை நாம் எமது செயலற்ற இயல்பால் இழந்து

26 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச நிபுணர் குழுவை புறக்கணிக்கும் வகையில் செயற்படுகிறது உள்நாட்டு குழு

### பொருத்தமான ஆலோசனை மட்டுமே பெறப்படும் எனக் கூறுகிறது

கொழும்பு, ஒக்.6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர் குழுவில் இடம்பெற்றுள்ளவர்களின் ஆலோசனைகள் பொருத்தமானதாகவும், பயனுள்ளதாகவும் காணப்பட்டால் மாத்திரமே அவற்றை பரிசீலிப்போம் என்று தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ் வெல் பரணகம.

ஜனாதிபதி ஆணைக்குழு தனது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் செவிமடுக்கா விட்டால் அதனுடன் தொடர்ந்து

26 ஆம் பக்கம் பார்க்க

# மஹிந்த வென்றுவிடுவார் என்ற அச்சத்திலுள்ளன எதிர்க்கட்சிகள்

## இப்படிக் கூறுகின்றார் விமல் வீரவன்ஸ




கொழும்பு, ஒக்.6
நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ளவே சிலர் சட்டச் சிக்கல்கள் தொடர்பான வாதங்களை முன்வைத்து வருகின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வென்றுவிடுவார் என்ற அச்சத்தில் எதிர்க்கட்சிகள் உள்ளன. - இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

கொழும்பு வாழைத்தோட்டம் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு இன்னும் 30 ஆண்டுகளுக்கு ஆட்சிக்கு வரப்போவதில்லை. தேர்தல் வருவதற்கு முன்னரே எதிர்க்கட்சியினர் அச்சமடைந்துள்ளனர். அதனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது என்ற சட்ட வாதங்களை முன்வைத்து வருகின்றனர். அவர், போட்டியிட்டால் அது சட்டவிரோதம் என்று கூறுகின்றனர்.

இவர்கள் அச்சம் காரணமாகவே சட்ட வாதங்களை முன்வைத்து இவ்வாறு தெரிவித்து வருகின்றனர். மூன்றாவது முறையாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவார் என்பது அவர்களுக்கு தெரியும். நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ளவே இவர்கள் இந்த சட்ட சிக்கல் பற்றி பேசி வருகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# மூடப்பட்டது சப்ரகமுவ பல்கலைக் கழகம்



கொழும்பு, ஒக்.6
சப்ரகமுவ பல்கலைக்கழகம் திறக்கும் திகதி அறிவிக்கப்படாமல் மூடப்படுவதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த பல்கலைக்கழகத்தின் மாணவிகள் சிலர் அங்குள்ள மாணவர்களின் விடுதிக்குள் பலவந்தமாக நுழைந்ததன் காரணமாகவே அதனை மூட தீர்மானித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பெண்கள் விடுதியை திறந்து வைப்பதற்காக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று அங்கு சென்றபோது பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது. (ற)

(தொடர்புடைய செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## மன்னார் நீதிமன்ற இன்றைய வழக்குகள் பிற்போடப்பட்டன



மன்னார், ஒக்.6
மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் இன்றைய அனைத்து வழக்கு விசாரணைகளும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளபப்படும் என்று மன்னார் நீதிவான் அறிவித்துள்ளார்.

இன்று பொது விடுமுறை என்ற காரணத்தால் வழக்குகள் பிற்போடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அண்மையில் நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் - முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ அங்கு நடைபெற்ற உலக ஆட்டிசம் கவனிப்பு நிகழ்வில் கலந்து கொண்டார்.

# கல்விக்கு தடை ஏற்படுத்தும் மாணவர்கள் நிறுத்தப்படுவர்

## எச்சரிக்கை விடுக்கின்றார் உயர் கல்வி அமைச்சர் திஸாநாயக்க




கொழும்பு, ஒக்.6
பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்தும் மாணவர்கள் நீக்கப்படுவார்கள் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழங்களில் உள்ள சில மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முயற்சித்து வருகின்றனர் என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியை நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# மேற்கு நாடுகளில் வாழ்கின்ற சிங்களவருக்கு வரிச்சலுகை

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.6
மேற்கு நாடுகளில் வாழும் இலங்கை அரசுக்கு ஆதரவான சிங்களவர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். இத்தாலிக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுமுன்தினம் மிலானோ நகரில் வாழும் சிங்களவர்களைச் சந்தித்திருந்தார். அந்தச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் கடந்த வருடம் ஜெனீவாவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் இத்தாலி சிங்களவர்கள் பேரணியாகச் சென்று ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவளித்திருந்தனர். இந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்த ஜனாதிபதி இத்தாலியில் வாழும் சிங்கள மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன் அரசுக்கு ஆதரவான வகையில் செயற்படும், விடுதலைப் புலி அமைப்புகளை எதிர்த்துச் செயற்படும் மேற்கத்தேய நாடுகளில் வாழும் சிங்களவர்களுக்கு வரிச்சலுகைகள் அளிக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். முதல்கட்டமாக இவர்களுக்கு தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இத்தாலியில் வாழும் சிங்களவர்களின் நலன் கருதி மக்கள் வங்கியின் கிளையொன்றும் அங்கு திறக்கப்படும் என்றும் ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# கந்தளாயில் ஐஸ்கட்டி மழை



திருகோணமலை - கந்தளாய் நகரில்நேற்றுமுன்தினம்மாலை திடீரென ஐஸ் மழை பெய்துள்ளது. மாலை 5 மணி அளவில் சுமார் 10 நிமிடங்களுக்கு இடைவிடாது ஐஸ் மழை பெய்தது என்றும், பின்னர் இரவு வரை கன மழை பெய்தது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

## விபத்துகள்

தென்மராட்சி

### பனையில் இருந்து விழுந்து காயம்

பனை மரத்தில் இருந்து தவறி விழுந்ததில் ஒருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மந்துவில் கிழக்கில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சசிதரன் (வயது-33) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குமாற்றப்பட்டார்.(ற-9)

# ஊவா மாகாண சபையில் அரசுக்குத் தலையிடி

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கொடுக்கும் நெருக்குதலால்

கொழும்பு, ஒக்.6
ஊவா மாகாண சபையில் இரண்டு அமைச்சு பதவிகளை தங்களுக்கு வழங்க வேண்டுமென்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கோரிக்கையால் அரசு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

நடந்து முடிந்த மாகாண சபையில் இ.தொ.காவின் இரண்டு அங்கத்தவர்களுடன் போனஸ் ஆசனமும் வழங்கப்பட்டுவிட்ட தால் இப்போது அதன் பலம் மூன்றாக உயர்ந்துள்ளது. அதன் அடிப்படையில் தற்போது இ.தொ.கா. தமக்கு இரண்டு அமைச்சுக்கள் வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்துள்ளது.

தற்பொழுது இ.தொ.காவின் ஆதரவு இன்றி அரசால் மாகாண சபையை நடத்திச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அவசியம் இ.தொ.காவின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ள அரசு, இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? என்ற வினா தற்பொழுது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இ.தொ.கா அரசுடன் தொடர்ந்து இருக்குமா அல்லது இதன் மூலம் வெளியேறுமா? என அரசியல் வட்டாரங்கள் சந்தேகம் எழுப்பியுள்ளன.

இந்த நிலையில் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் பேச்சு நடத்த தயாராகி வருவதால் இவர்களுக்கிடையில் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டால் கிழக்கு மாகாண சபையையும் அரசு இழக்கும் சூழ்நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

பக்கங்கள்: இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 20 திங்கள் (06.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 314

# ஜனாதிபதி தேர்தலை குறிவைத்து நல்லிணக்க முயற்சியில் மஹிந்த

கொழும்பு, ஒக்ரோபர் 6

**ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து இன நல்லிணக்க முனைப்புகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார் என்று ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

இனங்களுக்கிடையில் குரோத உணர்வுகளைத் தவிர்த்து நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் வகையில் நட வடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தர விட்டுள் ளார். இன நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அரசியல் ரீதியான துணைக்குழுவுக்கு ஜனாதிபதியும், நிர்வாக ரீதியான அதிகாரிகள் குழு வுக்கு ஜனாதிபதிச் செயலாளர் லலித் வீரதுங்கவும் தலைமை தாங்கவுள்ளனர். சமூக ஒருமைப்பாடு. சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயன்முறை சுலபமானதல்ல எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ற-சி)

## ஐ.தே.க ஏற்றியுள்ளது எச்சரிக்கை விளக்கு

### அரசுக்கு கூறுகின்றார் தயா கமகே எம்.பி.



கொழும்பு, ஒக்.6

ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எச்சரிக்கை விளக்கை ஏற்றியிருக்கின்றது என்று அந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாவலப்பிட்டி தொகுதி கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அரசுக்குள் இருப்பது போல் பொது மக்களின் சொத்துக்களை கொள்ளையிடும் நபர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் இடமில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பச்சை விளக்கை ஏற்றி விட்டு, அரசுக்கு எச்சரிக்கை விளக்கை ஏற்றியுள்ளோம். இதனடிப்படையில் எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கட்டாயம் வெற்றிபெறும்.

அரச பலத்தை பயன்படுத்தியே அரசு ஊவா மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரித்தான கட்சியல்ல. சகல மதங்கள் மற்றும் இனங்களுக்கு உரிய கட்சி. இதனால், எதிர்காலத்தில் நடக்கும் தேர்தலில் கிழக்கில் இரண்டு லட்சம் முஸ்லிம்களின் வாக்குகளையும் வடக்கில் 4 லட்சம் தமிழர்களின் வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி பெறும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## றோலர் மீன்பிடியை அனுமதிக்க கோரி உணவு தவிர்ப்பு

கரணவாய், ஒக்.6

வல்வெட்டித்துறை கிழக்கு மீனவர்கள் றோலர் மீன்பிடியை அனுமதிக்கக் கோரி இன்று வல்வெட்டித்துறை தேவடி கடற்கரைப் பகுதியில் ஒருநாள் அடையாள உணவு தவிர்ப்பில் ஈடுபடவுள்ளனர்.

வல்வெட்டித்துறை கிழக்கு மீனவர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது. றோலர் மீன்பிடியை தடை செய்துள்ளதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே அதை அனுமதிக்குமாறு கோரியும் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-108)

## துன்னாலையில் தொடர் வாள்வெட்டு வாள்கள், கோடரியுடன் 6 பேர் கைது

### பலர் காயம்: இராணுவமும் குவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

வடமராட்சி துன்னாலையில் கடந்தவாரம் இடம்பெற்ற முரண்பாட்டின் தொடர்ச்சியாக நேற்றும் வாள், கோடரி வெட்டுகளுக்கு இலக்காகி 7 பேருக்கும்மேல் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், கோடரி, வாள் மற்றும் போத்தல்களுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அங்குள்ள கோயில் ஒன்றில் கடந்த புதன்கிழமை பூசை தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு தரப்பினருக்கு இடையே இந்தத் தகராறு ஏற்பட்டுள்ளது. அதனால் அன்று இடம்பெற்ற வாள்வெட்டில் 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினமும் வாள் வெட்டு மற்றும் கோடரி வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. அதனால் 7 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்

(26 ஆம் பக்கம் பார்க்க)

## அளுத்கம சம்பவம் குறித்து மஹிந்தவிடம் மூன் கேள்வி

கொழும்பு, ஒக்.6

பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவிடம் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் நியூயோர்க்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பான் கீ-மூனைச் சந்தித்திருந்தார்.

இதன்போது சமய முரண்பாடுகள் - வன்முறைகள் குறிப்பாக, அளுத்கமசம்பவம்குறித்து பான் கீ-மூன் ஜனாதி பதியிடம் வினவியதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பொறுமையுடனும் விசுவாசத்துட னும் இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் அமைப்புடன் ஒத்துழைக்கவேண்டுமென பான் கீ-மூன், ஜனாதிபதி மஹிந்தவிடம் கோரியதாக பான் கீ-மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனக் கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஓர் பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை

(26 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 06

சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், சிறுவர்களின் கௌரவிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு, மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோகேந்திரன் கோமநளினி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினரான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.

(26 ஆம் பக்கம் பார்க்க)

## 2015 இல் ஜனாதிபதித் தேர்தல் கம்யுனிஸ்ட் கட்சி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.6

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறுவதை கம்யுனிஸ்ட் கட்சி ஆதரிக்கவில்லை என்று அதன் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இடதுசாரி தலைவர்களான வாசுதேவ நாணயக்காரடியுகுண சேகர திஸ்ஸ விதாரண மூவரும் கூட்டாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஜனாதிபதி தேர்தலை பிற்போடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் இந்த சந்திப்பின்போது இவர்கள் அரசியலமைப்பில் மாற்றத்தை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியை கேட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலை யிலேயே இந்த கருத்து வெளியாகியுள்ளது.

ஜனாதிபதிதேர்தலுக்கு முன்னதாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பல உள்ளன, ஜனாதிபதிக்கும் அவரது அரசாங்கத்திற்கும் 2016 வரை தொடர்வதற்கான மக்கள் ஆணையுள்ளது. நாடாளுமன்றத்துக்கும் அதற்கான பெரும்பான்மையுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அரசமைப்பு சீர்திருத்தம், தேர்தல்நடைமுறையில் மாற்றங்களை செய்தல், பொருளாதாரத்தை பலப்படுத்துதல்போன்றவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இவற்றிற்கு தீர்வுகாணப்பட்ட பின்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டும் என்பதே எமது கட்சியின் கருத்து என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ற-சி)

## பொதுபலசேனாவை பயன்படுத்தி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இலங்கைக்குள் ஊடுருவலாம்

### இந்திய அமைப்பொன்று எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.6

பொதுபலசேனாவுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான பகைமை உணர்வை ஐ.எஸ். ஐ.எஸ் போன்ற இஸ்லாமிய அமைப்புகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க கூடாது. இது குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியை சேர்ந்த 'செக்கியுரிட்டி ரிஸ்க் ஏசியா ' என்ற அமைப்பை சேர்ந்த பிரிகேடியர் பொன்ஸ்லே இதனை தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனாவுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பகைமை உணர்வை பயன்படுத்தி இஸ்லாமிய இளைஞர்கள் தீவிரவாத மயப்படுத்தப் படுவதை தடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இதனை தடுக்காவிட்டால் அது, ஐ.எஸ்.ஐ.எஸ் இலங்கைக்குள் ஊருடுவ வழிவகுக்கும்.

பொதுபலசேனாவிற்கும்- முஸ்லிம் சமூகத்திற்குமிடையிலான இடைவெளி ஆபத்தானதாக மாறுகின்றது.

இந்த இடைவெளி அதிகரித்தால், முஸ்லிம் இளைஞர்களை தீவிரவாத மயப்படுத்துவதற்கான கருவியாக அமையலாம். தற்போது அந்த நிலை இல்லாவிட்டாலும், இது குறித்து எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பிற்கும் இது சாதகமாக அமையலாம், இதனையும் தவிர்க்க வேண்டும். இதுவரை இலங்கையிலிருந்து எவரும் ஐ.எஸ்.ஐ.எஸ் உடன் இணைய வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ற)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை **திருமதி**
**அ.கில்பரூபன்** அவர்களின் தாய்
திருமதி சிசிலியம்மா
செபஸ்ரியாம்பிள்ளை
இறைபதம் அடைந்துள்ளார். அவரின் பிரிவால் துயருறும் அவர்களின்
குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/நெடுந்தீவு றோ.க.மகளிர்கல்லூரி**
**நெடுந்தீவு.**

(52809)
(45.6.3)

## ஆசிரியர் தின விழா

கரணவாய், ஒக்.6

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு வித் தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலயத்தின் மாணவ முதல்வன் செல்வன் கெ.கென்சன் தலைமையில் இடம்பெறும் இந்த ஆசிரிய தின விழாவில் ஆசிரியர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (வ-108)

## 'மொட்டுக்களின் மொழிக்கு ஆக்கங்களை அனுப்பலாம்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தால் 'மொட்டுக்களின் மொழி' என்ற சிறுவர் பத்திரிகை வெளியிடப்படவுள்ளது.

பொது நூலகத்தின் சிறுவர் வட்டத்தின் சிறப்பு வாசிப்புத் திட்டமாக இந்த பத்திரிகை வெளியீடு செய்யப்படவுள்ளது. தரம் 8 இற்கு உட்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக தமது ஆக்கங்களை நூலகத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

அத்துடன் சிறுவர் பகுதிக்கான வாசகர்களை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் பிரதி வெள் ளிக்கிழமை தோறும் சிறுவர்களுக்கான கதை நேரம், படக்காட்சி, நூல் பகிர்வு, போட்டிகள் கலந்துரையாடல் என்பன நடை பெற்று வருகின்றன. வாசிப்பு மாதத்தில் உள்ளூர் எழுத்தாளர்களால் வழங்கப்படும் நூல்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (வ-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சிவஸ்ரீ
**க.மகா கணபதீஸ்வரக்குருக்கள்**

தோற்றம் 26.12.1948 மறைவு 16.10.2013

திதி:
புரட்டாதி மாத பூர்வபக்க திரயோதசி

அன்பு அப்பாவே!
பக்கம் சென்று திரும்புவீர்கள் என
பாதை பார்த்திருந்தோம்
பரமன் உமை அழைத்ததை
உணர மனம் முடியவில்லை
ஓராண்டு ஓடியதோ நீர் வராமல்
நித்தம் உள்ளம் உருகுகின்றோம்
உமைக்காண எண்ணும் பொழுதெல்லாம் ஏங்கித் தவிக்கும்
உங்கள் மனைவி பிள்ளைகளுக்கு மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
வருவீர்களோ அப்பா...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

இல.18, துரைராஜாவீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5851

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம்

தென்மராட்சி, ஒக.6

சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலக அபிவிருத்தி ஆலோசனை கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும். நூலகத்தில் நடை பெற்றுவரும் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளதால் அனைவரும் கலந்து கொண்டு நூலக வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

## ஈர விழிகளுடன் ஈராண்டு

**ஜெயக்குமார் கீர்த்திகன்**



பிறப்பு 16.06.1995

இறப்பு 06.10.2012

பார் போற்றும் உத்தமனாய்
பாரினிலே நீ பல ஆண்டுகள் வாழ்வாய் என
பாவிகள் நாம் நினைத்திருந்தோம்
காலனவன் சதி வலையில்
கால் தடக்கி ஏன் வீழ்ந்தாய்....
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறிடுமோ எம் துயரம்
நீங்காது உன் நினைவுகள்
என்றும் நீ வாழ்கின்றாய்
எம் உள்ளமதில்

என்றும் உன் நினைவுகளுடன்
சண்முகராசாப் பெரியப்பா குடும்பம்,
ராம் பெரியப்பா குடும்பம்,
கௌசலாக்கா குடும்பம்.
ஏழாலை.

(52849ஐ45.6.3)

## இரண்டாம் ஆண்டு நினைவில்....



**ஜெயக்குமார் கீர்த்திகன்**

(2014 கலைப்பிரிவு மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி)

பிறப்பு 16.06.1995 இறப்பு 06.10.2012

திதி: 14.10.2014

**நெஞ்சிருக்கும் வரை சோகம்**
**எமை வாட்டிடுமே....**

ஒன்றாகி இனிதாய்
கூடிக்குலாவி மூத்தவன் நீ என்று
அரவணைத்தே இன்புற வாழ்ந்திருந்தோம்
கல்வியிலே சிறந்தவனாய்
கலைத்துறையில் உயர் தரத்தில் புகுந்தாய்
உன் எதிர்காலம் சிறக்குமென்று
கனவு பல கண்டிருந்தோம்
துடுப்பாட்ட கூடைப் பந்தாட்ட வீரனாய்
இலங்கை எங்கும் களமிறங்கி
சாதனைகள் படைத்தாய்
கண்டு நாம் மகிழ்ந்திருந்தோம்
சிறுவனாய் இருந்த போதும்
பிறந்த மண்ணாம் அளவெட்டி தனை
நேசித்த பண்புகண்டு பெருமைகொண்டோம்
அளவறியாக் கற்பனையில் மிதந்தவேளை
கொடிய காலன் உனை சடுதியாய்
கவர்ந்ததனால்
கலங்கி நாம் கதறுகின்றோம்
உன் நினைவுகள் அழியாது
இறைவா உன்னை ஒன்று கேட்போம்
பண்பான எம் குலக்கொழுந்தை
உன் பாதமதில் ஏற்றுவிடு - இல்லையெனில்
மீண்டும் எம் இல்லத்திற்கே குழந்தையாய்த் தந்து விடு



உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி
**குடும்பத்தினர்.**
சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

## இரண்டாம் ஆண்டு நினைவுதினம்

திருமதி
**பூபாலசிங்கம் இராசாம்பாள்**



தோற்றம் 15.09.1935
மறைவு 27.09.2012

திதி: திரயோதசி

ஆண்டிரண்டுகள் ஆகிவிட்டாலும்
ஆறிடுமோ எம் துயரங்கள்
பாரினில் எம்மை ஒளி வீசச் செய்தீர்கள்
என்றென்றும் உங்கள் நினைவில்
எம் நினைவு நிலைத்திருக்கும்

11, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(52875ஐ45.6.3)

குடும்பத்தினர்.

## 17 ஆம் ஆண்டில் எங்கள் அம்மாவின் நினைவலைகள்...



சுதுமலையைப் பிறப்பிடமாகவும்
நவாலி கிழக்கை
வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி **நாகலிங்கம் கண்மணி**
திதி: 06.10.2014

மண்ணில் 23.03.1923
விண்ணில் 27.10.1997

தந்தையினை நாமிழந்து தவித்தவேளை - எமை
எந்தவித தளர்வுமின்றித் தாங்கிநின்று
சிந்தையினால் உறுதியொடு சீராய் வாழ
சிறந்த கல்வி பெறவைத்துச் சிறப்புங்கண்டு
வந்த வினைவழியாலே அணைந்த எங்கள்
அன்னையென நாம்பெற என்னதவம் செய்தோம் அம்மா!
எந்தையிறை தாளின் கீழ் இருந்தவாறு
எம் தாயே நீ பெறுவாய் என்றும் சாந்தி!

பிரிவால் துயருறும்
நா.தெட்சணாமூர்த்தி,
திரு.திருமதி தர்மரத்தினம் தவமலர்,
திருமதி சிவயோகம் புவனேந்திரராசா,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

145/3, பிரப்பங்குளம் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 8169

(52916ஐ45.6.3)

# தென்மராட்சி கல்வி வலய மாணவருக்கு கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக்.6
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் வலய ஆரம்பப் பிரிவினரால் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் அன்றைய தினத்தில் வலய ஆரம்பப் பிரிவின் 'விழுமியக் கல்வி' நூல் வெளியீடும் இடம்பெறும்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன், மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், 'வேள்ட் விஷன்' நிறுவன வலய முகாமையாளர் ஜே.ஏ.ரமேஸ்குமார் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

நிகழ்வில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி சிறி பாலகிருஷ்ணன் வனோஜா உட்பட வெட்டுப் புள்ளிக்கு மேல்பெற்ற 130 மாணவர்களுக்கு விருது வழங்கியும் பரீட்சையில் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற 834 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்குவதுடன் குறித்த மாணவர்களுக்கு கல்வி புகட்டிய 30 பாடசாலைகளின் ஆசிரியர்கள் கௌரவிப்பும் இடம்பெறும். அதனை அடுத்து 'விழுமியக் கல்வி' நூலான மாகாணக் கல்வி அமைச்சர் வெளியிட்டு வைப்பார். நூலின் வெளியீட்டுரையை ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும் ஆய்வுரையை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்துவார்கள். (வ-9)

## 'நாம் தப்பிக்கலாம்' நூல் வெளியீடு

சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான மலர் சின்னையா எழுதிய 'நாம் தப்பிக்கலாம்' என்னும் விழிப்புணர்வு நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் தெனியான் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார்.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைப்பார்.

வெளியீட்டுரையை சித்த மருத்துவரும் உளவளத் துணையாளருமான க.வி.கந்தவேளும், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் மா.சின்னத்தம்பியும், மதிப்பீட்டுரையை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மாவட்ட உளவள சமூக உத்தியோகத்தர் கு.கௌதமனும் நிகழ்த்துவர். (வ-135)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினத்தினமான இன்று 06.10.2014 BMICHமண்டபத்தில் 'பிரதீபா பிரபா' நல்லாசிரியர் விருதினைப் பெறும் எமது பாடசாலை ஆசிரியர்
எதிர்வீரசிங்கம் செல்வகுமாரன்
(BA. Dip.in Edu- வரலாறு பாட ஆசிரியர்)
அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்வடையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Congratulation
(52317)(3.6.3)
பாடசாலைச் சமூகம்
யா/ குளமங்கால் றோ.க.வித்தியாலயம், மல்லாகம்.

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியை
செல்வி கீதாஞ்சலி பாலசுப்ரமணியம்
(Dip.in Teaching)
அவர்கள் 06.10.2014 இன்று தேசிய கல்வி நிறுவகத்தில் பிரதமர் டி.எம்.ஜயரத்தின தலைமையில் நடைபெறும் ஆசிரியர் தின விருது வழங்கும் நிகழ்வில் நல்லாசிரியருக்கான 'பிரதீபா பிரபா' விருதினைப் பெறுவதையிட்டு மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes
கல்லூரிச் சமூகம்
(52298)(5.6.3)
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

பாராட்டி வாழ்த்துகின்றோம்
இன்று தேசிய கல்வி நிறுவகம் மகரகமவில் சிறந்த ஆசிரியருக்கான விருது வழங்கும் விழாவில் வவுனியா CCTMS பாடசாலை ஆசிரியை
திருமதி சாந்தினி ஜெயசீலன்
அவர்கள் பிரதீபா பிரபா விருதினைப் பெறுவதனையிட்டு வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்

Congratulation
வாழ்த்துவோர்: ஜெயசீலன் (கணவர்)
தீபிகா (மகள்)
(52932)(3.6.4)

A/L 2014 ALUMNI வழங்கும் புலமைப்பரிசில் 2015
St John's College - Jaffna

* நடைபெற்று முடிந்த 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிசிறந்த புள்ளிகளைப்பெற்ற மாணவனுக்கு தரம் 6 முதல் A/L வரை தனது கல்வியை St John's College - Jaffna இல் இலவசமாக பயில்வதற்கான A/L 2004 ALUMNI வழங்கும் புலமைப்பரிசில்.
* இந்தப் புலமைப்பரிசிலைப் பெற விரும்பும் மாணவனின் பெற்றோர் மாணவன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றபுள்ளி ஆகிய விவரங்களை பதிவுத்தபாலில் அல்லது நேரில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
* விண்ணப்பிக்கும் மாணவர்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்ற மாணவன் தெரிவுசெய்யப்படுவார்.
* மேலும் புலமைப்பரிசிலைப் பெறவிரும்பும் மாணவன் St John's College நடத்தும் தெரிவு பரீட்சையில் சித்தியடைதல் அவசியமாகும்.

அனுமதிப்பரீட்சை 11.10.2014 அன்று நடைபெறும்.
விண்ணப்ப முடிவு திகதி: 10.10.2014

A/L 2014 ALUMNI FUND
ST JOHN'S COLLEGE - JAFFNA

மேலதிக விபரங்களுக்கு 077 656 9601 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
(சி.16777) (45.6.3)

## தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக்.6
உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி விநாயகர் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளை அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் "வேள்ட்விஷன்" நிறுவன திட்ட முகாமையாளர் ஏ.ஜீ.றொனசரோவும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன், வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) திருமதி சிவநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்பள்ளி கல்விப் பணியில் 25 வருட சேவையை நிறைவு செய்த 10 முன்பள்ளி ஆசிரியைகள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (வ-9)

## சப்பறத் திருவிழா

வவுனியா, ஒக்.6
வவுனியா கோவில்குளம் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீமகா விஷ்ணு ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 29 ஆம் திகதி விழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும், நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல்10 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆஞ்சநேய திரு விழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (வ-421)

## சிறுவர் மண்டபம் நெடுந்தீவில் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6
நெடுந்தீவு மணல் கிணற்றடியில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர்களுக்கான மண்டபம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எஸ்.பி.அருளப்பு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். நெல்சிப் திட்டத்தின் கீழ் ரூபா ஒரு கோடி 90 லட்சம் செலவில் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. (வ-7)

## சிறுவர், சுற்றாடல் தின நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக்.6
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை சிறுவர் தின விழாவும் சுற்றாடல் தினமும் இடம்பெற்றன.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். மாவட்ட சிரேஷ்ட அலுவலர் ம.ஜீவபாபுவும் கலந்து கொண்டனர்.

வித்தியாலயத்தில் உள்ள சிறுவர் சுற்றாடல் கழகத்தின் 27 மாணவர்களுக்கு செயற்பாடுகளை மேற்கொண்டமைக்கான பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (வ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்
திருமதி வ.சோமசுந்தரம்
(SLTS-1) அவர்கள்
2014.10.06 இன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் குரு பிரதீபா பிரபா விருது பெற்றமையை யிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulation
(சி/16779)(3.6.4)
பாடசாலைச் சமூகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

பாராட்டி வாழ்த்துகின்றோம்


Congratulation
எமது கல்லூரி ஆசிரியர்
மகாதேவன் முகுந்தன்
அவர்கள் 06.10.2014 இன்று கௌரவ பிரதமர் ஜயரத்ன அவர்களின் தலைமையில் ஆசிரியர் பிரதீபா பிரபா விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
அவரை உளமார வாழ்த்துகின்றோம்.
[52912][3.6.4] அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய்.

மகிழ்வுடன் பாராட்டுகின்றோம்
பிரதீபா பிரபா ஜனாதிபதி விருதைப் பெற்ற எம் ஆசான்
நாராயணபிள்ளை திருக்குமரன்
(B.Sc., Dip in Ed.)
அகிலத்தில் அறிவொளி பரப்பும்
ஆசிரிய சேவைக்கு 1989 தனில்
அர்ப்பணித்தீர் உம்மை
அயராத உழைப்பினால்
யூபிலி நிறைவும் கண்டீர்
கற்றல் கற்பித்தல்
மேன்மையுடன் துலங்கி
கற்றலில் கசந்திடும் கணிதத்தை
கற்பவர் மனதில் இனிதான
கரும்பாக்கினீர்
காலத்தால் செய்திட்ட சேவைக்கு
கண்டிட்டீர் பிரதிபா பிரபா விருதினை
வாழ்க ஆசிரிய சேவை
வளர்க நின் பணிகள்.

Best Wishes
Congratulation
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினர்
52867 5.6.3
யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.09.2014 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இராசரத்தினம் கணேசலிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (06.10.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரந்தன், நீர்வேலி. (C\16781) இங்ஙனம் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்


### திருமதி ஞானேஸ்வரி குலேந்திரன்



இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் பின்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி குலேந்திரன்(04.10.2014) சனிக்கிழமை பின்லாந்தில் காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இணுவில் தெற்கு, இணுவில். தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### முத்துக்குமாரு சிவகுமாரன்

(பகவான் மருந்தகம்-உரிமையாளர்)

புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 176/1, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சிவகுமாரன் நேற்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் முத்துக்குமாரு மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் புத்திரனும், சகுந்தலாதேவியின் அன்புக்கணவரும், லகுசியாமா, ஓம்பிரகாஷ், ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன், கமலதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு.திருமதி சிவலிங்கம், திரு.திருமதி பாலசிங்கம் ஆகியோரின் சம்பந்தியும், தர்மகுமாரி, ரதிகுமாரி, செல்வகுமாரி, புஸ்பகுமாரி, யசோகுமார், விஜயகுமார், காலஞ்சென்ற ஸ்ரீகுமார் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மனல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

176/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 7840 (52930) (4.6.3)

தகவல்: குடும்பத்தினர். (பகவான் மருந்தகம்)

## ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தி



இன்றைய தினம் தியாகத் திருநாளை கொண்டாடுகின்ற அனைவருக்கும் வடக்கு மாகாண சபை சார்பாக ஈதுல் அழ்ஹா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தியாகச் செம்மல் நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் தியாகங்களை குறித்து நிற்கின்ற இத்திருநாளில் நபி இப்ராஹிம் அவர்களின் வாழ்க்கையில் இருந்த பல்வேறு முன்மாதிரிகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

உலகில் தோன்றிய மிகப் பெரிய மூன்று வேதங்களின் தலைவராக நபி இப்ராஹிம் அவர்கள் இருக்கிறார்கள்.

இஸ்லாமிய சமூகம், கிறிஸ்தவ சமூகம், யூத சமூகம் என அனைவரும் நபி இப் ராஹிம் அவர்களின் வாழ்வோடு தொடர்பு பட்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் இது ஒரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பெருநாளாகவும் அமைந்திருக்கின்றது. உலக முஸ்லிம்கள் அனைவரும் மக்காவில் ஒன்றுகூடி எவ்வித வேறுபாடுகளும் இன்றி நாம் அல்ஹாவின் அடிமைகள் என்பது நிரூபணம் செய்கின்ற ஹஜ் கட மையை நிறைவு செய்திருக்கின்றார்கள்.

இதனையிட்டு மகிழ்வுறும் ஏனைய முஸ்லிம்களும் இன்று பெருநாளை கொண்டாடி அவர்களுடைய மகிழ்ச்சியில் பங்கேற்றுக் கொள்கின்றார்கள். இந்த வகையில் நாமும் அந்த மகிழ்வோடு எம்மை இணைத்துக் கொள்வோம்.

வடமாகாண சபை உறுப்பினர்
அஸ்மின் அய்யூப்



அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கு அல்ஹம்து லில்லாஹ் "ஒற்றுமை என்ற கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள் என்றும் நீங்கள் வழி தவற மாட்டீர்கள் என்றும் உங்களுக்காக குர்ஆனையும் ஹதீஸை யும் விட்டுச் செல்கின் றேன். அதன் வழிவாழுங்கள் மேன்மையடைவீர்கள்" என்றும்-எம் பெருமானார் ரசூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இறுதி ஹஜ்ஜின் உபதேசமாக எடுத்துரைத்த ஏகத்துவத்தை ஏந்தி வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு எதிர்நோக்கி வந்துள்ள இன்றைய ஹஜ்ஜுப் பெரு நாள் பல தியாகங்களையும் புனிதச் செயல்களையும் முற்படுத்தி எம்மையடைந்துள் ளது.

இந்த நல்ல "நாளாம் ஈதுல் அழ்ஹா இனிய ஹஜ்ஜுப் பெருநாளை அனைத்து முஸ்லிம் களும் சந்தோஷத்துடனும் சௌபாக்கியத்துடனும் கொண்டாடி மகிழ வாழ்த்துகின்றேன் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரியப் பிரார்த்திக்கின்றேன்!

யாழ். கிளி.மாவட்ட உலமா சபை
தலைவர் அல்ஹாஜ் மௌலவி
ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி)

## வடிகாலமைப்புப் பணிகளை தாமதப்படுத்தும் மிதிவெடிகள்

### நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரிடம் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்

கிளிநொச்சி, ஒக்.6

கிளிநொச்சி மாவட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, மிதிவெடிகள் பெரும் தடையாக உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் - தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த வெள்ளிக் கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் கலந்துகொண்டிருந்தபோதே, அதிகாரிகளால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"நீர் வழங்கல் நடவடிக்கைக்காக குழாய்கள் பொருத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது, சில இடங்களில் மிதிவெடிகள் காணப்பட்டன. அதன் காரணமாக வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுக்க முடியவில்லை. மிதிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டாலேயே வேலைத்திட்டங்களை வேகமான முன்னெடுக்க முடியும்."- என்று அந்த நிகழ்வில் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், அக்கராயன் பகுதியில் குடிதண்ணீர் வழங்கலுக்கான வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன என்றும்- இணைப்பு வேலைகள் நிறைவுற்றதும் அந்தப் பகுதிக்கான குடிதண்ணீர் வழங்கல் மேற்கொள்ளப்படும் என்றும் அதிகாரிகளால் அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது. (ந-18)

## பிற்போடப்பட்டன இன்றைய வழக்குகள்

கிளிநொச்சி, ஒக்.6

இன்று திங்கட்கிழமை பொது விடுமுறை தினம் என்பதால் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த வழக்குகள் அனைத்தும் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ந-18)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 09.04.1952
உதிர்வு 18.09.2013

**அமரர் திருமதி சோதிராணி நவரத்தினம்**

ஆண் டொன்று ஆனதம்மா உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
இன்முகம் காட்டி உற்றாரை யணைத்து
ஊர் நிகழ்வுகளில் இன்றும்
உரு மாறா உங்கள் நினைவுகள்
சிந்தையில் நிற்குது பெரியம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறை
வனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய். (52929) நா. கணேசராஜா குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

08.09.2014 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் முருகேசு சபாம்பிள்ளை**



பிறப்பு 10★11★1942

இறப்பு 08★09★2014

(C\16780(7.6.3))

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.10.2014) திங்கட் கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (08.10.2014) புதன் கிழமை மு.ப. 10.30 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அன்றைய தினம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும். மேலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும் பதவையான பண உதவிகள், உதவிகள் புரிந்தும் இறுதிக்கிரியை களில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சீரனிச் சந்தி, சண்டிலிப்பாய். குடும்பத்தினர்.

## மேலும் ஒரு பணயக் கைதி தலை துண்டிப்பு

பிரிட்டன், ஒக்.6
பிரிட்டனின் பணயக் கைதி எலன் ஹென்னிங் தலையை துண்டித்து கொலை செய்த ஐ.எஸ். போராளிகள் காணொலியை வெளியிட்டுள்ளனர்.
ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளை எதிர்த்து அமெரிக்கா மாத்திரம் வான்தாக்குதல்களை நடத்தி வந்தது. ஐ.எஸ். போராளிகளுக்கு எதிரான தனது போரில் உலக நாடுகள் ஒன்று திரண்டு கை கொடுக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அழைப்பு விடுத்தார். அதனையடுத்து, பிரான்ஸ், பிரிட்டன், டென்மார்க், ஜேர்மனி என 30 இற்கும் மேற்பட்ட உலக நாடுகள் ஐ.எஸ். போராளிகளுக்குக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டுள்ளன. சவூதி அரேபியா, ஐக்கிய அரபு குடியரசு, ஜோர்தான், பஹ்ரைன், கத்தார் ஆகிய நாடுகள் தாக்குதலில் இடம் பெற்றுள்ளன.
தொடர்ந்து ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். போராளிகளை குறிவைத்து இந்நாடுகள் தாக்குதல் நடத்திவருகின்றன. (வ)


## 10 ஆயிரம் கி.மீ பாயும் ஏவுகணையை சோதித்தது சீனா



பீஜிங், ஒக்.6
அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள நகரங்களை தாக்கி அழிக்கவல்ல, 10 ஆயிரம் கி.மீ., தூரத்தில் உள்ள இலக்கை அணு ஆயுதங்களைச் சுமந்து சென்று தாக்கும் திறனுடைய ஏவுகணை சோதனையை சீனா நடத்தி உள்ளது.
கடந்த முதலாம் திகதி சீனாவின் தேசிய தினம் கொண்டாடப்பட்டது. இந்தத் தருணத்தில் தங்களின் அணு ஆயுதத் திறனை வெளிப்படுத்தும் வகையில், 10 ஆயிரம் கி.மீ., தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்க வல்ல ஏவுகணைச் சோதனையை அந்த நாட்டு இராணுவம், கடந்த 25 ஆம் திகதி நடத்தி யுள்ளது.
ஷான்ஜி மாகாணத்தில் உள்ள தாயுவான் செயற்கைக்கோள் ஏவு தளத்தில் இருந்து 'டாங் பெங் 31பி' என்ற அந்த ஏவுகணை செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டதாக ஹொங் ஹாங்கில் இருந்து வெளிவரும் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (வ)

# குண்டு வெடிப்பில் 6 பேர் உயிரிழப்பு

### பாகிஸ்தான் குயிட்டா நகரில்



இஸ்லாமபாத், ஒக்.6
பாகிஸ்தானின் குயிட்டா நகரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மனித வெடி குண்டு தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.
குயிட்டா நகரில் உள்ள சந்தைப் பகுதியில் பண்டிகை திருநாளையொட்டி நேற்று முன்தினம் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது தற்கொலை தீவிரவாதி தான் வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்க செய்துள்ளான். மனித வெடி குண்டுத் தீவிரவாதி சந்தைப் பகுதிக்கு வந்தபோது பொலிஸார் அவனை சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தியுள்ளனர். அப்போது தீவி ரவாதி தான் வைத்திருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளான்.
இந்தச் சம்பவத்தில் பொது மக்களில் 6 பேர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளனர்.
குண்டுவெடிப்பு சத்தம் கேட்டதும் மக்கள் சிலர் தரையில் படுத்துக் கொண்டனர். குண்டு வெடிப்பில் பலர் காயம் அடைந்துள்ளனர். அதில் பலரது நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
காயம் அடைந்தவர்கள் அங்குள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
ஹசாரா டவுன் கடந்த வருடத்தில் மட்டும் இது போன்ற இரண்டுபெரிய குண்டுவெடிப்பு சம்பவங்களைக்கண்டுள்ளது.
கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட மனித குண்டு வெடிப்பில் 30 பேர் உயிரிழந்துள்ளனர். 70 பேர் காயம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மனித வெடி குண்டுத் தீவிரவாதி வெடிகுண்டுகள் நிறைந்த டாங்கியை 3 மாடி கட்டடம் மீது மோதச் செய்து வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தான். இந்த குண்டு வெடிப்பில் 84 பேர் உயிரிழந்துள்ளனர். 200 பேர் காயம் அடைந்துள்ளனர். குண்டு வெடிப்புகளுக்கு லஷ்கர்- இ-ஜாங்வி என்று தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. பலுசிஸ்தான் மாகாணத்தில் கடந்த சில வருடங்களாக ஹசாரா சமூகத்தை சேர்ந்த மக்களை குறிவைத்தே தாக்குதல் நடத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



## அடையாளம் காணப்பட்டனர் மலேசிய விமான பயணிகள்

கோலாலம்பூர், ஒக்.6
சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானத்தில் பயணம் செய்த 36 பயணிகளின் அடையாளம் காணப்பட்டதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.
கடந்த ஜூலை 17 ஆம் திகதி நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமிலிருந்து கோலாலம்பூர் நோக்கி வந்து கொண்டிருந்த போயிங் 777 விமானம் ரஷ்ய கிளர்ச்சியாளர்களால் கிழக்கு உக்ரைன் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.
அதில் பயணித்த 298 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.மேலும் இந்தச் சம்பவத்துக்கு ரஷ்ய கிளர்ச்சியாளர்கள் காரணம் என்று உறுதியாக்கப்பட்டது.
இந்தநிலையில் இந்த விபத்தில் உயிரிழந்த 298 பேரில் 36 பேர் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 8 பேர் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்கள் என்றும்-நெதர்லாந்தின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (வ)

## காணொலியில் தோன்றிய சுட்டுக் கொல்லப்பட்ட நபர்

### அதிர்ச்சியில் நைஜீரிய இராணுவம்

நைஜீரிய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட போகோ ஹரம் தீவிரவாத இயக்கத்தின் தலைவன் அபூ பெக்கர் தோன்றும் காணொலி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
கடந்த சில நாள்களுக்கு முன்னர் நைஜீரிய இராணுவத் தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போகோ ஹரம் தீவிரவாத இய்க்கத்தின் தலைவன் அபூ பெக்கர் நேற்று முன் தினம்காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.



அதில் அவன் பேசியதாவது:- நான் உயிரோடு தான் இருக்கிறேன். அல்லா எனது உயிரை எடுக்கும் வரை, நான் உயிரோடுதான் இருப்பேன். நீங்கள் என்னை கொன்றாலும், எங்கள் பகுதியில் இஸ்லாமிய சட்டம் கொண்டு வரப்படுவதை தடுத்து நிறுத்த முடியாது.
எங்கள் இஸ்லாமிய தேசத்தில் தங்கியிருந்து, குரானை போதித்து வருகிறேன் என பேசியுள்ளான். தற்போது வெளியாகியுள்ள இந்தக் காணொலி நைஜீரிய இராணுவ வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (வ)

## தீவிரவாதிகளின் இச்சைக்கு இரையாகிவரும் சிறுமிகள்



பக்தாத்.ஒக்.6
ஈராக்-சிரியாவில் கடத்தப்பட்ட சிறுமிகள் மற்றும் பெண்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொடுமைப்படுத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவதாக ஐ.நா. தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.
ஈராக் மற்றும் சிரியாவில் பல்வேறு நகரங்களைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ். ஐ.எஸ். பலரை கொன்று குவித்து வருவதுடன், இதுவரை 500க்கும் மேற்பட்ட சிறுமிகள் மற்றும் பெண்களை கடத்திச் சென்றுள்ளனர்.
இதுகுறித்து ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையகம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில்-
கடத்தப்பட்ட யாஸிதி, கிறிஸ்துவ சிறுபான்மையின பெண்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் அடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் இதில் பலர் கள்ளசந்தையில் விற்கப்பட்டு உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் இஸ்லாமிய அரசு தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட பல குற்றங்களைப் புரிவதாக ஐ.நா. மனித உரிமைகள்ஆணையாளர்ஷியத்ரா அல் ஹுசைன் குறிப்பிட்டுள்ளார். (வ)

## உகண்டா மருத்துவருக்கு எபோலாவுக்கு சிகிச்சை

பேர்ளின், ஒக்.6
ஜேர்மனியில் எபோலா நோயால் பாதிக்கப்பட்ட மருத்துவர் ஒருவர், தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.
ஜேர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் எபோலாவால் பாதிக்கப்பட்ட உகண்டாவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் அனுமதிக்கப் பட்டுள்ளார்.
சியிரா லியோன் நாட்டில் எபோலா நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளித்து வந்த அவ்ருக்கு இந்த நோய் தொற்றிக்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

## முதன்முதலாக கர்ப்பப் பை மாற்று அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை



சுவீடனில் கர்ப்பப் பை மாற்று அறுவைச் சிகிச்சை செய்த பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.
உலகில் கர்ப்பப் பை மாற்று அறுவை சிகிச்சை செய்த பெண் குழந்தை பெறுவது இதுவே முதல் முறையாகும். இதன் மூலம் உலகில் கர்ப்பப் பை பாதிப்பால் குழந்தை இல்லாமல் இருக்கும் பெண்களுக்கு இந்த நிகழ்வு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சுவீடன் கோத்தன்பர்க்கில் உள்ள, சாகிரன்ஷா நிறுவனத்தின், மகப்பேறியல் மற்றும் மகளிர் நோய் மருத்துவவியல் துறைத் தலைவர், மருத்துவர் மேட்ஸ் பிரான்ஸ்டிராம் கூறியிருப்பதாவது:
சுவீடனில் 61 வயதுடைய தனது நெருங்கிய உறவினரிடமிருந்து கர்ப்பப் பையை தானமாகப் பெற்ற அந்தப் பெண்ணின், கருமுட்டையில் இருந்து செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட கரு, குறித்த பெண்ணின் கர்ப்பப் பையில் செலுத்தப்பட்டது.
சாதாரண பெண்களை விட, கருத்தரிக்கும் வாய்ப்பு, 25 சதவீதம் மட்டும் உள்ளதால், செயற்கை முறையில், கரு உருவாக்கத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.
தொடர்ச்சியாக் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பிலும், தொடர் சிகிச்சையாலும் கரு வளர்ந்து, தற்போது சத்திரசிகிச்சை, மூலம் குழந்தை பிறந்துள்ளது.
உலகிலேயே, கர்ப்பப் பை மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின் ஒருவருக்கு குழந்தை பிறந்துள்ளது இதுவே முதல் முறையாகும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். தாயும் குழந்தையும் நலமாக உள்ளார்கள் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

# 32 உயிர்களை பறித்த தசரா விழா

பாட்னா, ஒக்.6
பீகார் மாநிலத்தில் நடைபெற்ற தசரா கொண்டாட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ளனர்.
பாட்னா காந்தி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தசரா பண்டிகை கொண்டாட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அன்றைய தினம் இரவு 7 மணியளவில் இராவண வதம் நிகழ்ச்சி முடிந்ததும், மைதானத்தை விட்டு பொது மக்கள் கூட்டம்கூட்டமாக வெளியேறினர்.
இதனால் வீதியில் பயங்கர நெரிசல் ஏற்பட்டது. நிலை தடுமாறி ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். அவர்களுக்கு பின்னால் வந்தவர்கள், கீழே விழுந்து கிடந்தவர்களை மிதித்துக் கொண்டு இடறி விழுந் தனர்.





இவ்வாறு, அடுக்கடுக்காக நூற்றுக் கணக்கானவர்கள் கீழே விழுந்ததில் ஏராளமானோர் காயமடைந்தனர். இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 32 பேர் மிதிபட்டும், மூச்சுத் திணறியும் இறந்தனர்.
மேலும், காயமடைந்த பலர் பாட்னா அரசு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர்.
இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரமும் நிவாரணமாக வழங்கும்படி பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.
விபத்து குறித்த தகவல் அறிந்ததும், நேற்று முன்தினம் இரவு பாட்னா அரசு மருத்துவமனைக்கு விரைந்த பீகார் முதலமைச்சர் ஜித்தன் ராம் மஞ்சி, சிகிச்சை பெற்று வருவோரைச் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.
மேலும், மத்திய உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங், தசரா விழாவில் 32 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (வ)

## ஆக்ராவில் 300 கடைகள் தீக்கிரை

ஆக்ரா, ஒக்.6
ஆக்ராவில் நேற்றுக் காலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து சாம்பராகின.
ஆக்ராவில் புகழ்பெற்ற லோகர் கலி சந்தை உள்ளது. அந்தப் பகுதியில் நேற்று அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் சுமார் 250 முதல் 300 கடைகள் எரிந்து சாம்பராகி விட்டன.
இந்த திடீர் தீ விபத்துக்கான காரணம் குறித்து உடனடியாக தகவல் ஏதும் இல்லை.
இந்தத் தீ விபத்து பற்றிய தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்பு படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.
மேலும், இந்த தீ விபத்தில் சுமார் ரூபா 40 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுவதால், தீ விபத்து குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## அஸாமில் வெள்ளத்தால் 4 லட்சம் பேர் சிக்கித் தவிப்பு

குவாஹாட்டி, ஒக்.6
அஸாம் மாநிலத்தில் வெள்ள நீர் வடிந்து வரும் போதிலும், அங்கு நிலைமை சீரடையவில்லை என்று அந்த மாநிலத்தின் பேரிடர் மேலாண்மை ஆணையகம் தெரிவித்துள்ளது. மேலும், வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதியில் சுமார் 4 லட்சம் பேர் இன்னும் சிக்கித் தவிக்கின்றனர் என்றும் கூறியுள்ளது. இதுகுறித்து அந்த ஆணையகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:
அஸாமில் அண்மையில் ஏற்பட்ட மழை, வெள்ளத்தால் சுமார் 4 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கோல்பாரா, காமரூப் ஊரகம், தேமாஜி ஆகிய 3 மாவட்டங்கள் மிகவும் மோசமான பாதிப்புக்கு உள்ளாகின.
இதில் கோல்பாரா மாவட்டத்தில் மட்டும் 204 கிராமங்களைச் சேர்ந்த 3.66 லட்சம் பேர் குடியிருப்புக்களில் தண்ணீர் புகுந்துள்ளதால் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள 18 நிவாரண முகாம்களில் 6,000 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நீர் வடிந்து வரும் போதிலும் நிலைமை இன்னும் இயல்புக்குத் திரும்பவில்லை. சுமார் 50,000 ஹெக்ரேயர் விளைநிலங்களில் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் பயிர்கள் மூழ்கியுள்ளன.
வெள்ளத்தினால் இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ)

## ஆதிவாசிகளை கடத்திய நக்ஸலைட்டுகள்

திரிபுராவில் 2 ஆதிவாசிகளை என்.எல்.எஃப்டி அமைப்பைச் சேர்ந்த நக்ஸலைட்டுகள் கடத்திச் சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. திரிபுரா மாநிலம் தலாய் மாவட்டம் கீராசந்திரபாரா பகுதியைச் சேர்ந்த பாரேந்திர ரியாங் (வயது- 30), ஹரேந்திர ரியாங் (வயது-21) ஆகியோரை வியாழக்கிழமை இரவு 5 முதல் 7 தீவிரவாதிகள் கடத்திச் சென்றதாக பொலிஸ் அதிகாரி நேபாள் தாஸ் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், இந்திய-வங்கதேச எல்லையில் உள்ள கீராசந்திர பாரா பகுதியில் வேலி எதுவும் அமைக்கப்படவில்லை. இதனால் அந்தப்பகுதி வழியாக அங்குள்ள தீவிரவாதிகள் எளிதாகத் தப்பிச் செல்வதாகவும் தெரிவித்தார். (வ)

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
திருமதி பாமினி தன்பாலசிங்கம்
BEd, SLTSI)
யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன்
தமிழ் கலவன் பாடசாலையில்
மிக நீண்டகாலமாக கனிந்த
ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் நல்கி
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை
மற்றும் இணைப்பாடவிதான
செயற்பாடுகளில் அதிக முன்னேற்றங்களையும்,
சாதனைகளையும் நிலைநாட்டி
மாதா, பிதா குரு என பல்பரிமாணங்களில்
எம்மை வழிநடத்தி தனித்துவமான முத்திரை பதித்து
இன்று இலங்கை அரசாங்கத்தின் ஆசிரியர்களுக்கான
அதியுயர் விருதான **பிரதீபா பிரபா**
விருதினைப் பெறுவதையிட்டு
உவகையுடன் வாழ்த்துகின்றோம்.
வாழ்க வாழ்க என்றென்றும் வாழ்க.




வாழ்த்துவோர்:
யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையில்
ஆசிரியரிடம் கல்விபயின்ற மாணவர்களான
ம.அபிநயா, தே.விஷ்ணுஜன், சி.விதுஷன், சி.சிவாஜனுஜன், த.சந்தோஷ்
Best Wishes

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
திருமதி பாலராணி சிறீதரன்
(B.A, Dip. in Ed.,M.Ed.S.L.P.S 2-II)
கல்வி உலகிலே சாதனைகள் புரிந்து
கல்லூரிப் புகழ் ஓங்க கவினுறவே
பணிபுரிந்த பேரன்பும் பெருமதிப்பும்
மிக்க எம் இனிய அதிபர்
திருமதி பாலராணி சிறிதரன்
அவர்கள் இன்று 06.10.2014
மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில்
இலங்கை ஜனநாயக சோசலிச
குடியரசின் பிரதமர் தலைமையில்
நடைபெறும் பிரதீபா பிரபா விருது
வழங்கும் நிகழ்வில் சிறந்த
அதிபருக்கான 'பிரதீபா பிரபா'
விருது 2014 பெற்றுக் கொள்வதை
மன மகிழ்வோடு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.




கல்லூரிச் சமூகம்
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
வதிரி,கரவெட்டி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்லத்துரை பேரின்பநாதன்
(SLPS-2-II)
இன்று மகரகம தேசிய கல்வி நிறுவக கேட்போர் கூடத்தில் இலங்கை ஜன நாயகக் குடியரசின் கௌரவ பிரதமர் ஜயரத்ன அவர்கள் தலைமையில் அதிபர்களுக்கான ''பிரதீபா பிரபா 2014'' விருதைப் பெற்றுக்கொள்ளும் எமது வித்தியாலய அதிபர்
செல்லத்துரை பேரின்பநாதன்
அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் பணி மேன்மேலும் சிறக்க இறையருள் வேண்டி நிற்கின்றோம்.
(47302)(3.6.4) பாடசாலைச்சமூகம்,
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி.



இலவச அமெரிக்கா லொத்தர் விசா 2016
இலத்திரனியல் விண்ணப்பங்களை அனுப்பிக்கொள்ளலாம்
முடிவுத்திகதி நவம்பர் 03
இல 01 அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி யாழ்ப்பாணம்
*0212226113
இல 10 அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
0212223536

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வீடு வாடகைக்கு
கச்சேரி நல்லூர் வீதியில் 68ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மாடிவீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு- 077 582 3346,
077 969 0615

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
தீபத்திருநாளை முன்னிட்டு அதிவிசேட சலுகைகளை அனுபவித்திட எம்முடன் இணைந்திருங்கள்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம். 021 222 6113
- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் எதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.



வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

# பலசேனாவின் கருத்தை ஐ.தே.கட்சி பரிசீலிக்கும்

## அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.6

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாகத் தங்களுடைய கொள்கைத்திட்டங்களை பரிசீலிக்குமாறு பொதுபலசேனா விடுத்துள்ள வேண்டுகோளை ஐக்கிய தேசிய கட்சி கருத்தில் கொள்ளும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தனது உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள கொள்கைகளை ஏற்கும் கட்சிக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிக்க தயார் என்று பொதுபலசேனா தெரிவித்துள்ளமை குறித்து 'பி.பி.ஸி.' சிங்கள மொழிச் செய்திச் சேவைக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"அரசுக்கு எதிராக அனைத்து கட்சிகளுடனும் இணைந்து வலுவான கூட்டணியொன்றை அமைப்பதே எமது நோக்கம். ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும், பொதுத் தேர்தலாக இருந்தாலும் எதிர்க் கட்சிகளை ஓர் அணியில் திரட்டுவதே எங்களது நோக்கம், அதன் காரணமாக தேர்தல்களில் வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்காக பொதுபல சேனாவின் வேண்டுகோள்களை நிச்சயமாக பரிசீலிப்போம்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)



## சப்ரகமுவவில் பதற்றம்

கொழும்பு, ஒக்.6

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிய கட்டடமொன்றை திறந்து வைப்பதற்கு சென்ற உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரால் நீர் தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பலாங்கொடை பம்பஹின்ன பகுதியில், சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிர்மாணிக்கப்பட்ட விடுதியை திறந்து வைப்பதற்காக நேற்றுக் காலை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அங்கு சென்றிருந்தார்.

இதன்போது மாணவர்களுக்கும் உயர்கல்வி அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அமைதியின்மை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்தே பொலிஸாரால் நீர் தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

## ஐ.தே.கவின் அரசில் சஜித் பிரேமதாஸ பிரதமர்

### ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த அரசில் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவே பிரதமர் என்று ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார சபை கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிக்க வேண்டும் என்ற யோசனையை நான் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்க உள்ளேன் என்றும், ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ற)

## ஜனாதிபதி தேர்தல் நடத்துவது பொருத்தமல்ல



கொழும்பு, ஒக்.6

உடனடியான ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்துவது பொருத்தமான காரியம் அல்ல என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார். அவசரமாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தும் தேவை எழவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பற்றி தற்போது சகல இடங்களிலும் பேசப்பட்டு வருகிறது. அதற்கு தயாராகும் அடையாளங்கள் தென்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அப்படியான தீர்மானம் எதனையும் இதுவரை எடுக்கவில்லை. அரசும் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது பற்றி தீர்மானத்தை எடுக்கவில்லை.

நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை உள்ளது. ஜனாதிபதிக்கும் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை பதவியில் இருக்க முடியும். அத்துடன் அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது.

இன்னும் இரண்டு வரவு செலவுத் திட்டங்களை தாக்கல் செய்ய முடியும். மஹிந்த சிந்தனையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் முழுமைப் பெறாத வேலைகள் உள்ளன"- என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

## அதிக தேர்தல்கள் நடந்தது எனது ஆட்சி காலத்திலேயே

### அதுவே ஜனநாயகம் நிலவுவதற்குச் சான்று என்கின்றார் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு, ஒக்.6

இலங்கையில் ஆகக்கூடிய தேர்தல்கள் தமது ஆட்சிக் காலத்திலேயே நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டில் ஜனநாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை அதன்மூலம் தெளிவாகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வத்திகானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, இத்தாலியின் ரோம் நகரிலும், ஐரோப்பாவிலும் வாழ்கின்ற இலங்கை சமூகத்தினரை சந்தித்துள்ளார். அதன்போதே அவர் இந்த விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு நாட்டுக்குள்ளேயே தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதுடன், அதில் தலையிடுவதற்கான எந்த வித பண்பாட்டு ரீதியான உரிமையும் சர்வதேச சமூகத்துக்கு இல்லையென்றும் இதன் போது ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் விடயங்களில் தலையிடுவதன் ஊடாக, நாட்டில் ஸ்திரமின்மையை தோற்றுவிப்பதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் அளிப்பதற்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. நாட்டுக்கு எதிரான போலியான பரப்புரைகளையும், கருத்துகளையும் தோற்கடிப்பதற்கும், இலங்கையின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கும் முன்வர வேண்டும்"- என்றும் அதன்போது ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

## சோதனைச் சாவடியையே தூக்கிச் சென்ற திருடர்கள்



கொழும்பு, ஒக்.6

கொழும்பை அண்மித்த இங்கிரிய பொலிஸ் நிலையத்தின் முன்பாக அமைந்திருந்த சோதனைச் சாவடியை திருடர்கள் தூக்கிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்கு வருகின்றவர்களை சோதனைக்குட்படுத்துவது, பாதையைக் கண்காணிப்பது போன்ற நடவடிக்கைகளை முன்னிட்டு இரும்புக் கம்பிகளைக் கொண்டு இந்த சோதனைச் சாவடி அமைக் கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த சோதனைச் சாவடியை திருடர்கள் அங்கிருந்து தூக்கிச் சென்றுள்ளனர். பொலிஸ் நிலையம் முன்பாக இருந்த சோதனைச் சாவடி திருடிச் செல்லப்பட்ட சம்பவம் பிரதேச. மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பொலிஸாரின் சோதனைச் சாவடிக்கே இந்தநிலை என்றால், நமக்குப் பாதுகாப்பு சாத்தியமா என்றும் அந்தப் பிரதேச மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ற)

## தொல்பொருள் திருடர்களிடம் ரூ.1 கோடிக்கு மேல் அறவீடு

கொழும்பு, ஒக்.6

தொல் பொருள்களைக் களவாடுபவர்களிடம் இருந்து தண்டப் பணமாக இந்த ஆண்டில் சுமார் ஒரு கோடியே 44 இலட்சம் ரூபா அறவிடப்பட்டுள்ளது என்று தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதையல் தோண்டுதல், தொல் பொருள்களைத் தம் வசம் வைத்திருத்தல், தொல்லியல் வரலாற்றுச் சின்னங்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தல் போன்ற தேசிய உரிமைகளுக்கு அழிவை ஏற்படுத்தியுள்ளமை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்தே இந்தத் தண்டத் தொகை அறவிடப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில் தொல் பொருள் ஆய்வுகள் திணைக்களத்துக்கு இவ்வாறு சுமார் 4 கோடியே 32 லட்சம் ரூபா கிடைக்கப்பெற்றது என்றும்- கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது இந்த ஆண்டில் தொல்லியல் நிறைவுச் சின்னங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்படுகின்றமை குறைந்துள்ளது என்றும்- தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் தொல்பொருள்களைப் பாதுகாக்கும் பிரிவு அவதானம் செலுத்தி வருவதன் காரணமாகவே தொல்பொருள்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தும் போக்குக் குறைவடைந்துள்ளது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற-22)

## கோரிக்கைகளை அரசு ஏற்காதுவிடில் அமைச்சர்களுடன் பிரிந்து செல்வோம்

### மிரட்டுகின்றது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, ஒக்.6

ஜாதிக ஹெல உறுமய முன்வைக்கும் அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய அமைச்சர்களுடன் பிரிந்து செல்வோம் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான, அத் துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய தனது அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளை எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் வெளியிடவுள்ளது. இந்தநிலையிலேயே அத்துரலிய ரத்ன தேரர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.





இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"அரசு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குமா என்பது குறித்து எமக்கு சந்தேகம் நிலவுகின்றது. நாங்கள் பல கட்சிகளுடன் பேச்சு மேற்கொண்டு நாட்டுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்க கூடிய இந்த யோசனைகளை தயாரித்துள்ளோம்.

நாங்கள் ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் இரண்டையும் ஒன்றாக நடத்தவேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளோம், எங்கள் யோசனைகள் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தக் கூடியவை. அரசு இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அரசுக்குள் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 5 அமைச்சர்கள் என்னுடன் இணைந்து அரசிலிருந்து விலகுவார்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# புலமைப் பரிசில் பாராட்டுச் சிறப்பிதழ் - 2014


## பார்ராட்டி வாழ்த்துகின்றோம்



2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில்
முதல் இடத்தினைப் பெற்ற அளவெட்டி
யா/அருணோதயாக் கல்லூரியில் கல்வி பயிலும்
மாணவி செல்வி **பத்மராஜன் திவாரகா**
182 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில்
இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

Congratulation

இவரை அம்மா மெரினா, அப்பா பத்மன் மற்றும்
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா,
பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, தம்பி
மச்சான்மார்கள், மச்சாள்மார்கள்
அனைவரும் பல்கலையும் கற்றுப்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.
* அளவெட்டி (யாழ்ப்பாணம்) * தோட்டவெளி (மன்னார்)
(52895)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா விபுலானந்தா கல்லூரி தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்
தோற்றி 183 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 3 ஆவதா
கவும் மாவட்ட மட்டத்தில் 18 ஆவது இடத்தினைப் பெற்று சித்திய
டைந்த லெ.சண்முகநாதன் ஆசாரியின் பேரனும் நாகராஜன் தர்சனா
தம்பதியரின் செல்வப்புதல்வன் **சுவஸ்திகன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சித்திகள் பெற
ஆதி விநாயகன் திருவருள் புரிவாராக என வணங்கி வாழ்த்துகிறோம்.

Congratulation

வாழ்த்துபவர்கள்:
தாய்மாமா, அம்மம்மாமார், தாத்தாமார், பாட்டி, சித்திமார், அத்தை,
அப்பம்மா, அக்கா, தம்பி, தங்கை, பெரியம்மாமார், பெரியப்பாமார்.

ஆதிவிநாயகர், சிற்பாலயம்,
இல.75/7, வியாசர் வீதி,
தோணிக்கல், வவுனியா
(52935)(4.3.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
மாணவனும் நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைச்
சேர்ந்தவருமான செல்வன் ரமணன் சஞ்சயன்
2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 169
புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப்
பாராட்டுவதோடு, மேலும் பல சித்திகளைப் பெற
நயினை நாகபூஷணி அம்மனை வேண்டி நிற்கின்றோம்.
வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அண்ணா, தாத்தா, அம்மம்மா,
அத்தைமாமா, அத்தை, ஆசைமாமா, மாமி, சித்திமார்.
இல.10, சம்பியன் லேன், கொக்குவில். (52926)(4.3.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யாழ். மத்திய கல்லூரி
மாணவனும்
திரு.திருமதி சண்முகராஜா லதாலினீ
தம்பதியரின் செல்வப்புதல்வன்
**ச.கார்த்தீபன்**
2014 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்
பரிசில் பரீட்சையில் 170 புள்ளி
களைப் பெற்று சித்தியடைந்தமைக்கு
பாடசாலை அதிபர், ஆசிரியர்களைப்
பாராட்டுவதுடன், மேன்மேலும்
கல்வியில் பல சாதனைகள் படைக்க
எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்
பெருமானை வேண்டுவதுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(சீ/15190)(4.3.6)
பாராட்டுவோர்:
பெரியம்மா, பெரியப்பா, அப்பா, அம்மா,
அக்காமார், அத்தான்மார் (சுசி, ரஜி),
மாமன்மார், மாமிமார், அம்மம்மா.

19, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர் திருமதி பு.பஞ்சாட்சரம்



வகுப்பாசிரியர் சி.நந்தகுமார்



வகுப்பாசிரியர் இ.சந்திரசேனா



செல்வன் கி.எறிக்ஜொவ்றின் 160



செல்வன் கு.டஸ்மின் 158



செல்வி றொ.ஏ.அமென்டா 158

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விவரம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.ப.தக்ஷா | - 150 | 11. லி.அ.குயிலினி | - 140 | 21.மு.துவாரகன் | - 117 |
| 02.வி.வாஷா | - 148 | 12. அ.புவேந்தினி | - 139 | 22.தே.தேவறயனா | - 116 |
| 03.வே.பிரியதர்சினி | - 148 | 13. ப.நிரூபா | - 136 | 23.த.சாதுரியா | - 115 |
| 04.ச.பிரம்ஜன் | - 146 | 14. ஆ. மதுசா | - 135 | 24.ப.சங்கீதன் | - 112 |
| 05.நி.அபிஷேக் | - 146 | 15. ஹெ.ஜெ.ஜெறிக்கிளைன் | - 134 | 25.ஜெ.நிந்துஜா | - 111 |
| 06.கி.நிரமலி | - 145 | 16. த.வைஸ்ணவி | - 132 | 26.இ.செந்தூரன் | - 103 |
| 07.சி.கிருஸ்ணலதா | - 144 | 17.ஜெ.ஓ.மேரி யூலினா | - 129 | 27.சு.தர்விகன் | - 103 |
| 08. வி.தினுசா | - 144 | 18. ஜெ.ஜெ.ஜீன்ஜஸ்மின் | - 125 | 28.செ.றிவேக்கா | - 103 |
| 09. செ.ரனுசா | - 142 | 19. சு.கம்சிகா | - 120 | 29.மோ.பானுப்பிரியன் | - 101 |
| 10. இ.வேணுஜா | - 142 | 20.வி.விமர்சனா | - 119 | | |

ஆசிரியர் தினமாகிய இன்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2014 இல் சித்தியடைந்த மாணவர்களையும்,
வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.
(C/15189)(7.6.3)

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அல்லாரை அ.த.க வித்தியாலயத்தில்
2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி எய்திய இவ்விரு மாணவர்களையும்
பாராட்டுவதோடு

மேலும் 100
புள்ளிகளுக்கு மேல்
பெற்ற மாணவர்களான
யோ.அபிநயா (156),
தை.தர்சிஜா (143)
ஆகியோரையும்
பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

Congratulation

அ.அபிநயா
178 புள்ளிகள்



Congratulation

சி.றொசேல் கேசிகா
162 புள்ளிகள்

(47290)(7.6.3)
வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/அல்லாரை அ.த.வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சித்தியடைந்தோர்
01. செல்வி இ.அலெக்ஷா
164
02. செல்வி சு.திரிசாளினி
160



ஆசிரியை
செல்வி சி.எழிலோவியம்

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்**

| | | | |
|---|---|---|---|
| 03. செல்வி ம.சங்கீதா | - 146 | 09. செல்வி சி.திவானுஜா | - 116 |
| 04. செல்வன் இ.சோபிதன் | - 143 | 10. செல்வன் க.ஆகாஷ் | - 115 |
| 05. செல்வி சு.நிருஜா | - 126 | 11. செல்வி தே.விதுஜா | - 112 |
| 06. செல்வி ப.அபிஷா | - 124 | 12. செல்வி ஜெ.அஜினா | - 104 |
| 07. செல்வன் சி.துஷ்யந்தன் | - 123 | 13. செல்வி ச.மதுஷனா | - 104 |
| 08. செல்வன் சு.தனுஷ் | - 118 | | |

(C/15188)(7.6.3)

ஆசிரியர் தினமாகிய இன்று சித்தியடைந்த மாணவர்களையும், கற்பித்த ஆசிரியரையும்
வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/சங்குவேலி அ.த.க பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**புலமைப் பரிசில் பரீட்சை - 2014**

| | |
|---|---|
| 01.கருணாகரன் பானுஜா | - 143 |
| 02.கந்தவமதன் அபிசனா | - 136 |
| 03.மரியதாஸ் திருச்செல்வி | - 133 |
| 04.புண்ணியசிங்கம் யக்ஷிகா | - 133 |
| 05.பத்மநாதன் சோபனா | - 128 |
| 06.பாலகிருஷ்ணன் கரிசாந் | - 119 |
| 07.ஸ்ரீதரன் நிருசன் | - 117 |
| 08.கேதீஸ் சர்மினி | - 115 |
| 09.சத்தியானந்தம் நித்தியா | - 108 |
| 10.சிவகுமாரன் நிவேதிகா | - 105 |
| 11.கமலநாதன் அனோஜா | - 104 |
| 12.ஸ்ரீலதன் பானுஜா | - 104 |
| 13.பிரபாகரன் தூரிகா | - 103 |
| 14.வேல்வேந்தன் கிசானி | - 103 |
| 15.குமரதாசன் வல்லபை | - 100 |
| 16.இலக்கணகுமார் இமயவன் | - 100 |
| 17.முனீஸ்வரன் யதுசன் | - 100 |



இளங்குமார் தனஞ்செயன்
172 புள்ளி




பாஸ்கரன் சாரங்கன்
171 புள்ளி

மேற்படி எமது பாடசாலையில் 2014 தரம் 5 மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவர்களையும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட 17 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(51652)(7.6.3)
வாழ்த்துவோர்:
Best Wishes அதிபர், ஆசிரியர்கள் கிளி/பரந்தன் இ.ம.வி.

# ஹஜ்ஜுப் பெருநாள் தத்துவங்களை உணர்ந்து நாம் செயற்படுவோம்



உலக முஸ்லிம்கள் 'ஈதுல் அழ்ஹா' புனித ஹஜ் ஜுப் பெருநாளை இன்று கொண்டாடுகின்றனர். தந்தை நபி இப்ராஹிம் (அலை), தனயன் நபி இஸ்மாயில் (அலை) ஆகியோரது தியாகங்களை நினைவுகூர அல்லாஹ் நமக்களித்துள்ள சிறந்த சந்தர்ப்பமே இதுவாகும்.

இவர்களது தியாகங்கள், வாழ்வின் அம்சங்கள் பற்றி அல்லாஹ் அருளியுள்ளவற்றைச் சீர்தூக்கிப் பார்க்காமல், ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை நாம் வீணாகக்கழிப்பது வேதனைக்குரியதாகும். ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று ஹஜ்ஜின் நோக்கங்கள், அதன் இலட்சியங்கள், தத்துவங்கள் மற்றும் அதன் பல்வேறு நிலைகள் என்பவற்றை நாம் சிந்தித்து உணர்வது மிகப் பொருத்தமானதாகும்.

ஹஜ் யாத்திரையை மேற்கொள்வதிலுள்ள கஷ்டங்கள், அல்லாவின் கட்டளைகளுக்கு அடிபணிவதன் அவசியம், இஸ்லாம் எடுத்தியம்பியுள்ள ஏகத்துவத்தின் மகிமை, இஸ்லாத்துக்கும், முஸ்லிம் சமுதாயத்துக்குமே சொந்தமான சகோதரத்துவம், குர்பானியின் தாற்பரியம் ஆகியவற்றை இத்தினம் நமக்கு ஞாபகமூட்டிக்கொண்டிருக்கிறது.

எனவே, நாம் அல்லாவுக்காக எதையும் எப்பொழுதும் தியாகம் செய்யத் தயாராக இருத்தல்வேண்டும். அந்தத் தியாகத்தை உடல், பொருள், ஆவி போன்றவற்றாலும் செய்யலாம். நபி இப்றாஹிம் (அலை), நபி இஸ்மாயில் (அலை) ஆகியோரை அறுத்துப் பலியிடத் துணிந்ததை நினைவுகூரும் வகையில் குர்பானித் தினமாகவும், இஸ்லாமிய இறுதிக்கடமையின் பூர்த்தி விழாவாகவும் 'ஈதுல் அழ்ஹா' ஹஜ்ஜுப் பெருநாள் அமைந்துள்ளது.

இந்நன்னாளில் தியாகம் என்னும் தன்மை நம்மிடையே வேரூன்றுவதென்றால் "எனது உடைமை, நான்" என்ற அகந்தை போன்ற தன்னலத்தன்மைகள் நம்மிடமிருந்து களையப்படும்போதுதான் அதாவது. தன்னலத் தன்மையிலிருந்து விடுபட்ட பின்புதான் எதையும் நாம் பிறருக்குத் தாராளமாகக் கொடுத்துதவ முன்வருவோம். இவ்வாறான பக்குவத்தில் நம்மை உட்படுத்தவே இத்திருநாள் விளைகின்றது.

ஹஜ்ஜுப் பெருநாள் கால வெள்ளத்தால் அழியாத ஒரு தியாக வரலாற்று நிகழ்ச்சியை நினைவுபடுத்தி உள்ளத்தை தூய்மைப்படுத்தும் ஒரு புண்ணிய நன்னாளாகவும் திகழ்கின்றது. எனவே, சமூகத்தைச் சீர்படுத்த எந்த விதமான தியாகத்தையும் செய்யக்கூடியவர்களாக எம்மை இத்தியாகத் திருநாளில் மாற்றிக் கொள்வோமாக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்"

ஈத் முபாறக்

இயற்கை எழில் கொஞ்சும் வரலாற்று சிறப்புமிக்க யாழ் மாநகரில் Demak மெகா சென்ரின் 'புதிய காட்சியறை இன்று திறந்து வைக்கப்படுகின்றது




# ஹஜ்ஜில் பொதிந்துள்ள தாற்பரியங்கள்


அஷ்ஷெய்க் முஹிடீன் இஸ்லாஹி

இஸ்லாத்தின் தலையாய வணக்க வழிபாடுகளில் இறுதிக் கடமையே ஹஜ்ஜாகும். இது வசதி வாய்ப்புக்கள் உள்ளவர்களுக்கு கட்டாய கடமையாக இருந்தாலும் வசதி வாய்ப்பற்றவர்களினால் புறக்கணிக்கப்பட முடியாத ஒரு முக்கிய வணக்க வழிபாடாகும்.

ஒரு மனிதன் இஸ்லாத்தில் நுழைகின்றபோது அவன் ஏற்றுக்கொள்கின்ற ஐந்து பிரதான கடமைகளில் இதுவும் ஒன்று. தூண்கள் இல்லாத ஒரு கட்டடம் எவ்வாறு பலவீனமடையுமோ அதேபோன்று இஸ்லாத்தை ஏற்ற ஒருவன் தான் ஏற்ற மார்க்கத்தின் தூண்களான கடமைகளைப் புறக்கணிக்கின்ற போது ஈமானில் பலவீனமடைகின்றான்.

புனிதமான இடமாகக் கருதப்படுகின்ற மக்காவை நாடிச் சென்று ஒரு குறிப்பிட்ட காலத்தில் இறைவனுக்காக என்ற தூய்மையான எண்ணத்துடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டிய பிரகாரம் எந்தவிதக் கூட்டல் குறைத்தலும் இன்றி மேற்கொள்ளப் படுகின்ற வணக்கமே ஹஜ் என அழைக்கப்படுகின்றது.

நபி இப்றாஹீம் (அலை) அவர்களும் ஹஜ் வணக்கமும் ஹஜ் கடமையில் பொதிந்துள்ள ஒவ்வோர் அம்சமும், நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களினாலும் அவர்களுடைய குடும்பத்தினராலும் இறைவனுக்காக மேற்கொள்ளப்பட்ட தியாகச் செயல்களை நினைவு கூர்வதாகும்.



இந்தத் தியாகச் செயல்கள் ஒவ்வொன்றும் ஹாஜிகளுக்குப் பல படிப்பினைகளை வழங்குகின்றன.

இஸ்லாத்தில் எந்தவொரு வணக்க வழிபாடுகளை எடுத்துக் கொண்டாலும் அவற்றை வெறுமனே நிறைவேற்றி விட்டால் மாத்திரம் அதன் கடமைப்பாடு முடிந்து விடுவதில்லை. ஐவேளை தொழுகின்ற ஒருவனிடத்தில் தாராளத் தன்மை வளரவேண்டும். ஸகாத் கொடுக்கின்ற ஒருவனுடைய பொருளும், உள்ளமும் சுத்தப்படுத்தப்படுகிறது. இதேபோன்று ஹஜ்ஜின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் கூட பல படிப்பினைகளை வழங்குகின்றன. அவற்றை விளங்கிக் கொள்பவர்களே அவற்றின் உண்மையான பலன்களை அடைந்துகொள்வர்.

ஐக்கியத்தையும் சமத்துவத்தையும் வெறுமனே கோஷங்களாக மாத்திரம் இஸ்லாம் முன்வைக்கவில்லை. அவற்றை அடிப்படையான வணக்க வழிபாடுகளுடன் இணைத்துள்ளது. இதன் மூலம் முஸ்லிமின் உள்ளத்துக்கு விளக்கத்தையும் உணர்வையும் கொடுத்து அவனைச் செயல் வீரனாக மாற்ற களம் அமைத்துள்ளது.

தொழுகையைப் போலவே ஹஜ் வணக்கத்திலும் இந்த சமத்துவம், ஐக்கியம் என்பன வளர்க்கப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

### ஹஜ் ஒரு சர்வதேச மாநாடு

ஹஜ் ஒரு முஸ்லிமுக்கு வருடாந்த இஸ்லாமிய மாநாட்டை காண்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகிறது. இது எந்தவொரு இயக்கமோ அல்லது அரசோ அல்லது தலைவரோ ஏற்பாடு செய்த மாநாடன்று. மாறாக எல்லா விடயங்களுக்கும் பொறுப்பு வாய்ந்த அந்த ஏக இறைவனின் அழைப்பாகும்.

ஹஜ்ஜுக்காக செல்கின்றவர்கள் உலகின் நாலாபுறங்களிலிருந்தும் வரும் சகோதரர்களைச் சந்திப்பார்கள். அவர்கள் வெவ்வேறு மொழி, நிறமுடையவர்களாக இருப்பார்கள்.

## மரண அறிவித்தல்



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### திருமதி தெய்வநாயகியம்மா தில்லைநாயகம்

தெல்லிப்பழையைப் பிறப் பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகியம்மா தில்லைநாயகம் நேற்று முன்தினம் (04.10.2014) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவபாக்கியம் தம்பதியரின் இளைய மகளும், தில்லைநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருந்தவ நாயகியம்மாவின் அன்புச் சகோதரியும், பவானி, திருலோக நாயகி (லண்டன்), செல்வநாயகி (ஜேர்மனி), பாலசரஸ்வதி (பிரான்ஸ்), பாலசறோஜினி(மட்டக்களப்பு), சிவசண் முகநாதன், கலைச்செல்வி, செந்தில் நாதன் ஆகியோரின் பாசத்தாயும், யோகானந்,சுதாகர், புஸ்பராஜா, சந்திரகுமார், அன்ரூ, வளர்மதி, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியும், நவதீசன், பவனீதன், நிதர்ஷன், காஞ்சனன், கஜேந்திரநாத், ராம்நாத், உதயநாத், அசோக்நாத், கஜதீபா, தனஞ்சயன், கஜானா, கஜானி, தர்ஷிக்கா, சுலக்ஸ்மன், லக்ஸ்மன், றோமிக்கா, சாருஜன், வினுஜன், கஜாளினி, சானுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2014) திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 74, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தகவல்:
தில்லைநாயகம் குடும்பத்தினர்.

# கற்பகபுரம் கிராம அலுவலர் அடாவடி உரிய நடவடிக்கை எதுவும் இல்லை

## அந்தப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, ஒக்.6

வவுனியா, கற்பகபுரம் கிராம அலுவலர் இராணுவத்தைக் கொண்டு மக்களை மிரட்டியபோதும் பிரதேச செயலாளர் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் லஞ்சம் கேட்பதாகவும், மக்களுடன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து நடப்பதாகவும் குற்றஞ் சாட்டுகின்றனர் பழைய கற்பகபுரம் மக்கள்.

இது தொடர்பில் குரல் கொடுத்து வந்த கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர் தன்னை தாக்கியதாகக் கிராம அலுவலர் பொய் முறைப்பாடு செய்ததாகவும், இதனையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் மக்கள் கூறினர்.

இந்த நிலையில் கடந்த 2ஆம் திகதி குறித்த இருவரின் வீட்டுக்கும் இராணுவத்தினரை அழைத்துச் சென்று கிராம அலுவலர் அச்சுறுத்தியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீட்டை கிராம அலுவலர் ஏற்படுத்துவதாகவும், குறித்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ள போது இராணுவத்தினரை அழைத்து வருவது தம்மை மிரட்டும் செயலை ஏற்கமுடியாது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸில் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், செயலாளர் ஆகியோரின் வீடுகளுக்கு இரவு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய கிராம அலுவலரிடம் இருந்து மக்களைப் பாதுகாக்கப் பொலிஸாரை நியமிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளமை குறித்து வவுனியா பிரதேச செயலாளர் மௌனம் காப்பதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (த-421)



## மடுப் பிரதேச கிராமங்களுக்கு தெரு விளக்குகள் பொருத்தல்

மன்னார், ஒக்.6

வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரனின் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதியின் வேலைத் திட்டத்தின் கீழ் மடு பிரதேசத்தில் சூரிய சக்தித் தெரு விளக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை காலை அமைச்சரினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து மக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவர் எஸ். வரப்பிரகாசம் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான எஸ்.பீற்றர், எம்.ராசசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்தத் திட்டத்தின் மூலம் மின்சாரம் இன்னமும் செல்லாத கிராமங்களான தட்சணா மருதமடு, கீரிசுட்டான், முள்ளிக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் நன்மை அடைவார்கள் என்று கூறப்பட்டது. (த-56)



வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் பனை, தென்னை வள கைவினைப் பொருள்களுக்கான கண்காட்சி அண்மையில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தப் பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியரின் நெறிப்படுத்தலின் கீழ் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கணித, விஞ்ஞானப் பயிலுநர்களும் இணைந்து நடத்திய இந்தக் கண்காட்சியில் தரம் 7 முதல் 10 வரையான பாடசாலை மாணவர்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (த-421)

## குளத்தில் மூழ்கி மாணவன் சாவு

கிளிநொச்சி, ஒக்.6

கிளிநொச்சி புழுதியாற்றுக் குளத்தில் மூழ்கி மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் க்டந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

இராமநாதபுரம், புதுக்காட்டைச் சேர்ந்த கருணாநிதி கோகிலகீதன் (வயது-13) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த தினம் இராமநாதபுர மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் குளத்தில் குளிக்கச் சென்றனர் என்றும்- அதன்போதே குறித்த மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்



என்றும் கூறப்படுகின்றது.

தற்போது குளங்களில் நீர் மட்டம் குறைவாக உள்ள போதும், குளங்கள் சேறு நிரம்பிக் காணப்படுவதால் அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ந-18)

## நெசவுத் தொழிற்பயிற்சி மையம் வவுனியாவில் மீண்டும் ஆரம்பம்



வவுனியா தோணிக்கல் பகுதியில் அமைக் கப்பட்டிருந்த கைத்தொழில் பயிற்சி நிலையம் மீண்டும் இயங்கும் வகையில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவால் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களத்தின் கீழ் வவுனியா தோணிக்கல் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கைத்தொழில் பயிற்சி மையம் நீண்ட நாள்களாக இயங்காது மூடப்பட்டிருந்தது.

இந் நிலையில் அந்தப் பயிற்சி மையம் கடந்த 3ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இங்கு நெசவு பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வட மாகாணதொழிற்றுறைதிணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன், வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, தோணிக்கல் கிராம சேவகர் மணிமாறன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உபதவிசாளர் து.ரவி மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-421)

## முள்ளிக்குளத்தில் விடப்பட்டன 80,000 நன்னீர் மீன்குஞ்சுகள்

மன்னார்,ஒக்.6

மடு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட முள்ளிக்குளத்தில் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் நிதியுதவியின் கீழ் நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை சிலாப்பியா மற்றும் காப் இனம் சார்ந்த சுமார் 80 ஆயிரம் நன்னீர் மீன்குஞ்சுகளை அமைச்சர் பா.டெனீஸ்வரன் உத்தியோகபூர்வமாகக் குளத்தில் விட்டார்.



இந்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவர் எஸ். வரப்பிரகாசம், பிரதேச சபையின் உறுப்பினர்களான எஸ். பீற்றர், எம். ராசசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-56)

# முல்லைத்தீவு மாணவர்களுக்கான கல்விக்கான செயற்திட்டம் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக்.6

யாழ் இந்துக் கல்லூரியின் 2005 இந்துவின் மைந்தர்களினால் முல்லைத்தீவுக்கான கல்விக்கான செயற்திட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை செயற்படுத்தப்பட்டது.

அந்த வகையில் முதல் நிகழ்வாக முல்லைத்தீவு வலைஞர் மடம் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு 4 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.




அந்தப் பாடசாலை சிறிய மாணவர்களால் 2005 இந்துவின் மைந்தர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. இந்தநிகழ்வுக்கு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.உ. முனீஸ் வரனும், முல்லைத்தீவு பிரதி கல்விப் பணிப்பாளர் திரு.ஞா.ஆதவனும் இணைந்து மாணவர்களுக்கான சைக்கிள்களை வழங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வுக்கு மாணவர்களும், அவர்களுடைய பெற்றோர்களும் வருகை தந்திருந்தார்கள்.

இதேவேளை - முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலய ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கு வினாத்தாள் தொகுப்புகள் அடங்கிய புத்தகங்கள் வழங்கப்பட்டன. அதே போல் கொக்கிளாய் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கும், கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற நிகழ்விலும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களுக்கான புத்தகங்களை வழங்கினார்.

இதனை விட குரவில் தமிழ் வித்தியாலயம், தேவிபுரம் அ.த.க. பாடசாலை, முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் போன்ற பாடசாலைகளின் ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கும் யாழ். இந்து மைந்தர்கள் வினாத்தாள் தொகுப்புகள் அடங்கிய புத்தகங்களை வழங்கினார். (த)




# உன்னதமான ஆசிரியத்துவத்தை நோக்கி.....

நடேசு தயாளன்




மாற்றமடையும் உலகானது மாற்று வடிவிலான கல்வியையே விரும்புகின்றது. அறிவு மையச் சமூகத்தக்கும் உலகமயமாக்கலின் தாக்கத்துக்குமுட்பட்ட தனியாளுக்குப் பொருத்தமான கல்வியை வழங்குவதற்குத் தயாராதல் ஆசிரியத்துவத்தின் உயர்வான பணியாகும். அனைத்துச் சமூகத்திலும் இன்றியமையாத மனித வளக்காரணியாக ஆசிரியர்கள் விளங்குகின்றார்கள். சமூகத்துக்கான இளையோரைக் கற்பித்து எதிர்காலச் சந்ததியினரின் தலைவர்களாக விளங்கக் கூடிய வகையில் இளையோருக்கு வேண்டிய அறிவை அனுபவங்களைத் தேவையான வகையில் பெற்றுக் கொடுப்பதோடு வாழ்க்கை நீடித்த பிரதிபலிப்புகளுக்கும் வழிகாட்டுபவர்களாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர். தரமான கல்வி என்பது தரமான ஆசிரியர்களின் செயற்பாட்டிலேயே பெருமளவு தங்கியுள்ளது. இதற்காக ஆசிரியர்களானவர்கள் உயர்ந்த கல்வி அறிவு திறன் உடையவர்களாக விளங்க வேண்டும் என்பதோடு அறிவை இற்றைப்படுத்துபவர்களாகவும் அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடும் சாத்தியமான அணுகுமுறைகளைக் கையாள்பவர்களாகவும் விளங்குதல் வேண்டும்.

பிள்ளைகள் வெவ்வேறுபட்ட தந்திரோபாயங்களினூடாகக் கற்பதன் மூலமே தமது இலக்குகளை அடைந்து கொள்கின்றனர். இத்தகைய அடைவு நிலைகளை எட்டிக் கொள்ள வேண்டுமானால் ஆசிரியர்களிடம் சிறந்த தொடர்பாடற் திறன் பரவிக் காணப்பட வேண்டும். பாடசாலைக்கு வரும் பிள்ளைகளானவர்கள் வெவ்வேறுபட்ட கலாசாரப் பின்னணியில் இருந்து வருகை தருகின்ற நிலையில் இது தொடர்பான தெளிவு நிலையுடன் ஆசிரியர்கள் செயற்பட வேண்டியது அவசியமானதாகும். ஆசிரியரானவர் மாணவர்கள் புதிய அறிவை மகிழ்வுடன் புரிந்துகொள்ளக்கூடியவகையில் கற்பிக்க வேண்டும் என்பதோடு நெகிழ்வுப் போக்குடையவராகவும் பெற்றோராலும் பிள்ளைகளாலும் நம்பப்படக் கூடியவராகவும் விளங்குதல் வேண்டும். அர்ப்பணிப்பும் ஈடுபாடும் கொண்ட ஆசிரியரின் கற்பித்தலே சிறப்பான விளைவைப் பெற்றுத் தருவதாகவும் இருக்கும்.

கற்பித்தல் என்பது சவால்மிக்கதோர் செயற்பாடு என்பதோடு வெகுமதிமிக்கத் தொழிற்பாடுமாகும். எனவே இத்தகைய வாண்மைத்துவத்தில் ஒருவர் மிளிர வேண்டுமானால் பின்வரும் திறன்கள் தொடர்பிலும் ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். பொறுமையுடையவராக, பொருத்தப்பாடடைந்தவராக கற்பதற்கு ஆர்வத்தைத் தூண்டக் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கக் கூடியவராக அணிசேர்ந்தியங்கும் இயல்பு ஆபத்தை எதிர்கொள்ளும் திறன், தொடர் கற்றல் தலைமைத்துவப் பாங்கு என்பன கொண்டவராக ஓர் ஆசிரியர் விளங்குதல் அவசியமாகும். ஆசிரியர்களானவர்கள் வகுப்பறையில் நாளாந்தம் பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களாகவேயுள்ளனர். வகுப்பறையை முகாமை செய்தல், பாடத்தைத் திட்டமிடுதல், ஒவ்வொரு மாணவனும் வகுப்பறைக்குள் காவிவரும் தனியான பிரச்சினைகள், பாடசாலை பற்றியும் ஆசிரியர்கள் பற்றியும் எதிர்மறையான எண்ணங் கொண்ட பெற்றோருடன் தொடர்புகளைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலை என்பன தொடர்பில் பொருத்தமான உத்திகளைப் பிரயோகிக்கும் திறனுடையவராகவும் ஆசிரியர் விளங்குதல் வேண்டும்.

கல்வியில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சிறப்பார்ந்த அறிவுப் பிரயோகம், திறன், மனப்பாங்கு, வடிவமைப்பு என்பவற்றின் ஒட்டுமொத்தச் சேர்க்கை ஆசிரியத்துவமாகும். கல்வியின் இலக்குகள் அடைந்து கொள்ளப்பட வேண்டுமானால் ஆசிரியர்களின் கற்பித்தல்கள் வாண்மைத்துவமிக்கதாக விளங்க வேண்டும். ஆசிரியத்துவமானது முக்கியத்துவமுடையதாகக் கொள்ளப்படுவதற்கு ஆசிரியர்களின் சிறப்பான கற்பித்தல்சார் முறைகள் தொடர்பான அறிவு தொடர்ச்சியான ஆய்வு நிலைவிருத்தி என்பவற்றோடு உன்னதமான சமூக சேவையாகவும் தொடர்ச்சியாக அபிவிருத்திச் செயன் முறையாகவும் இது அமைதலே காரணங்களாகும்.

தகவல்களைப் பரிமாறுதலும் ஏனையவர்களுடன் தனியாகவோ கூட்டாகவோ இணைந்து கொள்ளுதலும் கல்வியின் பலமான கருவியாகவுள்ளது. பிள்ளைகளானவர்கள் சமூகத் தொடர்பாடல் சாதனங்களுடாக ஒருவருடன் ஒருவர் கூட்டிணையும் நிலையும் இன்று உருவாகியுள்ளது. கோட்பாடுகளைக் கற்பதற்கும் எண்ணங்களை உருவாக்கிக் கொள்வதற்கும், ஏனையவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும் பாடசாலைகள் பிள்ளைகளைத் தயார்ப்படுத்த வேண்டியுள்ளதால் ஆசிரியர்களும் அது தொடர்பான திறன்களைக் கட்டியெழுப்புதல் அவசியமானதாகும்.

இந்த வகையில் எதிர்காலப் பாடசாலைக்கான வாண்மைத்துவம்மிக்க ஆசிரியர்களானவர்கள் மாணவர்கள், பெற்றோரிடையே நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புபவராகவும், வாண்மைத்துவத்துக்குரிய ஆடைகளை அணிபவராகவும், சரியான நேரத்தில் வேலைகளை மேற்கொள்பவராகவும் ஒவ்வொரு பாட அலகுக்கான கற்பித்தல் தொடர்பில் திட்டமிடுபவராகவும், நீண்டகால விளைவைப் பெற்றுத் தரும் கற்பித்தலை வழங்கக் கூடியவராகவும் மாணவர்களது நடத்தைகளைக் காலத்துக்கேற்ப முகாமை செய்யக் கூடியவராகவும், உரிய நேர எல்லையில் கற்பித்தலை நிறைவு செய்பவராகவும், சகபாடிகளையும் மேற்பார்வையாளர்களையும், மரியாதை உணர்வுடன் நடத்துபவராகவும் நேர்மனப்பாங்குடையவராகவும், ஒவ்வொரு மாணவன் மீதும் ஆர்வத்தை வெளிப்படுத்துபவராகவும் மாணவர்களின் பெற்றோருடன் ஆலோசனை கலப்பவராகவும், தனது மாணவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குபவராகவும், சகபாடிகளுக்கும் முகாமைத்துவத்துக்கும் ஆதரவளிப்பவராகவும், உன்னதமான இலக்குகள் கொண்டவராகவும், மாணவர்களது பெறுபேற்றுக்கு வகை கூறுபவராகவும், பொது மக்கள் முன்னிலையில் வாண்மைத்துவம்மிக்க நடத்தை வெளிப்படுத்துபவராகவும், புதிய அறிவைத் தேடுபவராகவும், அதனை மாணவர்களிடையே பகிர்ந்தளிப்பராகவும், இலகு முறையில் பாடத்தைப் போதிப்பவராகவும், எல்லா மாணவர்களது கவனத்தை ஈர்ப்பவராகவும், விளங்குதல் வேண்டும்.

எதிர்காலப் பாடசாலையானது இலத்திரனியல் மூலதனத்தைக் கொண்ட பாடசாலையாகவே விளங்கும் என்பது எதிர்காலம் பற்றிய ஆய்வாளர்களது கருத்தாகும். விளைதிறன்மிக்க எதிர்காலப் பாடசாலையில் கணினி என்பது முக்கிய பங்குவகிக்கும் சாதனமாய் விளங்கும். மாணவர்களானவர்கள் தமது சக மாணவர்கள் ஆசிரியர்களைத் தரிசிப்பதும் அவர்களது கருத்துக்களைச் செவிமடுப்பது கணினி மூலமாகவே இருக்கும் என்பதோடு இது கட்டுப்பாட்டுக் கருவியினடான கற்றலாகவும் இருக்கும். பிள்ளைகளானவர்கள் தமது கற்றலைக் கணினி மூலம் இலகுபடுத்திக் கொள்வதோடு பூகோளமயமாக்கலின் நிலைமைகளின் கீழ் பல்வேறு கலாசாரப் பின்னணி கொண்ட அந்நிய தேசத்தவர்களுடன் சேர்ந்து கற்பதற்கும் தொழிலாற்றவும் கருத்துக்களைப் பரிமாற்றவும் வேண்டியுள்ளமையால் போட்டிச் சந்தை நிலைமைகளின் கீழ் தொழில் வாய்ப்புக்களைத் தேட வேண்டிய நிலையுள்ள மாணவர்களையும் சமூகத்தில் தயார்படுத்த வேண்டியுள்ளது.

எதிர்காலப் பாடசாலையொன்றின் மடிக்கணினியானது மாணவனது நூலகமாக, வீட்டு வேலைக்கான கருவியாகத் தரவு சேகரிப்புக் கருவியாக, பரந்த உலகை மாணவனுடன் இணைக்கும் சாதனமாக விளங்குவதோடு மாணவர்களின் கற்றலை வலியுறுத்தவதிலும் வகுப்பறை நிலைமைகளுக்கப்பால் வலுவுடையதாக இருக்கும் என்பதால் ஆசிரியர்களானவர்கள் கணினி அறிவு நிரம்பப் பெற்றவர்களாக விளங்குதல் அவசியமானதாகும். மாறும் உலகின் கல்வித் தேவையை நிறைவு செய்யக் கூடிய திறனுடையவர்களாக ஆசிரியர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ளல் காலத்தின் கட்டயாயமாக மாறியுள்ளது.

மாணவர்களின் பன்மைத் தன்மையைக் கருத்தில் கொண்ட வகையில் ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடும் அதே வேளை ஜனநாயகப் பாங்குடைய வகுப்பறைமுகாமைத்துவக்கொள்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். மாணவர்களுக்குத் தரமான கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் ஆசிரியர்களது வாண்மைத்துவத்தின் தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும். இலவசக் கல்வி கட்டாயக் கல்வி கல்வியில் சம சந்தர்ப்பம் என்ற நிலைப்பாடுகள் எல்லாம் வெற்றிப் பாதையில் பயணிப்பதற்கு ஆசிரியர்களின் ஈடுபாட்டுடன் கூடிய பங்களிப்பு அவசியமானதாகும். கல்வியில் பின் நவீனத்துவச் சிந்தனைகள் பலமுடையதாக விளங்க வேண்டுமானால் ஆசிரியர்கள் இது தொடர்பான விழிப்புணர்வு உடையவராக விளங்குதல் வேண்டும்.

சிறந்த ஆசிரியரானவர் பாட அறிவுடையவராகவும் அதனை நம்பிக்கையுடன் கற்பிக்கக் கூடியவராகப் பலதரப்பட்ட கற்பித்தல் முறைகள் தொடர்பான அறிவும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கும் திறனும் கற்பித்தலை அறிவுறுத்தலை மேற்கொள்ளக் கூடிய சிறப்பான மொழியறிவு, கற்பித்தல் பிரயோகத்தையும் பிரதிபலிப்புக்களையும் உணரும் திறன், நிலைத்திருக்கக் கூடியதும் விளைதிறன் மிக்கதுமான கற்றல் சூழலை உருவாக்கக் கூடிய இயலுமை கலைத்திட்டத்தையும் அதன் நோக்கத்தையும் புரிந்துகொள்ளும் நிலை, வாண்மைத்துவம் மிக்கவராக அர்ப்பணிப்பு, மனப்பாங்குடையவராக விளங்கும் நிலை, பாடசாலைக்குள்ளும் வெளியிலும் நல்லுறவைப் பேணும் நிலை என்பவற்றை வளர்த்துக் கொள்ளல் என்பன உன்னதமான ஆசிரியத்துவம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாகும். ஆசிரியரானவர் அறிவின் சொத்துடைமையாளர் என்ற நிலையில் இருந்து விடுபட்டு ஆசிரியரானவர், வசதி செய்பவர், வழிகாட்டுபவர் என்ற நிலைக்குப் பூர்ணமாக மாறுதல், வகுப்பறை நேரங்களை மாற்று வகையில் பிரயோகிக்கும் திறன் கொண்டிருத்தல், வேறுபட்ட அணுகுமுறைகளை ஒரே வகுப்பறையில் பிரயோகிக்கும் திறனைக் கொண்டிருத்தல் என்பவற்றோடு பிள்ளைகளை உலகக் கேள்வியைப் பூர்த்தி செய்யக் கூடியவராகவும் உருவாக்க வேண்டும். இதுவே உன்னதமான ஆசிரியத்துவம் தொடர்பான இன்றைய எதிர்பார்க்கையாகவுள்ளது.






**பள்ளி பராயத்தில் ஆசிரியர்களால் நல்ல பழக்கவழக்கங்கள் ஒழுக் கங்களைப் போதித்து வளர்க்கப்படும் பிள்ளை கள்தான் எதிர்காலத்தில் சிறந்த பிரசைகளாக விளங்குவார்கள் என்பது திண்ணம்.**

# அத்திபாரமாகும் ஆசிரியர்கள்



■ அந்தோனி மார்க்

உலக உருவாக்கத்தின் அத்திபாரம் ஆசிரியர்களே! விஞ்ஞானிகளை, பொறியியலாளர்களை, வைத்தியர்களை, பேராசிரியர்களை, கல்விமான்களை உருவாக்கியவர்கள், உருவாக்குபவர்கள் இந்த ஆசிரியர்களே. மேலும் சமயங்களை வழி நடத்தும் துறவிகளும் குருமார்களும் உருவாக்கப்பட்டதும் இந்த ஆசிரியர்களாலேயே ஆகும். இதனால் தான் இந்த ஆசிரியர் பணியை புனிதமான சேவையாகக் கணிப்பதுடன், மதா, பிதா, குரு, தெய்வம் என பெற்ற தாய் தந்தையருக்கு அடுத்த இடத்தை ஆசிரியர்களுக்கு வழங்கி உள்ளார்கள். எனவே மாணவர்களின் அறிவுக் கண்ணைத் திறந்து, சிறந்த அர்ப்பணிப்புடன், உணர்வுடன், எந்த வித லாபநோக்கமும் இன்றி, பாடப்புத்தக அறிவு மட்டுமன்றி பலதுறைப்பட்ட பரந்த அறிவை மாணவர்களுக்கு வழங்கி வரும் இந்த ஆசிரியர்களைப் போற்றி புகழ்ந்து கௌரவிக்க வேண்டியது எம் அனைவரினதும் பெரிய கடமையாகும்.

இன்று நாட்டில் எங்கும் வறுமை நிலவுகிறது. சமாதானம் குறைவுற்று தேசம் அழிவை நோக்கிச் செல்கின்றது. இளைஞர் மத்தியில் போதைவஸ்துப் பாவனை அதிகரித்துச் செல்கிறது. பலாத்காரமான வன்புணர்வுகள் மேலோங்கி வருகின்றன. இதற்குரிய நிவாரணம் ஆசிரியர் சேவையில் தான் தங்கியுள்ளது. ஏன் என்றால் சிறுவர்களையும், மாணவர்களையும் வழி நடத்துபவர்கள் இந்த ஆசிரியர் சமூகமே.

"இளைமையில் கல்வி சிலையில் எழுத்து", "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்றெல்லாம் பழமொழிகள் உள்ளன. பள்ளிப் பராயத்தில் ஆசிரியர்களால் நல்ல பழக்கவழக்கங்கள் ஒழுக்கங்களைப் போதித்து வளர்க்கப்படும் பிள்ளைகள் தான் எதிர்காலத்தில் சிறந்த பிரசைகளாக விளங்குவார்கள் என்பது திண்ணம்.

1944 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பினால் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கை உட்பட பல நாடுகளில் இந்தத் தினம் வருடா வருடம், சிறந்த அர்ப்பணிப்புடன் தமது பணியைச் செய்த ஆசிரியர்களின் ஈடில்லா சேவையை மாணவர்களும் பெற்றோர்களும் உலகமும் நினைவு கூர்ந்து ஆசிரியர்களைக் கௌரவிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் சர்வகலாசாலையில் உயர் கல்வி நிலையத்தில், பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாட விதானங்களில் சமாதான கற்க நெறியையும் மனித உரிமை பாடத்திட்டங்களையும் சேர்ப்பார்களானால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையும் நீடிய சமாதானமும் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. அதேநேரம் நாட்டுக்குத் தேவையான கல்விமான்கள் உருவாக்கப்படுவார்களானால், இவர்கள் மூலமாக நாட்டில் உள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி உற்பத்தியை பன்மடங்காகப் பெருக்க முடியும். அதன் மூலம் வறுமையை அகற்ற முடியும். இளைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்க முடியும். அயல் நாடுகள் பெரிய அபிவிருத்தியை அடையும் போது நாங்கள் விஞ்ஞான தொழில் நுட்பங்களை சீரான முறையில் பயன்படுத்துவதில் பின்தங்கியுள்ளோம். அனுபவமும் தகுதி வாய்ந்த விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடு விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவதற்குத் தடையாக இருந்து வருகிறது. எனவே ஆசிரியர் சமூகம் நாட்டுப் பற்றுடன் செயலாற்றும் பொறுப்புடையவர்களாய் இருக்கிறார்கள். ஆசிரியர் சேவையை மேம்படுத்தும் பார்வையில் 10 செயற்திட்டங்கள் முன்னோடி வகிக்கின்றன.

இவை ஏற்கனவே ஆசிரியர்களால் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:-

1. கற்பித்தல் செயல் முறையில் ஆசிரியர்கள் மன விருப்புடன் விரும்பிய பாடத்துறையில் ஈடுபட்டு ஆத்ம திருப்தி அடைதல்.
2. மாணவர்களின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து அதற்கேற்ற முறையில் அவர்களைக் கையாளுதல்.
3. பொருத்தமான கற்பித்தல் - நூட்ப முறைகளைக் கையாண்டு வழிகாட்டல்.
4. மாணவர்களின் ஒழுக்க நெறியை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேணுதல்.
5. ஆசிரியர்களின் பாடம் புலமையில் மொழிப் பிரிவும் சிறப்புத் தேர்ச்சியும் உருவாக்குதல்.
6. பாடத்திட்டங்களைக் குறித்த கால அட்டவணைக்குள்ளே நிறைவு செய்தல்.
7. ஆசிரியரது வரவீனம் மாணவர்களின் கற்றல் வாய்ப்பைப் பாதிக்காது சமகாலத்தில் பதிலாசிரியர்களை கடமையாற்ற வழி சமைத்தல்.
8. ஆசிரியவளமானது புலமைத்துவ போட்டியின் ஊடாக மேன்மை அடையச் செய்தல்.
9. குறித்த பாடத்தைக் கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களும் பாட விதானங்களை சகல மாணவர்களுக்கும் சமமாகக் கற்பிப்பதினால் ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டு போற்றப்படுகிறார்கள்.
10. ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கிடையில் ஏற்படும் முக்கோண சந்திப்பும் புரிந்துணர்வும் கல்வி நிலைமையை மேம்படுத்துகிறது.

**ஆசிரியர் சங்கங்களின் பங்களிப்பு**

இலங்கை ஆசிரியர் சங்கங்கள் 1994 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டுப் பல வகையான திட்டச் செயற்பாடுகளை அவை மேற்கொண்டு வருகின்றன. பல ஆசிரியர் சங்கங்கள் எமது நாட்டில் உள்ளன. இவை ஆசிரியர்களின் தொழில் சார் நலன்களை விருத்தி செய்தவற்குப் பாடுபடுகின்றன. ஆசிரியர்கள் தங்கள் நலன்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆசிரியர் சங்கங்களைப் பலப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

பல நூற்றுக் கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் இன்னமும் நிரந்தர ஆசிரியர் நியமனங்கள் இன்றி சம்பளக் கொடுப்பனவுகள் இன்றி கண்ணீரோடு அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள், ஆளுநர் தரப்புக்களின் பழிவாங்கல் மூலம் பல கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறான அநீதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது ஆசிரியர் தொழிற் சங்கங்களின் கடமையாகும். கடந்த காலங்களில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் ஏனைய அரச உத்தியோகத்தர்களை விட குறைவாக இருந்ததால் பலர் ஆசிரியத்தொழிலை நாடவில்லை. ஆனால் சம்பளம் கணிசமான அளவு கூடிய போது பலர் ஆசிரியத் தொழிலுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் இன்றுள்ள விலைவாசி உயர்வின்படி ஓர் ஆசிரியரின் சம்பளம் மிகவும் குறைவானது.

இவற்றை நிவர்த்தி செய்து சம்பள அதிகரிப்பு மற்றும் விசேட சலுகைகளையும் அரசு வழங்க முன்வரல் வேண்டும். போருக்குப் பின்பு சில பாடசாலைகள் இயங்காத நிலையில் உள்ளன.

வடமாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளும் திறக்கப்படல் வேண்டும்.

இன்னும் நிரப்பப்பட வேண்டிய ஆசிரியர்கள் வெற்றிடங்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டு, கடந்த 30 வருடங்களாகப் பின்னடைவு கண்டிருந்த கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதன் மூலம் மாணவர்களின் உயர் கல்விக்கும் தொழில் வாய்ப்புக்கும் ஊக்கமளிக்கப்படல் வேண்டும். ஆசிரியத் தொழிலில் நீண்ட காலமாக நிலவி வரும் முக்கிய பிரச்சினைகள் பின்வருமாறு இனம் காணப்பட்டுள்ளது.

1. நேரமுகாமைத்துவம்
2. தொழில்சார் நெருக்குதல்
3. அடைவுத் தேவை
4. வெகுமதிபெறல்

என்பனவே அவையாகும். கருத்தினை தேடல் நெருக்குதல் என்று கூறும் போது மாணவர்களின் ஒழுக்கப் பிரச்சினை மாணவர்களுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள் நேரத்தை கட்டுபடுத்த முடியாத நிலை அதிக ஆவணங்கள் பூரணப்படுத்த வேண்டிய நிலை தெளிவற்ற நிர்வாக ரீதியான எதிர்ப்பார்ப்புக்கள் ஆசிரியர்களுக்கிடையே கூட்டு ஒற்றுமை, கூட்ட பொறுப்பு இன்மை போன்றனவாகும். பாடசாலை கல்வியை முடித்து வெளியேறிய மாணவன் உயர்வடைந்து உயர் பதவியைப் பெறும் போது தன்னைப் படிப்பித்த ஆசிரியரின் பாதம் பணிந்து நன்றி கூறுவானாக இருந்தால் அவன் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருப்பான். உயிர் காக்கும் வைத்தியர்களை, பொறியியலாளர்களை, வழக்கறிஞர்களை, வங்கியாளர்களை, கல்விமான்களை, பொருளாதார நிபுணர்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிகவும் குறைவு. இதனால் இவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாழ்கின்றன. மாணவர்களுக்குக் கற்பிக்கிறோம் என்ற மனநிறைவை விட அவர்களுக்குப் பெரிதாகப் பலன் ஒன்றுமில்லை. கற்பித்தல் என்பது சிரமமான காரியம் என்பதைக் கற்றவர்களே அறிவார்கள். இவை யாவற்றுக்கும் மேலாக நாட்டின் அபிவிருத்தியின் அத்திபாரமாக மூல ஆதாரங்களாக திகழ்வது ஆசிரியர் சமூகங்களே. கற்றல் கற்பித்தல் என்பதுவே இவர்களின் தாரக மந்திரம். இதனால் தான் இவர்களைப் போற்றவும் புகழவும் கௌரவிக்கவுமே இந்தத் தினத்தை ஆசிரியர் தினமாக ஐ.நா. அனுசரணையுடன் உலகம் இன்று கொண்டாடுகின்றது.

எனவே நம் அனைவரையும் கல்விமான்களாக உருவாக்கிய ஆசிரியர் சமூகத்தின் அடி பணிந்து, எமது நன்றியையும் ஆதரவையும் தெரிவிப்போமாக! வாழ்க ஆசிரியத்துவம்! வளர்க அவர்தம் பணி!






# அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர் பணி மிளிர வாழ்த்துகிறேன்



என்னை இந்த நிலைக்குயர்த்திய ஆசான்களுக்கு தலை சாய்த்து அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர் சேவை செழித்தோங்க அவர்கள் வாழ்வு வளம்பெற அனைத்து ஆசிரியர்களையும் மனதார இந்நாளில் வாழ்த்துகின்றேன். சர்வதேசமெங்கும் 55 மில்லியனுக்குமேற்பட்ட ஆசிரியர்கள் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். எமது நாட்டிலும் 40 லட்சத்துக்கு மேற்ப்பட்ட மாணவர்களுக்கு 2லட்சத்துக்கு மேலான ஆசிரியர்கள் தமது உன்னதமான சேவையை வழங்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இன்றைய இளையோர்களிடையே அதிகரித்து வருகின்ற வன்முறைகள் போதைப் பொருள்பாவனை, நெறி பிறழ்வு, கற்றலில் நாட்டமின்மை போன்ற முரண் நிலை சிந்தனையிலிருந்து மாணவர்களை மீட்டெடுக்க ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவை பாடசாலை உள்ளேயும் வெளியேயும் வேண்டப் படுகின்றது. ஆசிரியர்கள் சமூகத்தின் முக்கிய வழிகாட்டி. அவர்கள் கற்பித்தலுக்கு மேலாக மாணவர் களின் ஆலோசகர்களாகவும் நண்பர்களாகவும் தொழில்வழிகாட்டுநர்களாகவும் பாதுகாவலர்களாகவும் முன்மாதியான வர்களாகவும் நம்பிக்கைக்குரியவாகளாக இருந்து இந்த நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய உன்னதமான பிரசைகளை உருவாக்க உழைக்க வேண்டுமென அனைத்து ஆசிரியர்களையும் விநயமாக வேண்டிநிற்கிறேன்.

உங்களின் வளமான எதிர்கால நல்வாழ்வுக்கு என்றும் எனது நல்வாழ்த்துக்கள்.

இ.இந்திரராசா, வடமாகாண சபை உறுப்பினர், வவுனியா மாவட்டம்.

## அறிவுக் கண் திறந்தோரே...!

இந் நாளே
உம் நாளாம் -
இல்லை
எந் நாளும்
உம் நாளாம்

வாழ்க்கை களத்தில
வீழ்ந்திடாமல் -
எமக்கு
அறிவு அரண்
அமைத்தவரே..!

அறிவு ஆயுதம்
நாம் சுமக்க -
ஆரம்
அறிவைத்
தூண்டியவரே
தினம் தினம்
வாழ்ந்திடவே -
அறிவுத்
தானம்
விதைத்தவரே

சன்னங்கள் போல
எண்ணங்கள்
பாய எம்மவர்
வாழ்க்கையின்
சின்னங்கள்
ஆனவரே

ச.சுரபி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



## விரும்பத்தக்க மாணவராக நம்மை நாமே செதுக்குவோம்

காலையில் எழுவேன் கடன்களை முடிப்பேன்
கடவுளைத் தொழுவேன் கவனமாய் படிப்பேன்
கதைகள் படிப்பேன் கவிதைகள் புனைவேன்
கட்டுரை எழுதுவேன் கற்பனையில் மிதப்பேன்

பத்திரிகை வாசித்து பகுத்தறிவுடன் சிந்திப்பேன்
பாடசாலை வேலைகளைப் பக்குவமாய்ச் செய்திடுவேன்
பதற்றமின்றிப் பரீட்சையை எழுதிடுவேன்
பாராட்டுக்களுடன் பரிசிலும் பெற்றிடுவேன்

சித்திரம் வரைவேன் சிற்பங்கள் செதுக்கிடுவேன்
சங்கீதம் இசைத்திடுவேன் சந்தோசப்படுத்திடுவேன்
சின்னக் கதை சொல்லிச் சிந்திக்க வைத்திடுவேன்
சிந்தனைத் தூறல்களை சித்திரமாய் வடித்திடுவேன்

நண்பர் நண்பிகளோடு நட்புடன் பழகுவேன்
நல்லதையே சிந்திப்பேன் நன்மையே செய்திடுவேன்
நேரசூசியைப் பின்பற்றி நேரந்தவறாமற் கற்பேன்
நேர்மையுடன் வாழ்ந்து நீதியை நிலைநாட்டிடுவேன்

அன்னை தந்தையை வணங்கிப் போற்றிடுவேன்
அதிபர் ஆசிரியரை மதித்து வாழ்ந்திடுவேன்
அகந்தையை அடக்கி அன்பை விருத்தி செய்வேன்
அனைவரையும் அரவணைத்து ஆனந்தமாய் வாழ வைப்பேன்

பலங்களை வளர்த்திடுவேன் பலவீனங்களை நீக்கிடுவேன்
பலசாலி ஆகிடுவேன் புத்திசாலியாய் நடந்திடுவேன்
பெண்ணடிமை நீக்கி பெண்ணுக்குப் பெருமை சேர்த்திடுவேன்
புரட்சிக்கவி பாரதிக்குப் புத்துயிர் அளித்திடுவேன்

வானொலி கேட்பேன் வம்புகள் பேசமாட்டேன்
தொலைக்காட்சி பார்ப்பேன் தொல்லைகள் கொடுக்கமாட்டேன்
இணையத்தளம் பார்ப்பேன் இழுக்குத் தேடமாட்டேன்
மின்னஞ்சல் அனுப்பிடுவேன் மிரட்டல் செய்யமாட்டேன்

ஆராய்ச்சி செய்திடுவேன் ஆய்வுக்கட்டுரை எழுதிடுவேன்
அண்டவெளி விந்தைகளின் அறிவை வளர்த்திடுவேன்
ஆழ்கடல் தகவல்களை ஆழமாய் ஆய்வு செய்வேன்
அன்பை விருத்தி செய்து அழிவைத் தடுத்திடுவேன்

புத்தாக்கம் செய்து புதியன படைத்திடுவேன்
பயிர்கள் வளர்த்திடுவேன் பசுமைப் புரட்சி செய்திடுவேன்
சகோதர சகோதரிகளுக்கு சமத்தவம் அளித்திடுவேன்
சமாதானமாய் வாழ்ந்து சாதனை படைத்திடுவேன்

உண்மைகள் பேசிடுவேன் உத்தமனாய் வாழ்ந்திடுவேன்
உடற்பயிற்சிகளால் உடலுக்கு உரமேற்றிடுவேன்
விருதுகள் பலபெற்று வீராங்கனையாகிடுவேன்
விரும்பத்தக்க மாணவராக என்னை நான் செதுக்கிடுவேன்

க. கோவிந்தராசா, ஆசிரியர்.

# ஆசானே நீ வாழ்க....

அகிலம் போற்றும் இந்நாளம்
ஒக்ரோபர் ஆறிலே
அறிவுப் பசியைப் போக்கிய என்
அன்னை காட்டிய அன்பான ஆசானே
நீர் காட்டிய பாதையிலே நான்
இன்று சென்றாலும்– உன் புகழ்பாட
நான் மறக்கவில்லை– வாழ்த்துகின்றேன்
இன்று மட்டுமல்ல – என்றுமே
என் அன்பான ஆசானே
உன் சேவையைப் போற்றி வாழ்த்துகிறேன்
இந்நாளில் – நீர் வாழி! வாழி! வாழியவே!!



பட்டங்கள் பல பெற்று
பாரினிலே நான் உயர்ந்திட
பகல் இரவால்– நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமும் நீர் பட்ட
காயங்கள்– இன்று பட்ட மரமாய் இல்லாமல்
பசுமை மரமாய் பசுந்தளிர் விட்டு
உம் முன்னே செல்கிறது
நானும் ஒரு ஆசானாய் என் அன்பான ஆசானே

'அ' எனச் சொல்லித் தந்து
பள்ளி மடியிலே என்னை அரவணைத்து
பாச மழையில் நனைத்து– பக்குவமாய்
நீர் போதித்த போதனைகள்– அத்தனையும்
இன்று சாதனைகளாய் திகழ்கிறது
உம் பெயரைச் சொல்லிக் கொண்டு
என் அன்புள்ள ஆசானே
எண் எழுத்தோடு– ஏணிப் படியாய்
உயர்ந்திட நல் ஒழுக்கமும் கற்றுத் தந்து
என்றுமே நான் உயர்ந்திட
அன்னையாய் தந்தையாய் உடன்பிறந்தோராய்
உற்ற நண்பராய் எம் நிலை
மறந்து எமக்காக நீர் சேவையை
என்றுமே மறவேன்
உன் பணி செய்து என்னையும் ஓர்
ஆசானாய் செதுக்கிய சிற்பியே
என் அன்புள்ள ஆசானே
வாழ்த்துகிறேன் இந்நாளில் நீர்
வாழ வாழ்த்துகிறேன்
வாழ்க! வாழ்க! வாழ்க....!!

செ.பாஸ்கரன்,
ஆசிரியர்.

# என்றும் மறவோம் ஆசான்களே...

அன்னையின் அரவணைப்பிலும்
தந்தையின் பாசப்பிணைப்பிலும் இருந்து
ஐந்து வயதில் பாடசாலை என்னும்
புனித பூமியில் நாங்கள் கால்பதித்தபோது
ஆசான் என்னும் தெய்வத்திடம்
அன்னையின் அரவணைப்பும்
தந்தையின்
பாசப்பிணைப்பையும் கண்டோம்

அன்பின் இனிய அசான்களே
நாம் செய்யும் தவறுகள் அறிந்து
எமை நல்வழிப்படுத்துகிறீர்கள்
எம்மவர் திறமைகளை வெளிக்
கொணர்ந்து
பார்போற்றும் கலைஞர்கள் ஆக்குகிறீர்கள்
கல்வியிலே கலங்கி நின்றால்
எமை அரவணைத்து கல்வித் தேனை
ஊட்டுகிறீர்கள்
வாழ்வின் சவால்கள் பற்றிக் கூறி
எமை சாதனைச் சிற்பிகள் ஆக்குகிறீர்கள்
எம் இனிய ஆசான்களே
நாம் வாழும் காலம் வரை
உமை மறவோம்
உங்கள் பண்பைப் போற்றி நிற்போம்
மண்ணகம் மறவா மாண்பு மிகு
மாணவர்களாய்...

கஜானி பிறேம்குமார்.
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## வாழ கற்பித்தவர் ஆசான்



ஆசானே நீ வாழ்க...
அம்மாவை நான் கண்டதுண்டு ஆனால்
அம்மா என்ற வார்த்தையை
எழுத கற்பித்தவர் ஆசான் கல்விக்கு
கலைமகள் ஆனால் கல்வியை இதுதான்
என்பதை உலகுக்கு போதித்தவர் ஆசான்
மண்டியிட்டு கிடந்த என்னை மண் மீது 'அ'
எழுதி அறியத்தந்தீவர் ஆசான்
உயிர் எழுத்து பன்னிரண்டை என் உயிர்
வாழ கற்பித்தவர் ஆசான்
குருத்தோலை ஏட்டில் உயிர் எழுத்து
பன்னிரண்டை உயிர் கொடுத்து புகட்டியவர்
ஆசான் பொய்யாக வாழ்ந்த என்னை
மெய்யாக வாழ் என்று மெய்யெழுத்து
பதினெட்டை போதித்தவர் ஆசான்
ஆண்டில் ஒருநாள் அவரை
நெஞ்சில் நிறுத்தி ஆனந்தமாய்
கொண்டாடுவோம் ஆசிரியர் தினத்தை

வீ.சந்திரபாலன், புங்குடுதீவு.





க.குணரத்தினம்,
யா/உசன் இராமநாதன் ம.வி.

# மாற்றமுற வேண்டிய மாணவப் பண்புகள்




இன்று சர்வதேச ஆசிரியர் தினம். எமது அறியாமை இருளை நீக்கி அகக் கண்களைத் திறந்து மெய்ஞ்ஞான ஒளியை இதயக் கமலத்தில் ஒளிரச் செய்கின்ற ஆசான்களை ஒரு சேர மனதில் நிறுத்தி வணங்கும் நாள். மனித வாழ்வின் நெடிய பயணத்தில் இடர்களையும், சவால்களையும் எதிர்கொண்டு கரடு, முரடான கல்விப் பாதையைச் செப்பனிட்டுத் தருகின்ற உத்தமர்களை உள்ளத்தில் இருத்தி உவந்தேற்றும் புனிதநாள். எத்துயர் வரினும் அத்துயர் தாங்கித் தன்னிலங்கருதாத பேராசான் பெருந்தகைகளைப் பக்தி கொண்டு போற்றித் துதிக்கும் நன்னாள்.

இன்றைய இந்தப் புனித நாளில் மாணவர் சமுதாயம் ஆசிரியர்களை விழாவின் கதாநாயகர்களாக்கிப் பக்தியோடும், பணிவோடும், பரவசம் தோன்ற பவனியாக அழைத்து வந்து மேடையில் கொலுவிருத்திப் போற்றுகின்றார்கள். துதிக்கின்றார்கள், அன்பளிப்புக்களை வழங்கி ஆசீர்வாதம் பெறுகின்றார்கள். பாமாலைகளாலும், பூமாலைகளாலும் கௌரவப்படுத்துகின்றார்கள், வரவேற்கத்தக்கது. அந்த உயரிய விழுமியத்தைக் காப்பாற்ற வேண்டும். எமது இளைய தலைமுறைக்குக் கையளிக்க வேண்டும். ஆசிரிய மகத்துவமும், மகிமையும் போற்றப்பட வேண்டும். ஒரு தனி மனிதனை, குடும்பத்தை, சமுதாயத்தை, தேசத்தை நாட்டைக் கட்டியாளுகின்ற கல்வியை வழங்கும் ஆசான்களை மதிக்க வேண்டும். இதனால்தான் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றனர் முன்னோர்.

இந்த ஆரவாரங்களும், கோலாகலமான விழாவும் உண்மையில் பற்றுறுதியுடனும் உண்மையான ஆசிரிய விசுவாசத்துடனும் உன்னதமாக மதிக்கப்படுகின்றதா என்பதுதான் கேள்வி. இன்றைய மாணவர், சமுதாயம் ஆசிரியர்களை மதிப்பது குறைந்து வருகின்றது. மகிமைகளைக் குறைத்து அவர்களை மாசுபடுத்துகின்றார்கள். ஆசிரியர்களின் கட்டளைகளை மீறுதல், தட்டிக் கழித்தல், உதாசீனம் செய்தல், சாட்டுப் போக்குச் சொல்லித் தப்பித்துக் கொள்ளுதல் எனப் பட்டியல் போட்டுக் காட்டலாம்.

இவற்றைவிட மாணவர்கள், ஆசிரியர்களுடன் தகாத வார்த்தைகளால் பேசுதல், எதிர்த்துப் பேசுதல், கையோங்குதல், அச்சுறுத்தல் என பலவற்றையும் கூசாமல் செய்து முடிக்கின்றார்கள். ஆசிரியத்துவம் கண்முன்னே குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள், சுதந்திரங்கள், சட்ட வரைவுகளைத் தங்களுக்குப் பலமாக வைத்துக் கொண்டு தன்னிச்சையாகவும் சேர்த்தும் ஆசிரியர்களை அவமானப்படுத்தல், வம்புக்கு இழுத்தல், அவரைப் பற்றி அவதூறாகக் கதைத்தல் போன்ற கைங்காரியங்களைச் செய்து வருகின்றனர். உண்மைக்குப் புறம்பான கதைகளைப் புனைந்து சமுதாயத்துக்குப் பரப்புகின்றார்கள். தம்மீது அக்கறை கொண்டு திருத்த முற்படுகின்ற, தண்டிக்கின்ற ஆசிரியர்களுக்கு எதிராப் பரப்புரைகள் செய்தல், பிரசுரங்களை வெளியிடல், இணையத் தளங்களில் அவர்களைப் பற்றிக் கேவலமாக செய்திகளைப் பதிவேற்றல், அவர்களைக் கொச் சைப் படுத்தல் போன்றவற்றை அதற்குப் பழிவாங்கல்களாகச் செய் கின்றனர். மாணவர்கள் கருத்தை மந்திரம் என்று கருதி ஊடகங்களும் துருவி ஆராயாது ஆசிரியர் பற்றிய எந்தத் தகவல்களையும் மேலும் ஊதிப் பெருப்பித்து ஊர்வலத்தில் வர விடுகின்றன.




சிறுவர் உரிமைகள் பற்றிப் பேசும் அமைப்புக்களும், நிறுவனங்களும் கூட மாணவர் பக்கமே சார்ந்து நிற்கின்றன. சிறுவர்களைப் பேச முடியாது, எச்சரிக்க முடியாது. தண்டனை வழங்க முடியாது. இவைகளை சிறுவர் துஷ்பிரயோகமாகச் சித்திரிக்கின்றனர். மாணவர்களுக்கு அடித்தாலோ, எச்சரிக்கை செய்து நெறிப்படுத்த முயன்றாலோ ஆசிரியர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டுக் குற்றப் பணமும் கட்ட நேர்ந்திருக்கின்றது. சிறுவர் உரிமைச் சட்டங்கள் ஆகிய பொறிகள் ஆசிரியர்களை நோக்கி இயங்கு நிலையில் முன்னிறுத்தப்பட்டுள்ளன. எந்தளவுக்கு மாணவர்கள் சார்ந்து, நிபந்தனைகளும், சட்டங்களும் இயற்றப்படுகின்றதோ அந்தளவுக்கு இளைய தலைமுறையின் எதிர்காலம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது என்பது நிதர்சனமாகிவிட்டது. இது இன்று அனைவரும் அறிந்ததே. "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல பிள்ளைக்கு ஒரு வார்த்தை" இது சான்றோர் கூற்று.

திருத்த வேண்டியவர்களை உரிய இடத்தில், உரிய நேரத்தில் திருத்த வேண்டும். கண்டிப்பும் தண்டனையும் இல்லாவிட்டால் மாணவர்கள் எதனைச் செய்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்குப் பாடசாலைச் சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

ஒரு நல்ல சமூகத்தின் திறவுகோல் பாடசாலை. நல்ல சமூகத்துக்கு நற்பிரசைகளை உருவாக்கிக் கைய ளிப்பதற்கான ஒழுக்க விழு மியங்களின் கட்டளைக் கல்லாக விளங்குவது பாடசாலை. இப்படியெல்லாம் இருக்க மாணவர்களுக்கான கண்டிப்பும், தண்டனையும் தளர்த்தப்பட்ட நிலையில் மாணவர்கள் சர்வ சாதாரணமாக ஒவ்வாத செயல்களில் ஈடுபடுகின்றார்கள். போதைப்பொருள் பாவனை தொடக்கம் ஆபாசம் வரை கூசாமல் ஈடுபட வைத்தவை மாண வர்களுக்கான உரிமைகள். இதனால் மாணவர்கள் இன்று செய்யும் எந்த வொரு தீய செயல்களையும் கண்டு நாம் வியக்கவோ வியாக்கியானம் செய்யவோ வேண்டியது இல்லை.

"அடித்து வளர்க்காத பிள்ளையும் முறிச்சு வளர்க்காத முருங்கையும் வீண்" என்று சொன்னவர்களும் சான்றோர்கள்தான். பட்டந்தீட்டிப் புடம் போட்டு எடுக்கின்ற மாணிக்கம்தான் ஒளிவீசும். அதன் மகிமை துலங்கும். ஆனால் அது ஒளிர்வதற்கு முன் எத்தனையோ வலிகளைத் தாங்கித்தான் இருக்கும். ஆசிரியர்கள் பயிற்றப்பட்டு முன் சேவைப் பயிற்சி வழங்கப்பட்டு கல்வி உளவியலும் மாணவர் உளவியலும் தெரிவித்தவர்களாகவே வகுப்புக்குள் பிரவேசிக்கின்றனர். அப்படி மனச்சாட்சியற்ற முறையில் மனித நேயம், ஜீவகாருண்யங் களைக் கடந்து எந்தவொரு ஆசிரியர் களும் கொடூரமாக நடந்து கொள்ள மாட்டார்கள்.

ஆசிரியர்களைக் கொடூரமானவர்களாகப் பார்த்துவரும் சிறுவர் அமைப்புக்கள், சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் மாணவர்களால் ஆசிரியர்களுக்கு விடுக்கப்படும் சவால்கள், நெருக்கடிகளை அறியாமல் இல்லை. அவர்கள் சிறுவர் உரிமை சுதந்திரம் என்ற சட்டப் பத்திரங்களை வைத்து வியாக்கியானம் செய்பவர்களாக மட்டும் இருக்கின்றனர். சிறுவர் உரிமையும், சட்டங்களும் பெற்றுத் தந்த பெறுபேறுகள்தான் ஆசிரியரை மாணவன் அறைக்குள் வைத்து அடித்ததும் விளையாட்டு மைதானத்தில் அதுவும் ஒரு வலய மட்ட நிகழ்வில் வைத்துத் தாக்கியதும் ஆகும். இன்னும் இவ்வாறு புதிய அத்தியாயங்கள் திறக்கப்படும். அதனையும் கண்டு நாம் வியப்பதற்கில்லை. ஏன் என்றால் ஒரு மனிதனின் மிகக் கொடூரமான செயல் ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்வது. அதுவும் அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அரங்கேற்றப்பட்டமை அகிலமறிந்ததே.

இன்று மாணவர் சமுதாயம் இலக்குத் தவறிய பாதையில் பயணிப்பதைப் பலரும் கண்டும் காணாமலும் இருக்கின்றனர். மாணவர்கள் ஆசிரியர்களை எச்சரிக்கின்றார்கள். தண்டித்தால் நடவடிக்கை எடுப்போம் காவல் துறைக்குச் செல்வோம் எனச் சவால் விடுகின்றார்கள். எந்த ஆசிரியர்களும் தங்களைப் பாதுகாக்க வேண்டியவர்களாக உள்ளனர். பரிதாபப்பட்டுப் பலன் இல்லை.

இன்னோர் விடயம் இங்கு குறிப்பிடாக வேண்டும். ஆசிரியர்கள் தம்மிடையே பரஸ்பர ஒற்றுமை, சகிப்புத் தன்மை, இதய சுத்தியுடன் பழகும் பண்பு என்பவற்றைத் தம்முள் வளர்த்துக் கொள்ளாமையும், புரிந்துணர்வு இல்லாத நிலைமையும் ஆசிரிய மாணவர்களிடையே விரிசலை ஏற்படுத்துகின்றது. ஓர் ஆசிரியர் பதவி, தகுதிகளால் உயர்வது இன்னோர் ஆசிரியருக்குப் பிடிக்காது. ஒரு ஆசிரியர் சாதனையாளராக இருந்தால் சில ஆசிரியர்களுக்குப் பிடிக்காது வினைத்திறன் மிக்க செயற்பாடுகளால் பெயர் துலங்கினால் பிடிக்காது பாராட்டுக்களையோ, புகழாரங்களையோ விரும்பமாட்டார்கள். இதனை எதிர்கொள்ள முடியாதவர்களான வறட்டுக் கௌரவம் கொண்ட ஆசிரியர்கள் பிள்ளைகளையே பகடைக் காய்களாகக் கொண்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்குக் களங்கம் ஏற்படும் வகையில் காரியங்களைச் செய்யத் தூண்டிவிடுகின்றனர்.

பின்னணியில் இருந்து மாணவர்

> ஆசிரியர்களைக் கொடூரமானவர்களாகப் பார்த்து வரும் சிறுவர் அமைப்புக்கள், சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் மாணவர்களால் ஆசிரியர்களுக்கு விடுக்கப்படும் சவால்கள், நெருக்கடிகளை அறியாமல் இல்லை.

களை ஏவி விடுகின்றனர்.

இன்று எம்மவரைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு மோகம், அளவுக்கு மிஞ்சிய பணப்புழக்கம் அதிகரித்துள்ளது. அதனால் ஏற்பட்டுள்ள ஆடம்பரவாழ்க் கைக் கோலங்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான இடை வெளியைக் கூட்டிவிட்டது. ஆசிரியர் சாதாரண ஒரு மோட்டார் சைக்கிள் களுடன் வருபவர்களாக இருந்தால் மாணவன் அதனை விடத் தரம் கூடிய விலை உயர்ந்த மோட்டார் சைக்கிளுடன் வான், கார் வைத்திருப்பவனாக இருப்பான். ஆசிரியர் சாதாரண ஒரு கைத்தொலைபேசி வைத்திருக்க மாணவன் பன்மடங்கு வசதிகள் கொண்டதும் பெறுமதியானதுமான கைத் தொலைபேசிகளை வைத்திருக்கிறான். நினைப்பதைப் பெறுகின்றான். இத்தகு நிலையில் அவர்கள் ஆசிரியர்களை மதிக்கத் தயங்குகின்றார்கள். அத்தனை எண்ணங்களும் நிறைவேற கஷ்டங்கள், பொறுப்புக்கள் உணராத அந்தப் பருவத்தில் மாண வர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லு கின்ற எல்லாமே "புறக்குடத்து நீரா கவே" அமையும். வார்த்தைகள் கசக் கும், அறிவுரைகள் வெறுக்கும், கற்பித்தல் சலிக்கும்.


எனவே மகத்துவமானவர்களாகப் பார்க்கப்பட்ட, போற்றப்பட்ட ஆசிரியத்துவத்துவம் இன்று மாண்பு இழந்து, மழுங்கடிக்கப்பட்டு, மகத்துவத்தை இழந்த நிலையில் மாணவர்கள் முன்னெடுக்கும் ஆசிரியர்தினம் தேவைதானா? எனத் தோன்றுகின்றது. "கடவுளை நம்பாதவன் கற்பூரம் எரித்தென்ன காவடி எடுத்தென்ன" திரிகரண சுத்தியுடன் இதனைச் செய்தால் ஏற்பது பொருத்தமுடையது. இன்றைய நாளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆசி வழங்கி அவர்களின் கௌரவங்களைப் பெறுவது நல்ல விழுமியம். ஆனால் ஆசிரியரின் தண்டனையும், கண்டிப்பும் காழ்ப்பு ணர்வை ஏற்படுத்த ஏதேதோ நினைக் கும் மனங்கள் மாயைத் திரைக்குப் பின்னால் இவ்வளவு கோலாகலமாக விழா எடுப்பது "காலாலே உதைத்து விட்டு பாலாலே அபிஷேகம் செய்தது போல" இருக்கும் அல்லவா? இத்த கைய நிலையில் கௌரவத்தைப் பெற மனங் கூசாதா? "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயிலாக இருக்கக் கூடாது" எதனையும் பகட்டுக்காகச் செய்யக்கூடாது. உணர்வுபூர்வமான தாக இருக்க வேண்டும். அப்படியா யின் மாணவர்களின் மனங்கள் மாறவேண்டும்.

எல்லா ஆசிரியர்களுமே ஏதோ ஒரு வகையில் மாணவர்களின் முன்னேற்றம் எதிர்காலம் என்ற தூரநோக்கங்களை நெஞ்சில் வரித்துக் கொண்டே கரிசனையும், கண்ணியமும் உடையவர்களாகக் கடமையாற்றுகின்றார்கள். இன்றைய கல்விக் கொள்கைகளும், மாணவர் தேர்ச்சி மட்டங்களும் மாணவர்களின் அதி உச்சத் திறன்களை வெளிக் கொணர வேண்டும் என்பதையே கட்டியம் கூறி நிற்கின்றன. அதைவிட ஆசிரியர்களுக்கான மேலதிக வேலைகள், நிர்வாகப் பகிர்வு வேலைகள், பாட முன்னாயத்த வேலைகள் எனக் கற்பித்தலுக்கு அப்பால் வேலைகள் அதிகம். இத்தனை சுமைகளுடன் கடமையாற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளும், சுதந்திரங்களும் எந்தளவுக்கு எதிர்காலத்தில் ஆபத்தையும், அச்சுறுத்தலையும் தருமோ அந்தளவுக்குத் தம்மையும் மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். மாணவர்களின் கடும் போக்கு, எதிர்த்துப் பேசு தல், கட்டளைகளுக்குப் பணியாமை, தகாத வார்த்தைப் பிரயோகம், பாடசாலைகளுக்குள்ளேயே போதைப் பொருள் பாவனை, துஷ்பிரயோகங்கள் என இப்படியே இவை தொடருமாக இருந்தால் "இருக்க ஒரு கதிரை இருபதாம் திகதி சம்பளம்" என்ற கோட்பாட்டிலேயே கடமையாற்ற வேண்டும் என்பது எதிர்காலத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.



## ஐஸ்கிறீம், ஜூஸ் மாதிரிகள் சேகரிக்கும் பணி தீவிரம்

யாழ். மாநகரசபை பிரிவில்



யாழ்ப்பாணம்.ஒக்.6

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட ஐஸ்கிறீம் தயாரிக்கும் நிலையங்கள் மற்றும் ஜூஸ் தயாரிக்கும் நிலையங்களில் இருந்து அதன் மாதிரிகளைச் சேகரிக்கும் பணியில் சுகாதார பகுதியினர் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

மாநகரசபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.ஏ ஜீவநாதன் தலைமையிலான சுகாதார பரிசோதகர் குழுவினர் ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் மாதிரிகளைச் சேகரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

மாநகரசபைக்கு உட்பட்ட சகல பிரதேசங்களிலும் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் தயாரிக்கும் நிலையங்களில் இந்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

சுகாதாரப் பகுதியினரால் சேகரிக்கப்பட்ட குறித்த ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும் என்று- பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் கே.ஏ. ஜீவநாதன் தெரிவித்தார்.

குறித்த ஐஸ்கிறீம் மாதிரிகளின் அறிக்கைகள் விரைவாக பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நிலையங்களில் இருந்து பெறப்பட்ட ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ்களில் ஏதாவது கிருமித் தொற்றுக்கள் அறிக்கையில் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவை சீல் வைத்து மூடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-17)

# குடிதண்ணீர் தேவையை நிறைவேற்ற முடியவில்லை

## சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

வலி. வடக்கு, ஒக்.6

சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் என்பன கலந்து வரும் நிலையில் மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமையை பிரதேச சபை எதிர்கொண்டுள்ளதாக பிரதேச சபையின் தலைவர் தியாகராசா பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"சுன்னாகம் உட்பட அதனை அண்டிய பல பகுதிகளில் உள்ள கிணறுகளிலும் தற்போது கழிவு ஒயில் கலந்து பெரியளவில் சேதத்தை ஏற்படுத்தியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்களுடைய குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் பிரதேச சபையால் குடி தண்ணீர் கிணறுகள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க பிரதேச சபை நடவடிக்கைகளை முன்னெடுத்து வழங்கி வருகின்றது.

இதற்கு அமைவாக பிரதேச சபையால் கொள்வனவு செய்யப்பட்ட 13 தாங்கிகளும் மற்றும் யாழ்.மாவட்ட செயலகத்தின் இடர் முகாமைத்துவ நிறுவனத்தால் வழங்கப்பட்ட மூன்று தாங்கிகளுமாக 16 தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் நிரப்பப்பட்டு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

பிரதேச சபையால் காலை, மாலைகளில் குறிப்பிட்ட தாங்கிகளில் நீர் நிரப்பப்படுவதுடன் மதிய வேளைகளில் வடமாகாண விவசாய அமைச்சால் அனுப்பப்படும் தாங்கியால் குறிப்பிட்ட தாங்கிகளில் நீர் நிரப்பப்படுகின்றது.

குறித்த தாங்கிகள் மட்டும் மக்களின் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. மேலும் பல இடங்களில் உள்ள மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கு பிரதேச சபையிடம் போதிய நீர் நிரப்பும் தாங்கிகள் இல்லாத நிலையில் யாழ். மாவட்ட செயலகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 30 வரையிலான நீர்த் தாங்கிகளின் தேவைகள் காணப்படுகின்றன"- என்றார்.

இதேவேளை - பிரச்சினை ஏற்பட்ட நிலையில் பொது அமைப்புக்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள், அரச உயர் அதிகாரிகள் பலரும் பல்வேறு உதவிகள் மேற்கொள்வதாகக் கூறிய போதிலும் இது வரையில் யாருடைய உதவியும் கிடைக்கப் பெறாத நிலைமை காணப்படுவதாக பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர். (வ-86)

## கரவெட்டியில் இருவர் டெங்கால் பாதிப்பு

கரணவாய், ஒக்.6

கரவெட்டிப் பிரதேசத்தில் கரணவாய், உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளான இருவர் இனங்காணப்பட்டுள்ளனர்.

கரணவாய் குஞ்சர்கடை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் உடுப்பிட்டியைச் சேர்ந்த ஒருவருமே டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதனையடுத்து அந்தப் பகுதிகளில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான புகையூட்டும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் நேற்றுமுன்தினம் காலை ஈடுபட்டனர்.

இதேவேளை - வெளிமாவட்டத்துக்கு சென்று வருவோரே பெரும்பாலும் டெங்கு நோய்க் காவிகளாகக் காணப்படுகின்றனர். டெங்கு நோய்க்கு இலக்கானவர்களில் உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த நபர் அடிக்கடி வவுனியாவுக்குச் சென்று வருபவர் என்றும் அவர் அங்கிருந்தே நோய்க்கு இலக்காகினார். எனவே வெளியிடங்களுக்குச் சென்று வருவோர் மிகவும் அவதானமாக இருக்குமாறு கரவெட்டிப் பகுதி சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (வ-108)

## முதியோர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வட மாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் வட மாகாண முதியோர் நிலையங்களுக்கு உள்ளக விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் வைத்து வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி விளையாட்டு உபகரணங்களை முதியோர் அமைப்புக்களின் பிரதி நிதிகளிடம் கையளித்துள்ளார்.

இதன் அடிப்படையில் வட மாகாணத்துக்கு உட்பட்ட 8 முதியோர் அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம், வதிரி கரவெட்டி பரமானந்தா முதியோர் இல்லம், கோண்டாவில் அன்னை திரேசா இல்லம், புத்தூர் மெதடிஸ்த முதியோர் இல்லம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லம், கைதடி அரச முதியோர் இல்லம், மன்னார் சாந்தோம் முதியோர் இல்லம், வவுனியா சிவன் அம்மன் முதியோர் இல்லம், மடு அன்னை திரேசா முதியோர் இல்லம் ஆகியவற்றுக்கே விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## புற்றுநோய் கிளினிக் மீண்டும் ஆரம்பம்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் புற்றுநோய் கிளினிக் வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமானது.

மருத்துவ நிபுணர் திருமதி கவிதா இந்திரஜித் தலைமையிலான மருத்துவக் குழுவினர் கிளினிக்கில் நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சையளித்தனர்.

அன்றையதினம் நடைபெற்ற கிளினிக்கில் பூநகரி, பளை, வடமராட்சி கிழக்கு தென் மராட்சி ஆகியபிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சை பெற வந்திருந்தனர்.

சாவகச்சேரி மருத்துவ மனையில் மாதத்தின் முதலாவது வெள்ளிக்கிழமை காலையில் புற்றுநோய் கிளினிக் நடைபெறும் என்று மருத்துவ நிபுணர் தெரிவித்தார். (வ-9)

## கம்பர்மலைப் பகுதியில் கைக்குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.6

வல்வெட்டித்துறை, கம்பர் மலை பகுதியில் இரு கைக்குண்டுகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டு நேற்றைய தினம் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன.

கம்பர்மலைப் பகுதியில் உள்ள காணிக்கான பாதுகாப்பு மதில் அமைப்பதற்காக அத்திபாரம் தோண்டும் பணியில் பணியாளர்கள் சிலர் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது நிலத்தில் புதையுண்ட நிலையில் இருகைக்குண்டுகளும் காணப்பட்டன.

இந்தநிலையில் தமது கிடங்கு தோண்டும் பணிகளை கைவிட்ட பணியாளர்கள் இது தொடர்பில் உடனடியாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கினர்.

அதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவம் மற்றும் பொலிஸார் இந்த இரண்டு கைக்குண்டுகளையும் மீட்டதுடன் அந்தப் பகுதிக்கு அண்மையிலுள்ள காணிகளிலும் தேடுதல்களை நடத்தினர். இந்தநிலையில் மீட்கப்பட்ட இரு கைக்குண்டுகளும் நேற்று செயலிழப்பு செய்யப் பட்டன.

இதேவேளை - வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன் 81 மி.மீ. ரக மோட்டார் குண்டு ஒன்றும் இவ்வாறு மீட்கப்பட்டு செயலிழப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ-109-108)

## இம்மாத நடுப்பகுதிகள் பஸ் சேவைகள் விஸ்தரிப்பு

வடமராட்சி, ஒக.6

வடபிராந்திய இ.போ.ச. டிப்போக்களுக்கு புதிய பஸ்கள் கிடைத்ததை அடுத்து மீள ஆரம்பிக்கப்படாத பஸ் சேவைகளும் புதிய பஸ்சேவைகளும் இந்த மாதம் நடுப்பகுதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இ.போ.ச. வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடெங்கும் உள்ள இ.போ.ச. டிப்போக்களுக்கு புதிய பஸ்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் வட பிராந்தியத்தில் உள்ள யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 7 டிப்போக்களுக்கும் தலா 10 புதிய பஸ்களை போக்குவரத்து அமைச்சு வழங்குகின்றது.

7 டிப்போக்களுக்கும் நேற்று முன்தினம் சனி வரை தலா 7 புதிய பஸ்கள் வந்து சேர்ந்துள்ளன. எஞ்சிய பஸ்கள் ஜனாதிபதியின் வடக்கு பயணத்துக்கு முன்னர் கிடைத்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய பஸ்களைப் பெற்றுக்கொள்ளும் வடபிராந்திய இ.போ.ச. டிப்போக்கள் போதிய பஸ் இன்றி இதுவரை ஆரம்பிக்கப்படாத உள்ளூர் பஸ் சேவைகளையும், வெளிமாவட்டங்களுக்கான புதிய பஸ்சேவைகளையும் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளன. ஜனாதிபதியின் வடக்கு பயணத்துக்குப்பின் மீள்சேவைகளும் புதிய சேவைகளும் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-173)

# போதனா மருத்துவமனை கண்ணியல் பிரிவுக்கு உபகரணங்கள் கையளிப்பு

## ஆஸி. றோட்டறிக் கழக அனுசரணையில் இலங்கை றோட்டறிக் கழகங்கள் வழங்கின

யாழ்ப்பாணம்.ஒக்.6

ஆஸ்திரேலியாவில் உள்ள றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் இலங்கையில் உள்ள றோட்டறிக் கழகங்களின் ஏற்பாட்டில் யாழ். போதனா மருத்துவ மனையில் கண்ணியல் பிரிவுக்கு 15 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் முழுமையாக நேற்று முன்தினம் கையளிக் கப்பட்டன.

மூன்று கட்டமாக வழங்கப்பட்ட உபகரணங்களின் பத்திரங்களை ஆஸ்திரேலியா மற்றும் கொழும்பில் இருந்து வருகை தந்த றோட்டறிக் கழகத்தினர் மற்றும் யாழ். மாவட்டத்தில் உள்ள கழகங்களின் உறுப்பினர்கள் இணைந்து மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஸ்ரீபவானந்தராஜாவிடம் கையளித்தனர்.



இது தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் தெரிவிக்கையில்;

"யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண்ணியல் பிரிவுக்கு றோட்டறிக் கழகம் ரூ.15 மில்லியன் பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளனர். இந்த உபகரணங்கள் 3 கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மருத்துவமனையின் கண்ணியல் பிரிவு நாட்டில் உள்ள ஏனைய மருத்துவமனைகளை விட பிரதான ஒரு பிரிவாக இயங்குவதற்கு வாய்ப்பளித்துள்ளது.

இதற்குக் காரணம் தேவையான உபகரணங்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவைமூலம் மருத்துவமனையின் கண் சிகிச்சைக்கு வருகை தரும் நோயாளர் அனைவருக்கும் தகுந்த சிகிச்சையை வழங்கக் கூடியதாக இருக்கும். இதற்காக ஆஸ்திரேலியா மற்றும் கொழும்பு றோட்டறிக் கழகத்துக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனையவர்களுக்கும் எமது நன்றிகள்.

ஏற்கனவே எமது நோயாளிகளுக்காக இந்த கழகத்தினரால் இதை விட மேலதிகமாக 500 கண்வில்லைகளும் வழங்கப்பட்டுள்ளன. பார்வையிழந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட நோயாளிகளுக்கு இலவசமாக இந்தக் கண் வில்லைகளை வழங்கவுள்ளோம்"- என்று தெரிவித்தார்.

இதேவேளை - புதிதாக அமையப் பெறவுள்ள கண் சிகிச்சைப் பிரிவின் கட்டடத் தொகுதிக்கும் நிதியுதவி வழங்குமாறு கழகத்தினரை கோரியுள்ளார் பதில் பணிப்பாளர். (வ-14)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டை காப்பாற்ற ஒரு மகான் தோன்ற வேண்டும்

இந்தியாவை அல்லது இந்திய தலைவர்களை முன் மாதிரியாகக் கொள்வதென்பது இலங்கை அரசியல் வாதிகளுக்கும் சரி அரசியல் கட்சிகளுக்கும் சரி ஓர் ஒத்துப்போகாத தன்மையாகவே இருந்து வருகின்றது. ஒவ்வாமை என்று கூட சொல்லலாம். ஆனால் அவர்களிடமிருந்து நம்மவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் பல உண்டு. அதேசமயம் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியவைகளும் ஏராளம் இருக்கின்றன.

தென்னாபிரிக்காவிலிருந்து மகாத்மா காந்தி இந்தியாவுக்குத் திரும்பியவுடன் ஏற்கனவே தமக்கு ஏற்பட்டிருந்த புகழையும் வரவேற்பையும் வைத்துக் கொண்டு அரசியலில் குதித்துவிட்டு வில்லை. அவர் தன் குடும்பத்தாருடன் மூடை முடிச்சுகளையும் சுமந்து கொண்டு நாடு முழுவதிலும் ரயிலில் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்து வந்தார். அந்தப் பயணத்தின் மூலம் தான் நாட்டின் மூலை முடக்குகளில், விவசாயப் பெரு நிலங்களில் அடிமட்ட மக்கள் வாழும் நிலையை அவர்களுக்கு அவசியமான தேவைகளை, அவர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையெல்லாம் அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அதன் பிறகுதான் காங்கிரஸ் என்கின்ற சுதந்திரப்பேரியக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு சுதந்திரப் போராட்டத்தை ஒரு புறமும் மக்களின் அன்றாட பிரச்சினைகளை இன்னொரு புறமாக எதிர்கொண்டு படிப்படியாக முன்னேறினார் - முன்னேற்றினார். இயக்கத்தை முன்னேற்றிய அதேவேளை - மக்களின் சுதந்திர உணர்வையும் முன்னேற்றினார். மக்கள் மத்தியில் தேசியப்பற்றும் சுதேச தொழில்கள், சுதேச மொழிகள், சுதேச கலாசாரங்களை பேணுகின்ற விழிப்புணர்வையும் அவரால் தோற்றுவிக்க முடிந்தது. மொத்தத்தில் சொல்வதானால் மக்களை யும் தலைவர்களையும் சுதந்திர இந்தியாவை வரவேற்று நிர்வகிக்கக் கூடியவர்களாக புடம் போட்டு வளர்த்தெடுத்தார் எனலாம். கோடிக் கணக்கிலான என் மக்கள் உடுக்க உடையும் உண்ணப் போதிய உணவு மில்லாமல் இருக்கும் நிலையில் எனக்கு ஏன் இந்த சொகுசு வாழ்வு என்று முழந்தாள் துணியும் மோகனப் புன்னகையுமாக எளிமையுடன் வாழத் தொடங்கினார்.

மக்கள் எப்படி வாழ வேண்டும் என்று விரும்பினாரோ அதுபோல் தாமே வாழ்ந்தும் காட்டி னார். அவருக்குப் பின் வந்தவர்களில் எத்தனை பேர் அவரைப் பின் பற்றினார்கள் என்பதை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதுபோக அக்காலத்தில் வாழ்ந்த இலங்கைத் தலைவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், எவ்வாறு மக்கள் பிரச்சினைகளை அணுகினார்கள், வழி காட்டினார்கள் என்பவைகளைப் பார்க்கையில் திகைப்பாக இருக்கிறது. மக்களை தேசிய நீரோட் டத்தில் ஒன்றாக இணைப்பதை முக்கியமாகக் கொள்ளாமல் இனக் குரோதங்களும் மொழி மேலாதிக்கமும் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டன. அவைகளின் கோர உருவமான மதத் தீவிரவாதம் என்ற சேற்றுக்குள் நாடு மெதுவாக அமிழ்ந்து கொண்டிருக்கின்றது. மக்கள் அனைவரையும் அவர்களிடம் காணப்படும் ஒருமைப் பாட்டுக்கான அடையாளக் கூறுகளை மேம்படுத்தி வேற்றுமைக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சிகளைக் காணோம். எதிலும் எல்லாவற் றிலும் கட்சி அரசியல் தேர்தல் கண்ணோட்டம் என்று தேர்தல்கள் ஆகிவிட்டது. ஊழல் தலைவிரித்தாடுகிறது. அராஜகப் போக்கு, இளைஞர்கள் திசை மாறிப் போதல், போதைப் பொருள் பாவனை, கொலை, களவு, இளம் பெண்கள் - ஏன் பச்சிளம் சிறுமிகளும் கூட பாழ் படுத்தப்பட்டு வேதனையுறும் அவலங்கள் தினமும் பத்திரிகை செய்திகளாகிக் கொண்டிருக்கின்றன.

இவைகள் எதுவும் நாட்டின் எதிர்காலத்தின் மேம்பாட்டை எதிர்வுகூர்வனவாக இல்லை. மாறாக இவைகளில் அக்கறை செலுத்தி ஆவன செய்ய வேண்டியவர்களே பேசாமடைந்தைகளாக - நடப்பது நடக்கட்டும் நமக்கென்ன வந்தது என்று இருப்பது போல் காணப்படுகின்றார்கள். ஆட்சி யைக் கைப்பற்றுவதும் அதிகாரத்தை நிலைநாட் டுவதும் தலைவர்கள் என்போரின் குறிக்கோளாக மாறிவிட்டிருக்கிறது.

இலங்கையில் ஒரு மகாத்மா காந்தி தோன்ற வேண்டாம், அவர் போக்கில் மக்களை இணைக் கும் ஒரு தார்மிக சக்தியுள்ள மகான் தோன்ற மாட்டாரா என்று தான் ஏக்கம் தோன்றுகின்றது.

அபிவிருத்திகள் நாட்டை அழகுபடுத்தலாம், அன்பளிப்புகள் அவைகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு பயன்படலாம். மக்கள் மனங்களை ஒன்றிணைக்கும் பணிகள் தேவை. அவை அரசியல், சமயம், இனம் மற்றும் பிரதேசங்களுக்கப்பால் மக்களை அவர் தம் மனங்களால் ஒருங்கிணைப்பவையாக இருக்க வேண்டும். அதுவே இன்றைய தேவை.

# வெற்றிலைக்கு எதிராக கதிரை களமிறங்குமா?

சிங்களமூலம்-மவ்பிம
தமிழில்-வீஎஸ்ரீ.

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனம் ஒன்றின் தலைவரான மலிக் ஜயதிலக என்பவர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக புள்ளி விவரங்களின் அடிப்படையிலான எதிர்வு கூறலொன்றை அண்மையில் தெரிவித்திருந்தார். அரசின் பங்காளிக் கட்சியான பழைய இடதுசாரிக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான டியூ. குணசேகர உள்ளிட்ட அந்தக் கட்சிப் பிரமுகர்கள் சிலர் கடந்தவாரம் ஒன்றுகூடி குறிப்பிட்ட அந்த எதிர்வு கூறல் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். குறிப்பிட்ட அந்த எதிர்வு கூறலில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைய நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அமைச்சர் டியூ. குணசேகர உள்ளிட்ட தரப்பினரும் புள்ளி விவரங்களின் அடிப்படையிலான அந்த எதிர்வு கூறலை ஏற்றுக்கொண்டுள்ளனர். அதற்கு முன்னர் ஊவா மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்ற தினத்தன்று பழைய இடதுசாரிக் கட்சி சார்பில் வெளியிடப்படும் பத்திரிகை ஒன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா போட்டியொன்றை வழங்கியிருந்தார். அந்தப் பேட்டியில் மஹிந்தவை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்க பொது முன்னணியொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமெனத் தெரிவித்திருந்தார். இந்த இரு சம்பவங்களையும் நோக்கும்போது பழைய இடதுசாரித் தரப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஏதோவொரு திட்டமொன்றை வகுத்து வருகின்றனர் என்பது தெளிவாகிறது.

### பழைய இடதுசாரிகள் தரப்பின் திட்டமென்ன?

பழைய இடதுசாரிக் கட்சியினரையும் உள்ளடக்கியே பொதுசன ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. அதற்கான பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுவதான தகவல் பிரேமதாஸ அரசுக்கு எட்டினால் அந்த முயற்சிக்குத் தடை ஏற்படக்கூடுமென்ற அச்சத்தில் சிறிமாவோ அந்த வேளையில் அதனை இரகசியமாகவே மேற்கொண்டார். பொதுசன ஐக்கிய முன்னணி பதிவு செய்யப்பட்ட பின்னரே அது குறித்த தகவல் பிரேமதாஸ அரசுக்குத் தெரிய வந்தது. அதனால் கிலேசமுற்ற பிரேமதாஸ உடனடியாக மாகாண சபைகளின் நிர்வாகத்தைக் கலைத்துவிட்டார்.

### மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல்

பொதுசன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் சின்னமாகக் கதிரையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது.

அந்தத் தேர்தலுக்கான கட்சியின் சுலோகம் கூட சிறிமாவோ, சந்திரிகா மற்றும் இடதுசாரித் தலைவர்களாலேயே உருவாக்கப்பட்டது. உண்மையில் ஐ.தே.கட்சிக்கு இந்தக் கதிரையே துரதிஷ்டத்தைக் கொண்டுவந்தது. பிரேமதாஸ படுகொலையின் பின்னர் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின் 16 ஆண்டுகளின் பின்னர் சுதந்திரக்கட்சி தேர்தலொன்றை கதிரைச் சின்னத்தின் மூரம் வென்றெடுத்தது. 2001ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் வரை இடம்பெற்ற சகல தேர்தல்களிலும் கதிரைச் சின்னமே வெற்றியைத் தேடிக் கொடுத்தது. 2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும், 2002ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலிலும் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டுத் தோல்விகண்ட பின்னர் சுதந்திரக் கட்சி- ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட கூட்டணிக்கும் புதிய பெயரொன்றையும் புதிய சின்னமொன்றையும் தேட ஆரம்பித்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் கூட்டணியும் அதற்கான தேர்தல் சின்னமாக வெற்றிலையும் உருவானது இந்த விதத்திலேயே ஆகும். 2004ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் இந்தக் கூட்டணி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டியது. அந்தப் பொதுத் தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துள் பிரவேசித்த மஹிந்த 2005ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.ம.சு.கூட்டணி சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர். அன்றுமுதல் சகல தேர்தல்களிலும் வெற்றிலைச் சின்னத்துக்கே வெற்றி வாய்ப்புக் கிட்டி வருகிறது.

### கதிரைச் சின்னத்தின் கதியென்ன?

பொ.ஐ.முன்னணியின் செயலாளராகத் தற்போதைய பிரதமர் தி.மு.ஜயரத்ன இருந்துள்ளார். அவரை அரசிலிருந்து வெளியேற்றினால் கதிரையை எதிர்க்கட்சிகளால் கைப்பற்ற முடியுமா என்பது தெரியவில்லை. கதிரைக்கு நேர்ந்தகதி என்னவெனக் கண்டு பிடிக்கப்படவில்லை. உண்மையில் கதிரைச் சின்னம் சந்திரிகாவுக்கும் பண்டாரநாயக்கா குடும்பத்துக்குமே அதிர்ஷ்டத்தைக் கொடுத்தது. அதே சமயம் வெற்றிலைச் சின்னம் மஹிந்தவுக்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு அதிர்ஷ்டத்தை வாரி வழங்கியுள்ளது. இருந்தபோதிலும் கதிரை பழைய இடதுசாரிகளால் உருவாக்கப்பட்டதொன்று; வெற்றிலை ஜே.வி.பியினர் உட்பட்ட நாட்டுப் பற்றாளர் தரப்பால் அறிமுகப்படுத்தப்பட்டதொன்று.

அப்படியானால் பழைய இடதுசாரிகள் தரப்பு, சந்திரிகா, ஐ.தே.க.கட்சி, ஜே.வி.பி, பொன்சேகா தரப்பு என்பவற்றுடன் இணைந்து மஹிந்தவைத் தோற்கடிக்க கதிரையில் வரப் போகின்றதா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே.

> **2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில்களில் எதிர்க்கட்சிகளான ஐ.தே. கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன பெரும் வாக்கு வீதத்தைக் கைப்பற்றியிருந்தன. தற்போது முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பதெனத் தீர்மானிக்ககவுள்ள தாகத் தெரிய வருகின்றது.**

அவ்வித நிலையொன்று உருவாகுமானால் மஹிந்தவுக்கு சிரமம் ஏற்பட்டே ஆகும். தற்போது கதிரைச் சின்னம் எந்தக் கட்சியின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவில்லை.

இருந்தபோதிலும் கதிரைச் சின்னம் சுதந்திரக் கட்சியினருக்குப் பழக்கப்பட்டதொன்று. பொ.ஐ.முன்னணியும் அவர்களுக்கு பழக்கப்பட்டதொன்றே, 17 ஆண்டுகள் காலமாகத் தோல்வியையே சந்தித்த தரப்பினருக்கு கதிரைச் சின்னமும் கட்சிப் பெயரும் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்தன. ஜனாதிபதித் தேர்தலில் கதிரையும், வெற்றிலையும் தேர்தல் சின்னங்களாக அமைந்தால், சந்திரிகா உட்பட அரசினின்றும் வெளியேறும் 20 அமைச்சர்கள் வரையானவர்கள் கதிரைச் சின்னத்துக்கு ஆதரவளிப்பார்களானால் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களில் கணிசமானவர்களும் கதிரைச் சின்னத்துக்கு ஆதரவளிப்பது நிச்சயம்.

மொத்தத்தில் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி, யானை, கதிரைச் சின்னத்தில் அல்லாது வேறெந்தச் சின்னத்தில் போட்டியிட்டாலும் அது மஹிந்தவுக்கு நட்டத்தையே ஏற்படுத்தும். இலங்கையில் அதிகூடிய ஆதரவு வாக்கு வீதம் தென்பகுதியிலேயே மஹிந்தவால் பெற இயலும். அதேபோன்று எதிரணி வேட்பாளரால் நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலேயே அதிகூடிய ஆதரவு வாக்கு வீதத்தைப் பெறமுடியும். கடைசி வாக்காளர் இடாப்புக் கணக்கெடுப்பின்படி தென் மாகாண மொத்த வாக்காளர் தொகை 18, 73, 804 ஆகும். 2012- 2013 வடக்கு-கிழக்கு மாகாணங்களின் வாக்காளர் இடாப்பின்படி மொத்த வாக்காளர்கள் தொகை 17, 53, 226 ஆகும். இந்த மாகாணங்களில் எந்த வேட்பாளர் அதிகூடிய ஆதரவு வாக்கு வீதங்களைப் பெறுகிறாரோ அவரே வெற்றி வாய்ப்புக்கு உரியவராகிறார்.

2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகளான ஐ.தே.கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன பெரும் வாக்கு வீதத்தைக் கைப்பற்றியிருந்தன. தற்போது முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பதெனத் தீர்மானிக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது. அத்தகைய நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எதிர்க்கட்சிகளான ஐ.தே.க, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன ஒன்றிணைந்து ஆதரவளிக்கும் வேட்பாளர், அரச தரப்பு வேட்பாளரை விட பெருமளவு விகித வாக்குகளை ஈட்ட வாய்ப் புண்டு. அந்த வகையில் தென் கடந்த மாகாண சபைத் தேர்தலில் எதிர்க்கட்சியான ஐ.தே.க.கட்சிக்குக் கிடைத்த வாக்குகளைவிட அரச தரப்புக்கு2, 04, 413 மேலதிக வாக்குகளே கிடைத்தன. அதேசமயம் வட்க்கு-கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலில் அரச தரப்பைவிட எதிரணியான ஐ.தே.கட்சி,த.தே.கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை 4, 82, 181 மேலதிக வாக்குகளைப் பெற்றுள்ளன. அந்த வகையில் அரசுக்கு வெற்றி வாய்ப்பாய் அமைந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் தெற்கில் அரச தரப்புபெற்ற மேலதிக வாக்கு வீதத்தைவிட வடக்கு-கிழக்கில் அரச தரப்பைவிட எதிர்க்கட்சிகள் பெற்ற மேலதிக வாக்குவீதம் மிக அதிகமானதாகும்.

அப்படியானால் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தத் தரப்புக்கு வெற்றி வாய்ப்புண்டு என்று கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டியுள்ளது.

இடது சாரித் தலைவர்கள் மேற்கொண் ஜனாதிபதித் தேர்தல் கணக்கீட்டு விமர்சனத்தையடுத்து ஜனாதிப தித் தேர்தலை நடத்துவதைப் பின்போடுவது குறித்து அரசு சிந்திப்பதாகத் தோன்றுகிறது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காது மஹிந்த ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்தத் தீர்மானிப்பாரானால் சந்திரிகாவின் சங்கீதக் கதிரைப் போட்டியில் பங்குபற்றும் நிலையே மஹிந்தவுக்கு ஏற்படக்கூடும்.

# இனி என்ன ஆவார் ஜெயலலிதா?



**திருமலைப்பிள்ளை வீட்டில், தன் தலையணைக்கு அடியில், 100 ரூபாயை வைத்திருந்த பெருந்தலைவர் காமராஜரையும், நுங்கம்பாக்கம் வங்கியில் 5,000 ரூபாயை வைத்திருந்த பேரறிஞர் அண்ணாவையும் கொண்ட தமிழகத்தில் இருந்து, ஊழல் வழக்குக்காக முதலமைச்சர் பதவியில் இருந்தபடியே சிறைக்குப் போன அவமானம் ஜெயலலிதாவால் நேர்ந்துள்ளது.**

ஆரம்பத்திலேயேஎங்கள் குடும்பம்ரொம்ப வசதியாக இருந்தது. ரொம்பப் பணக்காரக் குடும்பம். அப்போது இருந்த அந்தச் சொத்து அப்படியே நிலைச்சு இருந்திருந்தால், எங்க அம்மாவும் நடிக்க வந்திருக்க மாட்டேன், நானும் சினிமாவில் நடிக்க வந்திருக்க மாட்டேன்! இப்படிச் சொன்னவர் ஜெயலலிதா! தங்களின் அரசியல் வளர்ச்சியை அருகில் இருந்து பார்க்காத உங்களது தாயாரின் நினைவு களைச் சொல்லுங்கள்... என ஒருமுறை ஜெயலலிதாவிடம் கேட்ட போது;

அம்மா இருந்திருந்தால், இந்தக் கேள்விக்கே இடம் இருந்திருக்காது. ஏனென்றால், என்னை அவர் அரசியலில் நுழைய அனுமதித்திருக்கவே மாட்டார்-என்றார்.

குடும்பச் சூழ்நிலை காரணமாக நடிக்க வந்து, தாய் சந்தியாவின் மரணத்துக்குப் பின்னால் அரசியலுக்கு வந்து, கூடா நட்பு கேடாய் முடியும் என்ற பழமொழிக்கு உதாரணமாக பர்ப்பன அக்ரஹாரா சிறைக்குள் சென்றுவிட்டார் ஜெயலலிதா.

கர்நாடக மாநிலம் சாம்ராஜ்புரத்தில் ஜெய விலாஸ், லலித விலாஸ் எனப் பெரும் பங்களாக்களில் அவரது மூதாதையர் வாழ்ந்தார்கள். அதன் நினைவாகத்தான் ஜெயலலிதா என இவருக்குப் பெயர் சூட்டினார்கள்.

இன்று பரப்பன அக்ரஹாரா சிறைக்கும், ஜெயலலிதா இருக்கும் சிறை என்ற பாரம்பரியம் தொற்றிக் கொண்டது

காலம் வழங்கிய அருட்கொடையான ஆட்சி அதிகாரத்தை, அதன் அருமை தெரியாமல் விளையாட்டுத்தனமாக உருட்டி விளையாண்டதன் விளைவு... வினையாகி, இன்று இருட்டுச் சிறைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டது ஜெயலலிதாவை.

எனக்கு என்ன குடும்பமா... குட்டியா? தமிழக மக்கள்தான் என் குடும்பம் எனச் சொல்லிக்கொண்ட ஜெயலலிதா, யதார்த்தத்தில் அப்படி வாழவில்லை என்பதற்குச் சாட்சியே இந்த 66 கோடி ரூபாய். இந்த 66 கோடியின் மதிப்பை1991 ஆம் ஆண்டுக் கணக்கின்படி மதிப்பிட வேண்டும். இந்தச் சொத்துக்களின் இன் றைய மதிப்பு 3,600 கோடி ரூபாய்க்கும் மேல் என அரசு வழக்குரைஞர் பவானி சிங், சிறப்பு நீதிமன்றத்தில் பதிவுசெய்துள்ளார்.

ஓர் அரசு ஊழியர் தன்னுடைய ஒவ்வொரு ரூபாவின் வரவுக்கும் கணக்குக் காட்ட வேண்டும் என்ற, மிகச் சாதாரணமான வழிமுறையைக்கூட உதாசீனம் செய்துவிட்டு நினைத்தை எல்லாம் வளைத்து வசப்படுத்தி ஆண்டிருக்கிறார்கள்.

2013 ஒக்டோபர் 31 ஆம் நாள், பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக ஜோன் மைக்கேல் டி.குன்ஹா நியமிக்கப்பட்டார். ஜெயலலிதாவின் வழக்குரைஞர் குமாரைப் பார்த்து, இது என்ன மாதிரியான வழக்கு? சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று கேட்டார் நீதிபதி.

பொதுவாக இந்த மாதிரியான இயல்பான தன்மையை நீதிபதிகளிடம் எதிர்பார்க்க முடியாது. மேலும், அரசு வழக்குரைஞர்களிடம்தான் முதலில் கேட்பார்கள். ஆனால் குன்ஹா, எதிர்த் தரப்பில் இருந்து தொடங்கினார். குமார் மொத்தக் கதையையும் சொல்லிவிட்டு, இப்படிப் பல குளறுபடிகள் உள்ள வழக்கு இது என முடித்தார்.

உடனே நீதிபதி, எல்லா வழக்குகளிலும் குளறுபடி இருக்கத்தான் செய்யும். அதைக் களைவதுதான் நம்முடைய பொறுப்பு என்றார். வார்த்தையைக் கவனியுங்கள். நீதிமன்றத்தின் பொறுப்பு எனப் பிரித்துச் சொல்லாமல், நம்முடையபொறுப்பு என ஜெயலலிதா தரப்பையும் தன்னோடு சேர்த்துக்கொண்டார்.

இந்த வழக்கில் அரசியல் பின்புலங்கள் இருப்பதாகக் குமார் வாதிட்டபோது, கொஞ்சம் குரலை உயர்த்தினார் நீதிபதி. யாரும் இந்த நீதிமன்றத்தில் உணர்ச்சி வசப்பட வேண்டாம். அனைவரும் சேர்ந்தே கோப்புகளைப் பார்த்து நீதியை நிலை நாட்டுவோம் என்று சொன்னார்.

பொதுவாக, எந்த வழக்காக இருந்தாலும் பேப்பர் பேசும் என்பார்கள். அந்தமாதிரி, தன் முன்னால் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுப்பேன் என்பதைச் சொல்லாமல் சொன்னார் நீதிபதி. மூன்று குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தான் இந்த வழக்கே நடந்தது!

1. 1991-1996 வரை முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா வருமானத்துக்கும் அதிகப்படியான சொத்துக்களைச் சேர்த்துள்ளார். அவற்றை 32 நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளார்.

2. ஜெயலலிதாவுடன் சசிகலா, இளவரசி, சுதாகரன் மூவரும் சேர்ந்து கூட்டுச்சதி செய்துள்ளார்கள். இது இந்தியத் தண்டனைச் சட்டம் 109 (குற்றம் செய்யத் துணிதல்), 120-பி (கூட்டுச் சதி) ஆகிய பிரிவுகளின்படி குற்றம்.

3. 66 கோடி ரூபாய்க்கு சரியான கணக்கு ஒப்படைக்காததால், ஊழல் தடுப்புச் சட்டம் 13(1) இ பிரிவின்படி குற்றம் செய்தவர்கள் ஆகிறார்கள்.

- இந்தக் குற்றப்பத்திரிகையை நீதிமன்றம் அப்படியே ஏற்றுக்கொண்டுவிட்டது. குற்றங்கள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டதாகச் சொன்ன நீதிபதி, வழங்கிய தண்டனைதான் ஜெயலலிதாவுக்கு மட்டும் அல்ல, ஊழல் அரசியல்வாதிகள் அனைவருக்குமே அடிவயிற்றைக் கலக்கிவிட்டது.

ஜெயலலிதாவுக்கு நான்கு ஆண்டு சிறைத் தண்டனை விதித்ததுடன், 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் என் அளித்துள்ள தீர்ப்பு, பொதுச் சொத்தைத் தன் சொத்தாகச் சுருட்டும் எல்லா அரசியல்வாதிகளுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை.

சில நாள்களுக்கு முன் இந்தியாவின் வட மாவட்டம் ஒன்றில் தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. அதில் பேசிய முன்னாள் அமைச்சர் ஒருவர், "ஜெயலலிதாவுக்கு எதிராகத் தீர்ப்பு வந்தவுடன் யாரும் பட்டாசு எல்லாம் வெடிக்க வேண்டியது இல்லை. வீட்டுல அமைதியா இருங்கள்" என்றாராம்.

அவர் மீதும் சொத்துக்குவிப்பு வழக்கு நீதிமன்றத்தில் நடக்கிறது. அதாவது, ஊழல் அரசியல்வாதிகள் எல்லோரையுமே ரத்தம் உறைய வைத்துள்ளது இந்தத் தீர்ப்பு.

குற்ற வழக்குகளில் தண்டனை பெற்ற அரசியல்வாதிகள், அந்த வழக்கையே முடிக்கவிடாமல் பார்த்துக் கொண்டு, தன் வாழ்நாள் முழுக்க அதே குற்றத்தைத் தொடர்ந்து செய்துவரும் நிலைக்கு, கடந்த ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றம் முற்றுப் புள்ளி வைத்தது. குற்ற வழக்கில் தண்டனை வழங்கப்பட்டதும் பதவி போய்விடும் என்பதே அந்த உத்தரவு.

அதேபோல், ஒரு குற்ற வழக்கை எவ்வளவு விரைந்து முடிக்க வேண்டும் என்பதையும் நீதிபதி குன்ஹா காட்டிவிட்டார். வெறும் சிறைத் தண்டனைதானே என பிணை வாங்கிவிட்டு வீட்டில் இருந்துவிடக்கூடாது என்பதால், மொத்தச் சொத்துக்களையும் பறிமுதல் செய்யவும், சம்பாதித்த சொத்தை விட ஒரு மடங்கு அதிகமாக அபராதம் விதிக்கவும் வழிகாட்டி இருக்கிறார் குன்ஹா. எடியூரப்பாக்களையும், ரெட்டி சகோதரர்களையும் கொண்ட கர்நாடக மாநிலத்தில் இருந்து நீதி, நேர்மை, நியாயத்துக்கு ஆதரவான குரலாக நீதிபதி குன்ஹா உயர்ந்து நிற்கிறார்.

திருமலைப்பிள்ளை வீட்டில், தன் தலையணைக்கு அடியில், 100 ரூபாயை வைத்திருந்த பெருந்தலைவர் காமராஜரையும், நுங்கம்பாக்கம் வங்கியில் 5,000 ரூபாயை வைத்திருந்த பேரறிஞர் அண்ணாவையும் கொண்ட தமிழகத்தில் இருந்து,ஊழல் வழக்குக்காக முதலமைச்சர் பதவியில் இருந்தபடியே சிறைக்குப் போன அவமானம் ஜெயலலிதாவால் நேர்ந்துள்ளது.

இந்தியாவில் இனி ஊழல் வழக்குகளில் தண்டனை பெறும் ஒவ்வோர் அரசியல்வாதிக்கும் முன்னதாக ஜெயலலிதாவின் பெயர் உச்சரிக்கப்படும்.

அந்துலேவை அவரது மாநிலத்துக்காரர்களே மறந்துபோயிருப்பார்கள். ஆனால், அரசியல்வாதிகளின் ஊழல் வழக்குகள் பேசப்படும் போதெல்லாம் அந்துலேவின் வழக்கும் பேசப்படுவதைப்போல ஜெயலலிதாவும் இனி நினைக்கப்படுவார்.

சிறுவயதில் தந்தையை இழந்து, வளர்ந்து நின்றபோது தாயை இழந்து, வழி சொல்லத் தேவையான போது அண்ணனை இழந்து, அரசியல் பாதை தொடங்கிய போது குருவான எம்.ஜி.ஆரை இழந்து தனியாக இருந்த ஜெயலலிதா, இப்போது பதவியை, மரியாதையை, நிம்மதியை இழந்து நிற்கிறார்.

குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள் அந்தத் தண்டனை காலம் முடிந்து, ஆறு ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாது. அப்படிப் பார்த்தால் 10 ஆண்டுகள் தேர்தலில் நிற்க முடியாது. அப்படியானால் ஜெயலலிதா இனி தேர்தலில் பங்கேற்பதே சிரமம்தான்.

கர்நாடக உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் விடுதலை பெற்றுவெளியில் வந்தால்தான், பத்தாண்டுகளுக்குள் தேர்தலில் போட்டியிடவே முடியும். ஒருவேளை அப்படி எதுவும் நடக்காத பட்சத்தில், அடுத்த பத்தாண்டுகளுக்கு அ.தி.மு.க., ஆட்சியில் தொடர்ந்தாலும் ஜெயலலிதா வெளியில் இருந்து அதிகாரம் செய்ய முடியுமே தவிர, அதிகாரத்தை அவர் நேரடியாகச் சுவைக்க முடியாது. இது அவரை மனரீதியாகவும் பாதிக்கச் செய்யும்.

இந்தச் சட்ட, நீதிமன்ற நடைமுறைகள் சாதாரணமாக நடந்தாலே இரண்டு ஆண்டுகளைக் கடந்துவிடும். ஊழல் வழக்குகளுக்கு எதிராக நீதிமன்றங்கள் எப்போதும் சாட்டையைச் சுழற்றி வரும் நிலையில், ஜெயலலிதா முழுமையாக வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவது அசாதாரணமான விசயமே.

இவை அனைத்தும் கர்நாடக மாநிலம் சம்பந்தப்பட்டதாக இருப்பதால் காலதாமதங்கள் ஏகத்துக்கும் அதிகரிக்கும். அரசியலில் அபார வெற்றிக்குப் பிறகு, மிகப் பெரிய வாழ்க்கைத் தோல்வியை அடைந்து விட்டார். ஜெயலலிதா நினைத்த வாழ்க்கை இதுதானா? (நன்றி-விகடன்)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: மனதில் இனம் தெரியாத பயம் அவ்வப்போது வந்து போகும். அந்த நேரத்தில் இறை வழிபாட்டில் மனதைச் செலுத்துவது நன்மையைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகார பதவிகளில் இருப்பவர்களுக்கு சாதனைகள் செய்யும் காலமிது.



**இடபம்**: மேலதிகாரிகளிடம் சுமுகமான உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய வேலைகளை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். அதேநேரம் சில சமயங்களில் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும்.



**மிதுனம்**: உங்களது கோரிக்கைகளும் ஆசைகளும் நிறைவேறும். தாய் மற்றும் தாய் வழி உறவினர்களுடன் வீண் வாக்கு வாதங்கள் ஏற்படலாம். மற்றவர்கள் செய்யும் சிறு தவறுகளை மன்னிக்க பழகிக் கொள்ளுங்கள்.



**கடகம்**: குடும்பத்தில் நீண்ட நாள்களாக இருந்து வந்த மனக்கசப்பு மறைந்து சந்தோஷம் ஏற்படும். பெற்றோரின் வாழ்வில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய வீடு, நிலம் வாங்கலாம். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளால் பதவிகள் கிடைக்கும்.



**சிங்கம்**: பணப்புழக்கம் சரியாக இருக்கும். ஆனால் சுபநிகழ்ச்சிகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். பொருள்களை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளவும். யாருக்கும் பிணை கையெழுத்துப் போடக் கூடாது. அப்படி போட்டால் பிரச்சினைகள் வரலாம்.



**கன்னி**: நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும்போது மிகவும் கவனம் தேவை. பெரியோர்களின் ஆதரவால் நீங்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மனதில் தேவையில்லாத வெளியில் சொல்ல முடியாத வேதனை மற்றும் பிரச்சினைகள் வரலாம்.



**துலாம்**: விடாமுயற்சியும், கடினமான உழைப்புமே உங்களை முன்னேற்றும் என்பதில் நம்பிக்கை வையுங்கள். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் மறையும். நீங்கள் எதைச் செய்தாலும் அதில் முழுக் கவனத்துடன் செய்யுங்கள்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் பிரச்சினைகள் வரலாம். ஊர் சுற்றுவதை குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டாது விளையாட்டுக்களில் ஈடுபடுவார்கள்.



**தனுசு**: கவனமுடன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். புதிய ஒப்பந்தம் மூலம் சிறப்பான வளர்ச்சி காண்பீர்கள். புகழும், விருதுகளும் கிடைக்கும். எழுத்து பணியில் இருப்பவர்கள் சளைக்காமல் பணியைச் செய்யவும்.



**மகரம்**: புதிய தொழில் தொடங்குவதற்கு சரியான ஆலோசனை செய்யவும். செய்யும் தொழிலில் அலைச்சல் அதிகமாக இருக்கும். எந்தத் தொழிலானாலும் நீங்களே நேரிடையாக செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் கவனம் தேவை.



**கும்பம்**: அறிமுக இல்லாதவர்களிடம் வரவு- செலவு வைத்துக் கொள்ள வேண்டாம். உடன்பிறந்தவர்களால் உதவிகள் வந்து சேரும். முயற்சிகளுக்குத் தகுந்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் தொழில் நிறுவனத்தில் நன்மை அடைவார்கள்.



**மீனம்**: கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும். தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அனைத்துச் செயல்களிலும் வெற்றியடைவீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர, புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும்.

## நாளை

**புரட்டாதி-21 செவ்வாய்க்கிழமை | 07.10.2014**

திதி: சதுர்த்தசி மு.இ.07.10 வரை
நட்சத்திரம்: புரட்டாதி மு.ப.11.44 வரை
சுபநேரம்:10.32-12.02 வரை
இராகுகாலம்:03.02-04.32 வரை
நடேசரபிஷேகம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### தியானத்தின் மூலம் இயற்கையை வெல்ல முடியும்

நான் உயிருடன் இருக்கிறேன் என்று மனிதன் சொல்கிறான். மரணத்தை கண்டு பயந்துதான் அவன் உயிருடன் ஒட்டிக் கொண்டு இருக்கிறான் என்பது அவனுக்குத் தெரியாது. நான் இன்புறுகிறேன் என்று அவன் சொல்கிறான். இயற்கை அவனை அடிமைப்படுத்தி விட்டது என்பதை அவன் கனவில் கூடக் காண்பதில்லை. இயற்கை நம் எல்லோரையும் அழைத்துக் கொண்டிருக்கிறது. உங்களுக்கு கிடைத்த ஒரு துளி இன்பத்தை எண்ணிப் பாருங்கள். இயற்கை தன் வேலையை உங்களைக் கொண்டு முடிக்கிறது. கடைசியில் இறந்ததும் நீங்கள் செடிகள் வளர உரமாகிறீர்கள். இருந்தும் இன்பத்தை நாமே சம்பாதித்ததாக நாம் எல்லோரும் நினைக்கின்றோம். இப்படி சக்கரம் சுழன்று கொண்டே போகிறது.

ஆகவே ஆன்மாவை ஆன்மாவாக உணர்வதுதான் நடைமுறைச் சமயம். இந்த பேருண்மைக்கு எம்மை அழைத்துச் செல்லும் எதுவும் நல்லதே: அந்த ஆன்மாவை துறவினாலும் தியானத்தாலும் அடைய வேண்டும். புலன்களையும் நம்மை சடப்பொருளோடு கட்டி வைத்திருக்கும் எல்லா முடிச்சுக்களையும் தளைகளையும் நாம் துறக்க வேண்டும். எனக்கு உலக வாழ்க்கை வேண்டாம். புலன் வாழ்க்கை வேண்டாம். இவற்றைவிட உயர்ந்த பொருள் வேண்டும் என்று நினைப்பது தான் துறவு. பிறகு தியான பலத்தின் மூலம் இதுவரை ஏற்பட்டுள்ள கோடுகளைக் களைந்தெறியுங்கள். .

## ஆண்களின் கண் பார்வையை பறிக்கும் வயாகரா மாத்திரை



பாலியல் வீரியத்தை அதிகரிப்பதற்காக பயன்படுத்தும் வயாகரா மாத்திரையால் கண் பார்வை பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

வயாகரா மாத்திரை பயன்படுத்துபவர்களின் கண் பார்வை பாதிக்கப்படுவதுடன், ஒரு சிலருக்கு கண் பார்வை பறிபோகும் அபாயமும் உள்ளது.

ஆஸ்திரேலியா நியூசவுத் வேல்ஸ் பல்கலைக்கழக நிபுணர்கள் இது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதில், வயாகரா மாத்திரையில் சில்டெனாபில் என்ற மூலக்கூறு உள்ளது. அதில் உள்ள என்னசம் கண்விழித்திரையில் இருந்து மூளைக்கு செல்லும் ஒளி சமிக்ஞைகளை தடுத்து நிறுத்தும் சக்தி கொண்டது.

அதுவே, கண்பார்வை பாதிப்புக்கும் பார்வை பறிபோவதற்கு காரணமாக உள்ளது. இந்த சில்டெனாபில் மூலக்கூறு கண்விழித்திரையில் நிரந்தரமாகத் தங்கி செல்களை கொன்று பார்வையை படிப்படியாகக் குறைத்து பின்னர் முழுவதும் பறிபோகச் செய்யும்.

இந்தச் சோதனை நல்ல உடல் நலத்துடன் இருந்த சுண்டெலிகளில் நடத்தப்பட்டது. வயாகரா மாத்திரை கொடுத்த 2 நாளிலேயே அவற்றின் கண் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டதை நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 1 | | 5 | 2 | | 4 |
| 9 | | | | 7 | 2 | | | 3 |
| | 4 | 2 | 6 | | | 7 | 9 | |
| | | | | | | 5 | 4 | 8 |
| | 2 | | | | | | 7 | |
| 4 | 9 | 6 | | | | | | |
| | 8 | 9 | | | 1 | 6 | 3 | |
| 5 | | | 7 | 6. | | | | 1 |
| 6 | | 1 | 2 | | 8 | 4 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 7 | 8 | 3 | 9 | 5 | 2 | 4 |
| 9 | 2 | 5 | 1 | 4 | 7 | 3 | 6 | 8 |
| 3 | 4 | 8 | 5 | 2 | 6 | 7 | 1 | 9 |
| 8 | 5 | 1 | 7 | 6 | 4 | 9 | 3 | 2 |
| 2 | 7 | 4 | 3 | 9 | 8 | 6 | 5 | 1 |
| 6 | 3 | 9 | 2 | 5 | 1 | 4 | 8 | 7 |
| 5 | 1 | 2 | 4 | 7 | 3 | 8 | 9 | 6 |
| 4 | 8 | 6 | 9 | 1 | 5 | 2 | 7 | 3 |
| 7 | 9 | 3 | 6 | 8 | 2 | 1 | 4 | 5 |

# விண்மீன், கலைமதி வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.6
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில், முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

# மன்னார் பொலிஸ் வெற்றி



மன்னார் மாவட்ட பொலிஸ் அணியிடம் 8-0 என்ற ரீதியில் படுதோல்வியடைந்தது கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அணி.
இலங்கையில் உள்ள 40 பொலிஸ் திணைக்களங்கள் பங்குபற்றும் லீக் முறையிலான 80 போட்டிகளைக் கொண்ட உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மாலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.
அன்றைய தினம் நடைபெற்ற தொடரின் முதலாவது போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அணியும், மன்னார் மாவட்ட பொலிஸ் அணியும் மோதிக் கொண்டன.
இந்த ஆட்டத்தின் போது முதலாவது கோலினை மன்னார் மாவட்ட பொலிஸ் அணி வீரர் பிலிப் பெற்றுக்கொடுத்தார். 2 ஆவது கோல் போட்டி ஆரம்பமாகி 21 ஆவது நிமிடத்தில் மன்னார் மாவட்ட பொலிஸ் அணி வீரர் ஜேசுதாச பெற்றுக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து 3 ஆவது கோலினை மன்னார் மாவட்ட பொலிஸ் அணி வீரர் பிரதீபன் பெற்றார். இடைவேளையின் பின் மீண்டும் போட்டிகள் ஆரம்பமாகிய நிலையில் மன்னார் மாவட்ட பொலிஸ் அணி வீரர்கள் யுவெஸ், சுனேந்திரன், ஜேசுதாசன், பிரதீபன், பிலிப் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை போட்டனர். இறுதி வரையும் கிளிநொச்சி மாவட்ட அணி போராடி எந்த கோலையும் பெறாத நிலையில் 8-0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட பொலிஸ் அணி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. (ரி-56)

# பிறேம்குமார், உசாஷ்ந் அசத்தல் டைமன்ஸ் நவஜீவன்ஸ் வெற்றி

பிறேம்குமார் ஹற்றிக் கோல் போட வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகமும், உசாந்தின் அதிரடி மூலம் உடுப் பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று லீக் சுற்றுப் போட்டிக்குள் முன்னேறியுள்ளன.
நவிண்டில் கலை மதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் அபாரமாக விளையாடிய நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் உசாந்தின் உதவியுடன் 5:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் உசாந் 5ஆவது, 17ஆவது, 33 ஆவது நிமிடங்களில் மூன்று கோல்களையும், பொபிநாத் 18ஆவது, 36ஆவது நிமிடங்களில் இரு கோல்களையும் போட்டார்.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகமும் மோதின.
ஆட்டத்தின் ஆரம்பத்தில் நிதானமாக விளையாடிய டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் நேரம் செல்ல செல்ல ஆட்டத்தின் போக்கில் மாற்றம் ஏற்படுத்தி மோதின. இதன் பயனாக 8ஆவது நிமிடத்திலும் 11ஆவது நிமிடத்திலும் 17ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டு ஹற்றிக் சாதனைபடைத்தார்பிறேம்குமார். மேலும் இடைவேளைக்காக ஆட்டம் இடை நிறுத்துவதற்கு சில வினாடிகள் இருக்கும் போது பாரதி விளையாட்டுக் கழக வீரர் ஒரு கோலைப் போட்டார். இதனால் 3:1 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகிய 4ஆவது நிமிடத்தில் வசீகரனும், 6 ஆவது நிமிடத்தில் பிறேம்குமாரும் டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக கோல் போட 5:1 என்ற கோல் கணக்கில் டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. (ரி-108)

# இன்றைய ஆட்டம்



கரணவாய்,ஒக்.6
தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று முதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
விலகல் முறையில் இட்ம்பெறும் இந்தப் போட்டிகளின் இறுதியாட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.
இதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு : முற்பகல் 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அருணோதயா விளையாட்டுக்கழகமும், பிற்பகல் 3 மணி நடைபெறும் ஆட்டத்தில் நாகதீபம் விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும், பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ரி-108)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.6
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக அணி மோத்வுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.6
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. (ரி-23-108)

# நாடு திரும்பிய தங்க அணிக்கு வரவேற்பு



ஆசிய விளையாட்டில் தங்கம் வென்ற இலங்கை கிரிக்கெட் அணி நேற்று நாடு திரும்பியது.
தென்கொரியாவின் இன்ச்சியான் நகரில் நடைபெற்றுவந்த 17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி நேற்று முன் தினத்துடன் நிறைவு பெற்றது. இதில் கலந்து கொண்ட திரிமனே தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி இறுதியாட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்றிருந்தது. இலங்கைக்கு ஆசிய விளையாட்டில் 12 வருடங்களின் பின் கிடைத்த முதல் தங்கம் இதுவாகும்.
இந்நிலையில் தங்கம் வென்ற இலங்கை அணி நேற்று மாலை நாடு திரும்பியது. நாடுதிரும்பிய வீரர்களுக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இவர்களை இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி அஸ்லெய்ட்சில்வா, கிரிக்கெட் செயற்பாட்டுக் குழுவின் தலைவர் கார்ல்ரன் பேர்னடஸ் தலைமையிலான குழு வரவேற்றது.
ஆசிய விளையாட்டில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி வெண்கலப்பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றிக்கு காரணம் ரெய்னா

- டோனி



ரெய்னாவின் அதிரடி ஆட்டமே இறுதியாட்டத்தில் பெற்ற வெற்றிக்கு காரணம் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தி சம்பியன் லீக் கிண்ணத்தை இரண்டாவது தடவையாகவும் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கைப்பற்றிக்கொண்டது.

சம்பியன் கிண்ணத்தைத் வென்றமை குறித்து சென்னை அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி கூறுகையில்: ஐ.பி.எல். மற்றும் சம்பியன் லீக் தொடர்களைச் சேர்த்து இதுவரை 7 முறை இறுதியாட்டத்துக்கு நுழைந்துள்ளோம். இதில் 4 முறை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளோம்.

கடைசியாக விளையாடிய 2 இறுதியாட்டங்களில் (2012, 2013 ஐ.பி.எல்.) கிண்ணங்களைத் தவற விட்டோம். தற்போது இறுதியாட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது.

இதற்கு ரெய்னாவின் அதிரடி ஆட்டமே காரணம். அவர் இறுதி வரை நிலைத்து நின்று அணியை வெற்றி பெற வைத்தார். இளம் வீரர் நெகி சிறப்பாக பந்து வீசினார்.

ஒட்டு மொத்தமாக இந்த ஆட்டம் எங்களுக்கு நன்றாக அமைந்தது. அத்துடன் நாணயச்சுழற்சியில் வென்றது சிறப்பானதாகும் என்று அவர் கூறினார்.

தோல்வி குறித்து கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர் கூறும்போது, எங்கள் அணி சிறப்பாகவே விளையாடியது. 170 முதல் 180 ஓட்டங்கள் வரை சிறந்த இலக்குத்தான். ஆனால் பனிப்பொழிவால் எங்களது சுழற்பந்து வீரர்கள் பந்துவீச மிகவும் சிரமப்பட்டனர். எங்களது பயணம் முடியவில்லை. இது தான் தொடக்கம். அடுத்த ஆண்டு இதை விட சிறப்பாக விளையாடுவோம் என்றார். (ரி)



# ஆசிய விளையாட்டில் ஆதிக்கம் செலுத்திய சீனா

17ஆவது ஆசிய விளையாட்டு போட்டியில் 151 தங்கம் உள்ளடங்கலாக 342 பதக்கங்களை வென்று ஆசியாவின் அசைக்க முடியாத நாடு என்பதை மீண்டும் நிரூபித்தது சீனா.

தென் கொரியாவின் இன்ச்சியான் நகரில் நடைபெற்று வந்த 17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி வண்ணமிகு வாண வேடிக்கை, கண்கவர் கலைநிகழ்ச்சிகளுடன் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. கடந்த 16 நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் 45 நாடுகள் பங்கேற்றன. 36 வகையான விளையாட்டுகளில் 439 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

151 தங்கப் பதக்கம், 108 வெள்ளிப் பதக்கம், 83 வெண்கலப் பதக்கம் என மொத்தம் 342 பதக்கங்களைக் குவித்த சீனா, ஆசிய பிராந்தியத்தில் தாங்கள் அசைக்க முடியாத அணி என்பதை மீண்டுமொரு முறை நிரூபித்திருக்கிறது. கிரிக்கெட்டில் ஆண்கள் அணி தங்கத்தையும், பெண்கள் அணி வெண்கலத்தையும் வெல்ல, இலங்கை ஒரு தங்கம், ஒரு வெண்கலம் என்பவற்றை மட்டும் வென்று 36 நாடுகளைக் கொண்ட பட்டியலில் 27ஆவது இடத்தை கைப்பற்றியது.




தென் கொரியா 79தங்கம் உள்ளடங்கலாக 234 பதக்கங்களுடன் 2 ஆவது இடத்தையும், ஜப்பான் 47தங்கம் உள்ளடங்கலாக 200 பதக்கங்களுடன் 3ஆவது இடத்தையும், கஜகஸ்தான் 28தங்கம் உள்ளடங்கலாக 84 பதக்கங்களுடன் 4ஆவது இடத்தையும், ஈரான் 21தங்கம் உள்ளடங்கலாக 57 பதக்கங்களுடன் 5ஆவது இடத்தையும் பிடித்தன. இந்தியா 11 தங்கம் உள்ளடங்கலாக 57 பதக்கங்களுடன் 8ஆவது இடத்தைப் பிடித்தது.

17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவடைந்ததைத் தொடர்ந்து போட்டியின் ஜோதி, கொடி என்பன அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ள இந்தோனேசிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டி 2018ஆம் ஆண்டு இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறவுள்ளது. முன்னதாக வியட்நாம் நடத்துவதாக இருந்த குறித்த போட்டி, அந்த நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியதைத் தொடர்ந்து வாய்ப்பு இந்தோனேசியாவுக்கு வழங்கப்பட்டது. (ரி)

## ஹோக்லியிடம் பாடம் கற்ற ரெய்னா

நிலைத்து நின்று அதிரடியாக ஆட விராட் ஹோக்லியிடம் பாடம் கற்றுகொண்டதாக சம்பியன் லீக் இறுதியாட்டத்தில் கொல்கத்தா அணியைப் புரட்டி எடுத்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அதிரடி ஆட்ட வீரரான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த சம்பியன் லீக் தொடரில் சென்னை அணி கிண்ணத்தை 2ஆவது தடவையாக வும் கைப்பற்றிக் கொண்டது. இதில் அதிரடியாக ஆடிய ரெய்னா 62 பந்து களில் 6 ப்வுண்டரிகள், 8 சிக்ஸர்களுடன் 109 ஓட்டங்களை ஆட்டமிழக் காமல் குவித்தார். இந்த அதிரடியான ஆட்டம் குறித்து ரெய்னா கூறியதாவது,

கடந்த 7 ஆண்டுகளில் நான் நிறைய பாடம் கற்று இருக்கிறேன். ஆரம்ப காலங்களில் ஹைடன், மைக் ஹஸி மற்றும் எங்களது பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் ஆகியோர் உதவியாக இருந்தனர். இதனால் என்னால் முதிர்ச்சி அடைய முடிந்தது. இந்திய அணியில் விராட் ஹோக்லியின் ஆட்டத்தை பார்த்து நிறையக் கற்று இருக்கிறேன். நிலைத்து நின்று அதிரடியாக விளையாடி சதம் அடிப்பது பற்றி அவரிடம் இருந்து கற்று கொண்டேன். என்னுடன் ஜோடி சேர்ந்து விளையாடியவர்களில் அணித்தலைவர் டோனி மறக்க முடியாதவர் ஆவார். யுவராஜ் சிங் பெயரையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆட்டத்தை எப்படி முடிப்பது என்பது பற்றி அவரிடம் கற்று இருக்கிறேன் என்று கூறினார். சம்பியன் லீக் தொடரில் தொடர் நாயகன் விருதை வென்ற ரெய்னா, தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்து தங்கத் துடுப்பையும் பெற்றுக் கொண்டதுடன், தொடரில் அதிக சிக்ஸர்கள் விளாசியவர்கள் பட்டியலில் முதலிடத்தையும் பெற்றார். (ரி)





## நீக்கப்பட்டார் நரைன்

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவுகள் அணியிலிருந்து சுனில் நரைன் அந்த நாட்டு கிரிக்கெட் சபையினால் திடீரென நீக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி 5 ஆட்டங்களை கொண்ட ஒருநாள் தொடர் ஆரம்பமாகவுள்ளது. அதைத் தொடர்ந்து ஒரு ரி- 20 மற்றும் 3 டெஸ்ட் ஆட்டங்களில் மேற்கிந்தியதீவுகள் இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது.

நேற்றுமுன்தினத்துடன் நடைபெற்று முடிந்த சம்பியன் லீக் தொடரில் பந்து வீச்சு முறை குறித்து எச்சரிக்கப்பட்ட நரைனுக்கு இறுதிப் போட்டியில் பந்து வீசவும் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்தியாவிற்கு எதிரான தொடரில் விளையாடுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நரைனை, மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் சபை அணியிலிருந்து நீக்கியுள்ளது. அத்துடன், நரைனை உடனே நாடு திரும்ப வும் அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவுறுத்தி இருக்கிறது. இந்தியாவுடன் மோதும் ஆட்டங்களின் போது நரைனின் பந்துவீச்சு குறித்து சந்தேகம் எழும் என்பதால் இந்த நடவடிக்கையை கிரிக்கெட் சபை எடுத்துள்ளதாக தெரிய வருகிறது. (ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# அருளின்றி ஓர் ஆண்டு....

அமரர்

பஞ்சாட்சரம் அருள்சுதர்சன்

(அருள் புகைப்படக் கலைஞர் பளை)



நீரின்றி வாழும் மீனாய்
நிலம் இன்றி வாழும் மரமாய்
நீயின்றி கடந்தது ஓராண்டு !
எமக்கு!!
நீ மாண்டு போய்ஆண்டொன்றும்
மாண்டது
எம் துயர் மாறவில்லை ஐயா
விவேகமாய் விகடமாய்
கபடமின்றி நீபேசும் கனிவான
பேச்சு நெஞ்சை விட்டு போகாது
என் நாளும்
உன் நினைவாய் வாழுவோம்....

அன்னாரின் ஓராண்டு நினைவும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் எமது இல்லத்தில் 07.10.2014 செவ்வாய்க்கிழமை நடைபெறும் இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

கச்சார் வெளி, பளை
077 2818992

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து பாலேந்திரன்

7 ஆம் கட்டை ஒழுங்கை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலேந்திரன் நேற்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சரவணமுத்து- இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலாம்பிகை - ஸ்ரீ பாஸ்கரனின் அன்புச் சகோதரனும், விபுலன் (லண்டன்) , சயந்தன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், பரமேஸ்வரன், திருமதி,ஞானேஸ்வரி, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராமுப்பிள்ளை வசந்தரூபி

அழுக்கை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை வசந்தரூபி நேற்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்துரை இராமுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவசக்தி, அருட்சக்தி, சிவகுமார் ஆகியோரின் அன்பு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2014) திங்கட்கிழமை அவரது மருமகன் இல்லத்தில் (பா.குலதீபன், உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி, உடு வில்) நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் மகளிர் கல்லூரி
மேற்கு வீதி, உடுவில்.

தகவல்:
மகன்- இ.சிவகுமார்,
மருமகன் - பா.குலதீபன்

## நினைவு கூரல்

மலர்வு
18 . 04 . 1993



உதிர்வு
03 . 10 . 2014

### அருள்தாசன் சசிவதனா

"விருந்து வீட்டுக்குப் போவதிலும் துக்க வீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதை தன் மனதிலே சிந்திப்பான்."

பிரசங்கி - 7:2

"ஜெய ஜீவிய திருச்சபை"
Victory Life Church
Sri lanka



'உதயன்' ஊடக அனுசரணையுடன், திக்கம் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரொன்றை நடத்தி வருகின்றது. அதற்கான நிதியுதவியாக ரூபா 50,000 ஐ, 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் திக்கம் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினரிடம் நேற்றுக் கையளித்தார். (ற)

# ஓரங்கட்டப்பட்டார் அஸ்வின்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் தொடரின் முதல் 3 ஆட்டங்களுக்கான அணியிலிருந்து அஸ்வின் நீக்கப்பட்டுள்ளதுடன், புதிய சுழற்பந்து வீச்சாளர் அணிக்கு தெரிவாகியுள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 5 ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் மூன்று ஆட்டங்களுக்கான இந்திய அணி சந்தீப் பட்டேல் தலைமையிலான தெரிவுக் குழுவினால் நேற்று முன்தினம் மும்பையில் அறிவிக்கப்பட்டது.

இந்த 3 ஆட்டங்களிலும் தமிழக வீரர் ரவிசந்திரனுக்கு அஸ்வின் ஓய்வு கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த 3 ஆட்டங்களில் காயம் காரணமாக விலகிக் கொண்ட ரோகித்சர்மாவுக்கு பதிலாக முரளி விஜய் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன், இடது கை சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் முதன்முறையாக அணிக்குத் தெரிவு செய்யப்பட்டு இருக் கிறார்.

அணி விவரம் : டோனி (அணித் தலைவர்), சிகார் தவான், ரகானே, கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, அம்பத்தி ராயுடு, ரவீந்திர ஜடேஜா, அமித் மிஸ்ரா, புவனேஷ்வர் குமார், மொக மட் ஷமி, மோகித் சர்மா, உமேஷ் யாதவ், முரளி விஜய், குல்தீப்யாதவ். (ரி)

## கடை வாடகைக்கு

அச்சுவேலி டச்சு றோட் முஸ்லிம் ஹோட்டல் அருகில் (பஸ்நிலையம் முன்பாக) கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 077 615 8066, 076 687 9640

## மரண அறிவித்தல்



### விக்கிரமாதித்தன் அசோகாதேவி

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட விக்கிரமாதித்தன் அசோகாதேவி நேற்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பார்வதிப்பிள்ளையின் மருமகளும், விக்கிரமாதித்தனின் அன்பு மனைவியும்,புவனேஸ்வரி, நடேசு , விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரநாதன்,மனோகரி,மனோகரன், யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி அம்மா, தங்கேஸ்வரி, கல்யாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுசா, கஜந்தன்,ஜேனுசா, திசாணன்,திலக்சனா, காலஞ்சென்ற திவ்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2014) திங்கட் கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை கணநாதன்



அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கணநாதன் நேற்று (05.10.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் மகேசன்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் நிரோஷன் (N.D.E.S மாணவன்) நிலானி (யாழ் இந்து மகளிர் கல்லூரி A/L 2013) ஆகியோ ரின் அன்புத் தந்தையும் தர்மரத்தினம், செல்வராணி, விஜயராணி(ஜேர்மனி), ஜெயராணி, யோகரட்ணம்(லண்டன்), புஸ்பராணி (ஜேர்மனி), ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பராசக்தி, காலஞ்சென்ற மகேந்திரன், உமாகாந்தராசா, சுந்தர மூர்த்தி, விக்னேஸ்வரி, நாகநந்தினி, நாகேந்திரன், லோகேந்திரன் (கொழும்பு), மகேஸ்வரி, மகேந்திரன் நாகேஸ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அராலியில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று இன்று (06.10.2014) திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் பூதவுடல் அராலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 071-3056298

# பாடசாலை வாயிலுக்கு முன்பாக மதுப் போத்தல்கள்

தென்மராட்சி, ஒக்.6

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் டச்சு வீதியில் உள்ள பிரதான வாயிலுக்கு முன்பாக தினமும் பெருமளவு வெற்று மதுப் போத்தல்கள் காணப்படுவது குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

தினமும் மாலை வேளைகளில் பிரதான வாயிலுக்கு முன்பாக உள்ள கடையில் வைத்து அருந்துவதாகக் கருதப்படும் மது போத்தல்கள், பியர் ரின்கள் கடைக்கு முன்பாக வீசப்பட்டு காணப்படுகின்றன.

மறுநாள் காலையில் பிள்ளைகளை அழைத்துச் செல்லும் பெற்றோர் அவற்றை எடுத்து எதிரே உள்ள காணிக்குள் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாலைவேளையில் வேலை முடித்துவரும் இந்திய ரயில்வே பாதை பணியில் ஈடுபடுவோர் கடை உரிமையாளர் மூலம் அவற்றைப் பெற்று அருந்திவிட்டுச் செல்வதாகவும் அவர்களுடன் இணைந்து மது அருந்து வோர் வீதியில் செல்வோரை மது அருந்த வருமாறு அழைப்பதாகவும் பெற்றோர் தெரிவித்தனர். (வ-9)

# தென்மராட்சி வலயத்தில் கராத்தே வகுப்புகள்

மாணவர்களின் உடல் வளம், ஆரோக்கியம் தன்னம்பிக்கை ஆகியவற்றை ஊட்டும் கராத்தே பயிற்சி வகுப்பு தென்மராட்சி கல்வி வலயத்தில் முதன்முறையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வகுப்புகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஜயதசமி தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டன.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவ, மாணவியருக்கு கராத்தே பயிற்சி வகுப்புகள் இடம்பெறும் என்று கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தெரிவித்தார். (வ-9)

# புகையிலை நாற்றுமேடை அமைக்கும் பணிகள் ஆரம்பம்

வடமராட்சிப் பிரதேசத்தில் இந்த ஆண்டுக்கான புகையிலைச் செய்கையை மேற் கொள்வதற்காக விவசாயிகள் புகையிலை நாற்றுமேடை அமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். புலோலி, அல்வாய், கரண வாய், திக்கம், பொலிகண்டி ஆகிய இடங்களில் புகையிலை நாற்று மேடைகளை அமைப்பதில் அந்தப் பகுதி விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நவம்பர், டிசெம்பர் மாதங்களில் புகையிலை நாற்று நடுகை ஆரம்பமாகி அடுத்த ஏப்ரல், மே மாதங்களில் அறு வடை இடம்பெறுவது வழக்கமாகும். (வ-173)

# உரிமை கோராத பொருள்கள் ஏலத்துக்கு

சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குகளின் சான்றுப் பொருள்கள் சமர்ப்பிக்கப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாத பொருள்களும் நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு நீதிமன்ற வளா கத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளதாகநீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (வ-9)

# முதியவரைத் தாக்கிய குளவிகள்

தென்மராட்சி, ஒக்.6

சர்வதேச முதியோர் வாரத்தில் பனையிலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிலிருந்து பறப்பட்ட கருங்குளவிகள் சைக்கிளில் சென்ற முதியவரை துரத்தித் தாக்கின. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது. அதேஇடத்தைச் சேர்ந்த மூத்தவன் பாலன் (வயது-70) என்பவர் குளவிகளால் தாக் கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கைதடி-நுணாவில் அ.த.க பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும்

**திருமதி சியாமளா குகதாஸ்**

அவர்கள் இன்று (06.10.2014) தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெறும் சிறந்த ஆசிரியர்களுக்கான **பிரதீபா பிரபா** விருது பெறுவதை இட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவிகள்பெற்று கல்விப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/கைதடி-நுணாவில் அ.த.க. பாடசாலை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

புலமைப் பரிசில் பரீட்சை-2014 சாதனை செய்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ஸ்ரீ.விந்தியா-159,
வி.கஸ்தூரி-161,
ச.டினிஸ்காந்-161,
கு.லக்ஸாயனா-166,
சி.டிஷானி-157
ஆகிய மாணவர்களுடன்
அதிபர், உபஅதிபர்,
ஆசிரியர் ச.ஜெயந்தினி

பாடசாலை
அபிவிருத்திசங்கம்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி **161** புள்ளிகள் பெற்று சித்தியடைந்த

செல்வி **ஸ்ரீகாந்தன் ஜதுர்சி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சங்கர் ஆயுள் வேத கிளினிக்
ஏ9 வீதி,
கிளிநொச்சி. (17980)(1.3.6)

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அம்மம்மா,
மாமாமார், மாமிமார்,
சித்தப்பா, சித்தி, அண்ணா ஜதுர்ஷன்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனும்

**யோகராஜா நளினி**

தம்பதியரின் புதல்வனுமாகிய

செல்வன் **ரம்மியராஜ்**

2014 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி **162** புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு, மேலும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டமானாறு.
(52941) (4.3.6)

வாழ்த்துவோர்கள்: பகீரதன் (மாமா), வனிதா (அத்தை), தாத்தா, அப்பம்மா, தங்கை, மாமா, அத்தை, மச்சான், மச்சாள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**
**சுன்னாகம்**

தரம் ஐந்து 2014 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி அடைந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ந.அபிராமி 187 | த.உத்தரா 182 | பி.மிதுனா 181 | ச.சுவேதா 175 | ய.அபிஷாயினி 171 | கி.பிரணவன் 171



ஸ்ரீ.சிவசங்கவி 167 | கே.லதீஷன் 165 | ஜெ.கஜறூபன் 164 | ர.பனோஜன் 162 | செ.ஜிசான் 160 | யோ.அனித்தா 159 | பா.அபிலாஷினி 158

**இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| நி.ஹம்சிகன் | 157 | த.அனோஜா | 133 |
| ந.கிருசிகா | 152 | ச.சங்கீதா | 127 |
| கே.லோஜிதன் | 148 | சி.தர்சனா | 125 |
| பா.ரிசிகேசசர்மா | 146 | தே.இளங்குமரன் | 121 |
| ஆ.கர்ஷிகா | 141 | கே.சாளின | 119 |
| ச.தனுஷ் | 136 | சி.சிவலக்சி | 117 |
| மோ.மதிநிலா | 130 | க.[illegible]ர்சன் | 109 |
| சி.றதுஷன் | 126 | க.துவாரகி | 154 |
| கே.கலா[illegible] | 124 | சி.சிவதர்சன் | 151 |
| மூ.பவிஸ்ணவி | [illegible] | ம.சங்கவி | 146 |
| கு.வைஸ்ணவ | 117 | கு.டிலாந் | 144 |
| க.குகதீஷா | 112 | வி.யதுசனா | 139 |
| ஜெ.ஜெனுஜன் | 100 | சி.[illegible]க்ஷிகா | 131 |
| சி.பிரவீனா | 155 | ஜீ.சஜித | 126 |
| ச.கஜானி | 152 | சி.பார்கவி | 124 |
| ம.கருண்யா | 147 | கு.கிருசிகா | 120 |
| ம.கௌசிகன் | 144 | ஆ.கர்ணிகா | 117 |
| சு.சதுர்சன் | 141 | ச.நிரோஸ்குமார் | 115 |
| | | அ.லக்சாணி | 106 |

**59 மாணவர்கள் தோற்றி 70 புள்ளிக்கு மேல் 59 மாணவர்கள்**

இவர்களின் வெற்றிக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இவர்கள் கல்வியில் சாதனைகள் படைக்க எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

பாடசாலைச் சமூகம்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**சி.சிவராசா**
(போல் தோழர்)

புங்குடுதீவு இறுப்பிட்டி கல்லடி அம்மன் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ நாக புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் விநியோகம் வழங்கி உதவியமைக்காக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் கௌரவ சி.சிவராசா (போல் தோழர்) அவர்களுக்கும் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் ப. தயானந்தன் அவர்களுக்கும் மின்சார இணைப்பு வேலைகளைச் செய்துதவிய மின்சார சபையினர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் மேன்மேலும் தங்கள் சேவையினைத் தொடர வேண்டி நிற்கின்றோம்.

(47301)(4.3.6)

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி
கல்லடி ஸ்ரீ நாகபுவனேஸ்வரி அம்பாள் ஆலயபரிபாலனசபையினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வி இராசையா பிரியதர்சினி
(யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை குடத்தனை)

எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியை செல்வி இராசையா பிரியதர்சினி அவர்கள் இவ்வருடம் நல்லாசிரியராக தெரிவு செய்யப்பட்டு இன்றைய தினம்(06.10.2014) தேசிய கல்வி நிறுவகத்தில் கௌரவ பிரதமர் டி.எம்.ஜெயரட்ண அவர்களினால் **பிரதீபா பிரபா** விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்.

இவரை நாமும் வாழ்த்துவதோடு மேலும் பட்டங்கள் பல பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்


# சுவர்ணபுரவர விருது வழங்கல் 21ஆம் திகதி

தென்மராட்சி, ஒக்.3

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் சுவர்ணபுரவர விருது வழங்கும் விழாவும் பரிசில் வழங்கலும் எதிர்வரும் 21ஆம் திகதி பி.ப.4மணிக்கு கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள வோட்டர்ஸ் ஏஜ. கட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடத்தப்படவுள்ளது.

நாடெங்கிலுமுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக உள்ளூராட்சிமாகாண சபைகள் அமைச்சு சகல மாகாண சபைகளின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி சபைகளின் முதல்வர், உப முதல்வர், தவிசாளர், உப தவிசாளர்கள், நகர ஆணையாளர், செயலாளர் ஆகியோரைப் பங்குபற்றுமாறு அமைச்சின் மேலதிக செயலாளர் டபிய்யூ.எம்.பீ.ஜி.விக் கிரமசிங்க அறிவித்துள்ளார்.

(ந-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவன்
செல்வன் **ஜென்சன் றொனால்ட் அன்சன்**
2014 ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில்
177 புள்ளிகளைப் பெற்றமையை இட்டு பாராட்டுவதோடு
எதிர்காலத்தில் பரீட்சைகளில்
உயர்புள்ளிகளைப் பெற்று கல்வியில்
உயர வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.



Congratulation

வாழ்த்துவோர் :
அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா
உசன், மிருசுவில்.



## யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆண்டுப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 18ஆம் திததி (18.10.2014) காலை 9.30 மணிக்கு கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இக்கூட்டத்தில் நடப்பாண்டிற்கான நிர்வாகக் குழு தெரிவுசெய்யப்படும்.

நன்றி.
நிர்வாகக்குழுவினர்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/கோக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி
**162 புள்ளிகளைப் பெற்று**
சித்தியடைந்த

### சி.வரகுணன்

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் உயர்ச்சிகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**
அம்மப்பா, அம்மம்மா


# பொலிஸ் அதிகாரி காயம்

கொழும்பு, ஒக்.6

கொழும்பு,டி.ஆர். விஜயவர்த் தன மாவத்தை பிரதேசத்தில் நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயம டைந்துள்ளார்.

இந்த விபத்தில் அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் ஒரு வரே காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

குறித்த பொலிஸ் அதிகாரி செலுத்திக் கொண்டு வந்த 'யமஹா' ரக அதிவேக மோட்டார் சைக்கிளானது வீதியை விட்டு விலகி அருகிலுள்ள மதிலொன்றில் மோதியதாலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதில், பொலிஸ் அதிகாரியின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின், 72 ஆம் இலக்க அறையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ந)


## கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்



வருகின்ற தீபாவளியை முன்னிட்டு
ஜெயசாயி இல் கொள்வனவு செய்யப்படும்
அனைத்து விதமான ஆடைகள், பான்சிப்
பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப்
பொருள்கள் அனைத்தும் குறித்த விலையில்
இருந்து அரைவாசி விலைக்கு
பெற்றுக்கொள்வதுடன் 3, 4, 5 ஆகிய
திகதிகளில் 3000/- ரூபாவிற்கு மேல்
கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களும்
பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



**114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,**
**T.P : 021 221 9393**

(52606)(7.6)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 182 புள்ளிகளைப் பெற்ற தனது மாவட்டத்தில் 5 ஆவது நிலையையும் பாடசாலை மட்டத்தில் 1 ஆவது நிலையையும் பெற்ற **செல்வி வைஸ்ணவி லோகநாதன்** அவர் களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவருக்கு பாலர் பாடசாலை யில் இருந்து இன்று வரை கற்பித்த அதிபர் ஆசிரியர்களை மற்றும் பொதிகை கல்வி நிலைய நிர்வாகி மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அனைத்து ஆசிரிய குழாமிற்கும் உளம் கனிந்த எமது இனிய ஆசிரியர் தின வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**87,திருநகர்,**
**கிளிநொச்சி.**

**வாழ்த்துவோர்**
**பெற்றோர்.**
**(லோகன், தீபா)**



## ஓவியக் கண்காட்சி

92 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் I.L.O நிறுவன அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய ஓவியப் போட்டிகளின்-

### ஓவியக் கண்காட்சி

காலம்:- 2014.10.07 செவ்வாய்க்கிழமை
நேரம்:- மு.பகல் 9.30 - பி.பகல் 5.00
இடம்:- கூட்டுறவுக் கலாச்சார மண்டபம் A9 வீதி,கிளிநொச்சி.

**அனைவரையும்**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,**
**கிளிநொச்சி.**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி அருந்தவம் யோகராஜா அவர்கள்
எமது பாடசாலையின்
ஆசிரியை திருமதி அருந்தவம் யோகராஜா அவர்கள் கல்வி அமைச்சின் நல்லாசிரியர் விருது-2014 இல் தெரிவாகி இன்று பிரதீபா பிரபா விருது பெறுகின்றார்.

இவர் மேலும் பல பட்டங்கள் பதவிகளை பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, கொடிகாமம்.



## மரண அறிவித்தல்



### சண்முகலிங்கம் நளினிகாந் (கிருபா)

சண்டிலிப்பாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு சத்தியபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் நளினிகாந் (கிருபா) 28/09/2014 ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் சண்முகலிங்கம் சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மகனும், ரஜனிகாந், ராதிகா, றமணன், ரேகா, தில்லா, வாஹு ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலசுப் பிரமணியம் (பப்பா), திரவியம்(மம்மி) ஆகியோரின் பெறாமகனும், சுகிர்தன், சுதா ஆகியோரின் மைத்துனரும், ஐதுர்ஷன், மொறீன், லதுர்ஷன் ஆகியோரின் ஆசை சித்தப்பாவும், கௌரீஷனின் ஆசை மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதி ஆராதனை அவரது இல்லத்தில 06/10/2014 திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெற்று நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சத்தியபுரம், உடுவில் தெற்கு,சுன்னாகம்.**
**தொ.பேசி.இல : 077 403 9546**

**தகவல்: குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்

### சுப்பன் சின்னத்தம்பி(மதன்)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் சின்னத்தம்பி (மதன்) அவர்கள் (05.10.2014) அன்று அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் சுப்பன் மாணாங்குட்டி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் (நாகி) அன்புக் கணவரும், குணரட்ணம், பரமசாமி (தபால் உத்தியோகத்தர், கைதடி), ராணி நாகேஸ்வரி, தங்கராஜா (யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோன்மணி, ரத்னாவதி, அப்பையா, சந்திரன், வானதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தகுமார் (இத்தாலி), விதர்சினி, கௌசலா (சுவிஸ்), விதராஜ் (டென்மார்க்), குலதீபன் (சுவிஸ்), ஷாந்திகா, வித்திகா, விஷ்ணுகாந், சாருகா, கஜனி, காருண்யன், பகலவன், தூயவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.10.2014 திங்கட்கிழமை பி.ப 2.00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திக்கு அருகில்,
கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.



## துயர் பகிர்கின்றோம்

எமது சங்கத்தின் நீண்டகால உறுப்பினரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினருமாகிய

### முத்துக்குமாரு சிவகுமாரன்
(பகவான் மருந்தக உரிமையாளர்)

அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயர் கொண்டுள்ளோம். அன்னாரின் குடும்பத்தவர், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு:- அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக அங்கத்தவர்கள் அனைவரையும் 07.10.2014 காலை 9.00 மணிக்கு wesco முன்றலில் ஒன்று கூடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



செயலாளர்
வடபிராந்திய யாழ் ஆங்கில
மருந்து வணிகர் மன்றம்

# பெங்களூர் சிறையில் ஜெயலலிதாவுக்கு ஏதாவது நேர்ந்தால் இரத்தக்களரியே

## எச்சரிக்கின்றார் தா.பாண்டியன்

சென்னை, ஒக்.6

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததான ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவை தமிழ்நாட்டில் இருக்கும் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கோரிக்கை விடுத்திருக் கிறார்.

பெங்களூர் சிறையில் இருக்கும் ஜெயலலிதாவுக்கு அங்கே ஏதாவது சிறு அசம்பாவிதம் நேர்ந்தாலும். அதன்விளைவாக ஏற்கனவே காவிரி நதி நீர் விவகாரத்தில் தமிழ் நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கடந்த கால கசப்பு மேலும் அதிகரித்து விரும்பத்தகாத விபரீதங்கள் நேரும் என்பதாலேயே தாம் இந்த கோரிக்கையை முன் வைப்பதாக தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இப்படி ஜெயலலிதாவை தமிழ் நாட்டு சிறைக்கு மாற்றுவதனால், அவருக்கு எதிராக நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்போ, அதன் மீதான மேன்முறையீடோ எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது என்றும் அவர் விளக்கமளித்தார்.

சந்தனக்கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகள் என்று கைது செய்யப்பட்டிருக்கும் பலர், பல ஆண்டுகாலம் கர்நாடக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் தொடர்பாக இத்தகைய கோரிக்கைகளை வைக்காமல், ஜெயலலிதாவுக்கு மட்டும் இத்தகைய சலுகையை கேட்பது, அரசியல் செல்வாக்கு மிக்கவர்களுக்கு ஒரு அளவுகோல், அரசியல் செல்வாக்கில்லாத ஏழைகளுக்கு ஒரு அளவுகோல் என்கிற இரட்டை அளவுகோலாக விமர்சிக்கப்படாதா என்று அவரிடம் கேட்டபோது, இத்தகைய ஒப்பீடே அடிப்படையில் தவறானது, பொருத்த மற்றது என்று நிராகரித்தார் தா பாண்டியன்.

வீரப்பனின் கூட்டாளிகள் என்று தண்டிக்கப்பட்டு கர்நாடக சிறையில் இருப்பவர்கள் கொலைக்குற்றச்சாட்டின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள் என்றும் ஜெயலலிதாவை அவர்களுடன் ஒப்பிடமுடியாது என்றும் கூறினார் தா.பாண்டியன்.

தமிழக மக்களின் அன்பைப் பெற்று தமிழக மக்களின் பிரதிநிதியாக முதலமைச்சர் ஆனவர் ஜெயலலிதா என்றும் அவருக்கு கர்நாடக சிறையில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் அது அரசியல் விபத்தாக மாறி விடும் என்றும் இருமாநில மக்களுக்கு இடையிலும் அதனால் ரத்தக்களரி ஏற்படும் என்றும் தா.பாண்டியன் அச்சம் வெளியிட்டார். (ற)

## விபத்தில் சிக்கியோரை வைத்தியசாலை சேர்ப்பித்த உதயபெரேரா

யாழ்ப்பாணம், ஒக்.6

விபத்தில் காயமுற்று வீதியோரம் விழுந்திருந்த இருவரைக் காப்பாற்றி தனது வாகனத்தில் ஏற்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளார் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா. இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பகுதியில் நடந்துள்ளது.

அந்தப் பகுதியூடாக பயணித்த யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி வீதியில் பயணித்த இருவரை மோதி விட்டு வாகனம் ஒன்று நில்லாது சென்றுள்ளதை அவதானித்ததை அடுத்து அங்கு சென்று பார்த்தபோது இருவர் காயங்களுக்குள்ளாகி வீதியோரம் வீழ்ந்து கிடந்துள்ளனர். உடனடியாக அவர்களை தனது வாகனத்தில் ஏற்றி, யாழ்.போதனா வைத்தியசாலை கொண்டுவந்து சேர்ப்பித்துள்ளார். (ற)

## ஜனசெவன பயனாளிகளுக்கு காசோலைகள்

ஜனசெவன பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 75 பயனாளிகளுக்கு நேற்றுக் காசோலைகள் வழங்கப்பட்டன. யாழ். வை.எம்.சி.ஏ கட்டடத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர சபை முன்னாள் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கினர். 5 லட்சம் ரூபா கடனுக்கு தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் 3 இலட்சம் ரூபா கடனுக்கு தெரிவு செய்யப்பட்ட ஏனையோருக்கும் கடன் தொகை அரைவாசியும் காசோலையாக வழங்கப்பட்டன.

இதேவேளை உறுதியில்லாத காணிக்காரர்களுக்கு நேற்று இவ் நிகழ்வில் காணி உறுதிகள் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# தொடர்ச்சிகள்

### யாழ்.வரும்

கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில், வெளிக் களப் பணியில் ஈடுபடும் அரச ஊழியர்களுக்கு வரி விலக்குடனான மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வரி விலக்கை மாத்திரம் வழங்கி, மோட்டார் சைக்கிளின் பெறுமதிக்குரிய பணத்தைச் செலுத்தி அரச ஊழியர்கள் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தத் திட்டம் ஏற்கனவே மேல் மாகாணம் மற்றும் ஏனைய மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் 4 ஆயிரம் அரச ஊழியர்கள் வரையில் இணைந்துள்ளனர். இவர்களில் 2 ஆயிரம் பேருக்கு முதற்கட்டமாக மோட்டார் சைக்கிள் வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவுள்ளார். அதன்போது இந்த மோட்டார் சைக்கிள் வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

குறித்த வெளிக்கள ஆண் அரச ஊழியர்கள், சேவைக் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்திற்குள் உள்ளானவர்கள் இதனைப் பெற்றுக் கொள்வதாயின் ஒரு லட்சம் ரூபாவும், சேவைக் காலம் முடிவடைய ஒரு வருடத்திற்கு மேற்பட்டவர்கள் 50 ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும். இதே போன்று பெண் அரச ஊழியர்கள், சேவைக் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்திற்குள் இதனைப் பெற்றுக் கொள்வதாயின் 90 ஆயிரம் ரூபாவும், சேவைக் காலம் முடிவடைய ஒரு வருடத்திற்கு மேற்பட்டவர்கள் 45 ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும். அதனை ஒரே தவணையில் செலுத்த வேண்டும் என்று அரசால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆண்களுக்கு டிஸ்கவர் - 125 சீசீ ரக மோட்டார் சைக்கிளும், பெண்களுக்கு பிளஷர் ரக மோட்டார் சைக்கிளும் வழங்கப்படவுள்ளன. இதில் ஆண்களுக்குரிய மோட்டார் சைக்கிள்களே துரையப்பா விளையாட்டரங்குக்கு நேற்று மாலை கொண்டு வரப்பட்டுள்ளன. (ற-5)

### யாழ்.

முல்லைத்தீவில் 85 பேரும், கிளிநொச்சியில் 46 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

### சர்வதேச

பணியாற்றுவது அர்த்த மற்றது என இந்திய மனித உரிமை பணியாளர் அவ்டேஸ்கவுசல் தெரிவித்துள்ள நிலையிலேயே இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

"அவர்கள் ஆலோசனைக் குழுவைச் சேர்ந்தவர்கள். ஆலோசனை வழங்கு வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்க விரும்பினால் வழங்கலாம். ஆனால், அவை பொருத்தமானதாகவும், பயனுள்ளதாகவும் காணப்பட வேண்டும். ஏனெனில், இறுதியில் அறிக்கையை தயாரிக்கப் போவது ஆணைக்குழுவே" என்று பரணகம குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, மொழி பெயர்ப்பு பிழைகள் ஏற்பட்டுள்ளது என்று சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பிழையானது என்றும் காணாமற்போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெறும் வளங்களைக் கொண்டே ஆணைக்குழு பணிகளை மேற்கொண்டு வருவதாக ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.

தமது மொழிபெயர்ப்பாளர் ஓய்வு பெற்ற நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர் எனவும் ஏனையவர் சட்ட உதவி ஆணைக்குழுவில் பணியாற்றுபவர் எனவும் பரணகம தெரிவித்துள்ளார்.

மொழிபெயர்ப்பாளர்கள் சில சொற்களை விட்டிருக்கலாம் எனவும் அது விசாரணைகளில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காலை முதல் மாலை வரையில் மொழி பெயர்ப்பாளர்கள் பணியாற்றி வருகின்றனர் என்றும் சில பிழைகள் ஏற்படுவது வழமையானதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு வெளிப்படைத் தன்மையுடன் விசாரணைகளை நடத்தி வருவதால் வேறு பிழைகளையோ தவறுகளையோ சுட்டிக்காட்ட முடியாத தரப்பினர் சின்னச் சின்ன பிழைகளை பூதாகாரமாக்கிக் காண்பிக்க முயற்சிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். காணாமற்போதல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு தனியான ஓர் குழு நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-சி)

### போலித் தங்கம்

பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். தம்மிடம் 4 கிலோ தங்க பிஸ்கட்டுகள் உள்ளன என்றும். அவற்றை சுமார் 25 லட்ச ரூபாவுக்கு விற்கவுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அதனை நம்பிய மாதகலைச் சேர்ந்தவரும், வெளிநாட்டில் உள்ள ஒருவருக்கு இது பற்றிக் கூறியுள்ளார். அதற்குரிய பண ஏற்பாடும் செய்துள்ளார். பணம் கிடைத்ததும் 4 கிலோ தங்க பிஸ்கட்டுகளையும் கொள்வனவு செய்தார். அதைப் பின்னர் பரிசோதனை செய்த போது, ஒரு கிலோ தங்கம் தான் கிடைத்ததுள்ளது. ஏனையவை செப்பும், பித்தளையுமே. தன்னை ஏமாற்றிய நால்வரும் நாவற்குழியில் தற்போது உள்ளனர் என்ற தகவல் மாதகலைச் சேர்ந்தவருக்குக் கிடைத்ததும், அவர் உடனே அது குறித்துப் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். அங்கு விரைந்த பொலிஸார் குறித்த நால்வரையும் மடக்கிப் பிடித்துள்ளனர். அவர்களிடம் இருந்து 3 கிலோ 260 கிராம் ஈயம், 2 கிலோ 800 கிராம் செப்பு என்பனவும் கைப்பற்றப்பட்டன. தற்போது அவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-4)

### இராணுவ

தையான குமாரசாமி திவாகரன் (28) என்பவரே உயிரிழந்தவராவார்.

படுகாயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதி சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கரம்பகம் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சின்னத்தம்பி தபேந்திரன் (23), கச்சாயைச் சேர்ந்த உதய குமார் இதேனிகன் (21), கொடிகாமத்தைச் சேர்ந்த நடராசா நிரூசன் (21) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவரது உடல் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துக் குறித்த விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி.9)

### உரிமைகளை

இதேவேளை, இலங்கையில் தமிழ் மொழிக் காகவும் இனத்துக்காகவும் ஒழுக்கத்துக்காகவும் இலட்சக்கணக்கான மக்களை பலிகொடுத்தோம். எமது பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. அடக்கு முறைக்கு மத்தியிலேயே நாம் வாழ்கின்றோம். உரிமைகளை வென்றெடுக்கும்வரை எமது போராட்டம் ஓயாது- என்றார்.

### அரசியல்

னரால் கைது செய்யப்பட்ட ஜெயக்குமாரி 200 நாள்கள் கடந்த நிலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதே போன்று அரசியல் கைதிகளும் நீதிமன்றங்களில் முற்படுத்தப்படாது சிறைகளில் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. வவுனியா நீதிமன்றத்தின் முன், கறுப்புத் துணிகளால் முகத்தை மறைத்து மக்கள் தமது கோரிக் கையை வலியுறுத்தவுள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில், வடக்கு கிழக்கில் உள்ள சகல பிரஜைகள் குழுக்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர், மாகாண சபையைச் சேர்ந்தோர், உள்ளூராட்சி நிறுவனங்களைச் சேர்ந்தோர், மனித உரிமை அமைப்புக்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், கல்விச் சமூகத்தினர், அரச,அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், ஊடகவியலாளர் என அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்"- என்று தெரிவித்துள்ளனர். (ற-402)

### 5 மாவட்டங்களில்

கைக்கு அமைவாக இந்த மாதம் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் பஸ் தரிப்பு நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கு மாகணத்தில் 5 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக பொருத்தமான இடங்களில் 40 தொடக்கம் 50 பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. தற்போதுள்ள பஸ் தரிப்பு நிலையங்கள் போல் அல்லாது நீண்ட காலப் பாவனைக்கு ஏற்ப ஒரே மாதிரியான பஸ் தரிப்பு நிலையங்கள் சுமார் 3 இலட்சம் தொடக்கம் 5 இலட்சம் வரையான நிதியில் ஒவ்வொரு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. அதற்கான பணிகள் இந்த வருட இறுதிக்குள் முடிவடையும்"- என்று தெரிவித்துள்ளார்.

(ற-14)

### யாழ். பஸ்

நிற்கின்றோம். ஆசிரியர்கள் பணிந்து போவார்கள் என்று கணக்குப் போட்டுக் கொண்ட கல்வி அமைச்சு ஆசிரியர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து வருகின்றது.

பாடசாலை அதிபர் நியமனத்தின் போது 1998/23 சுற்றறிக்கை உதாசீனம் செய்யப்பட்டு விண்ணப்பம் கோராமல் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுவதை நிறுத்தும்படி வடக்கு மாகாண சபைக்கு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டாமா?. வட மாகாண சபையால் அதிபர் இடமாற்றங்கள் இடமாற்ற சபையின்றி செய்யப்படுவதை நிறுத்த வேண்டும்.

ஆசிரியர்களின் பதவி உயர்வுகளை வழங்க வேண்டும். 2007/20 தேசிய இடமாற்றக் கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும், அதிபர் சேவையில் பதவி உயர்வுகளை வழங்க வேண்டும், அதிபர் வெற்றிடங்களை ஒழிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மையுடன் நிரப்ப வேண்டும் போன்ற 15 கோரிக்கைகளை முன்வைத்து இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்"- என்று தெரிவித்துள்ளார்.

த.தே.ம.மு. ஆதரவு

ஆசிரியர்களின் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு தெரிவித்துள்ளது. "ஆசிரியர் சமூகம் கடந்த பல மாதங்களாகத் தமது பிரச்சினை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியபோதும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. அதன் காரணமாக இன்று அவர்கள் மேற்கொள்ளவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு நாம் எமது பூரண ஆதரவை வழங்கவுள்ளோம்"- என்று அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

### துன்னாலையில்

கப்பட்டது.

அந்த முரண்பாட்டின் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் இரவு மற்றும் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவங்களால் பலர் காயமடைந்துள்ளனர். அதனையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு 6 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து கோடரி, வாள்கள் இரண்டு, எறிவதற்காக என்று சுமார் 25 பீங்கான் போத்தல்கள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். தற்போது அங்கு இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை கைது செய்யப் பட்ட 6 பேரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4,108)

### சிறுவர்

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.அனந்தி, வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் ச.சிவகுமாரன், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ரூபா உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-5)

### அளுத்கம

அமர்வுகளின்போது விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பல நாடுகள் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்கம், குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதித்தல் உள்ளிட்ட விடயங்களில் தொடர்ச்சியாக முன்னேற்றத் தைப் பதிவுசெய்யுமாறு பான் கீ-மூன், ஜனாதிபதியிடம் கோரியுள்ளார். (ற-சி)

# சலுகைக் கட்டண அடிப்படையில் மதத் தலங்களுக்கு யாத்திரை

## 60 வயதைக் கடந்துள்ள மூத்த பிரசைகளுக்கு

கொழும்பு, ஒக்.6
சலுகைக் கட்டண முறைமை ஒன்றின் கீழ் 60 வயதைக் கடந்துள்ள மூத்த பிரசைகளுக்கு உள்நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் உள்ள மத வணக்கத் தலங்களைத் தரிசிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய தம்பதிவ, திருப்பதி, வேளாங்கண்ணி, ஜெரூசலேம், ரோம், வத்திக்கான், தாய்லாந்து உள்ளிட்ட பல நாடுகளிலும் உள்ள மத வணக்கத் தலங்களைத் தரிசித்து மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இதன்மூலம் வாய்ப்பாக அமைவதாக அமைச்சர் பீனிக்ஸ் பெரேரா கொழும்பின் சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அனேகமான முதியோர்களின் கனவாக இருப்பது தாம் பின்பற்றும் சமயத்துக்குரிய வணக்கத் தலம் ஒன்றை ஒரு தடவையாவது தரிசித்து விடுவதே என்பதாகும். அதற்கமைய, பாதுகாப்புமிக்க. சலுகைக்கட்டணங்கள் முறைமை ஒன்றின் கீழ் இந்தச் செயற்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (வ-22)

## யானைகளின் தொல்லையால் பாலமுனை மக்கள் பாதிப்பு



அட்டாளைச்சேனை, ஒக்.6
அட்டாளைச்சேனை, பாலமுனை ஹிறா நகர் கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காட்டு யானைகள் உட்புகுந்து பெரும் அட்டகாசம் செய்துள்ளன.

இதனால் அந்தக் கிராமத்தில் சில வீடுகளும் தேநீர்க்கடை ஒன்றும் சேதமடைந்துள்ளன. அத்துடன் தேநீர்க் கடையில் இருந்த பொருள்கள் அனைத்தும் உடைத்து நாசம் செய்யப்பட்டுள்ளன.

மின்சார வசதியில்லாத குறித்த கிராமத்தில் கடந்த சில காலமாக காட்டு யானைகள் உட்புகுந்து உயிர். உடைமைகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருகின்றன. இதனால் இரவு நேரங்களில் அந்தப்பகுதி மக்கள் தமது வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யானைகளின் அட்டகாசத்தால் தமது வீட்டுத் தோட்டங்களுக்கும் பொருள்களும் பாதிக்கப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்து மாறும் மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறும் அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளிடம் நீண்ட காலமாக தாம் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் அவை தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ)

## குற்றங்களும் கைதுகளும்

கிளிநொச்சி

### கோடா வைத்திருந்தவர் கைது

கிளிநொச்சி, கல்லாறுகிராமத்தில் 20 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணம் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் கடந்த 2 ஆம் திகதி கைது செய்தனர்.
அவரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அன்றைய தினமே முன்னிலைப் படுத்தியிருந்தனர். இதன் போது குறித்த நபருக்கு 3 லட்சம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் தண்டம் செலுத்தத் தவறின் 12 மாதகால சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். [வ—55]

கிளிநொச்சி

### பெண்ணைத் தாக்கிய ஐவர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டி, ஆனையிறவுப் பகுதியில்



பெண்ணொருவரைத் தாக்கி காயப்படுத்திய 5 பேரை பொலிஸார் கடந்த 28 ஆம் திகதி கைதுசெய்துள்ளனர்.
குறித்த 5 பேரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவானால் உத்தரவிடப்பட்டது. [வ—18]

கிளிநொச்சி

### கசிப்புடன் கைது

விசுவமடு, குமாரசாமிபுரத்தில் ஒன்றேகால் போத்தல் கசிப்புடன் ஒருவர்



பொலிஸாரால் கடந்த 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். விசாரணையின்போது குறித்த நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் நீதிவான்.
இதேவேளை—கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ரூபா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. [வ—18]

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள
“தொழிற்சந்தை”
எதிர்வரும் 07.10.2014 ஆம் திகதி
மு.ப.11.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை
யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறும்.
அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் பங்கேற்புடன் நடைபெறும்.
இத்தொழிற்சந்தையில் கலந்து கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை உரித்தாக்கிக் கொள்ளுங்கள்
தொழிற்சந்தை பார்வையிடலுக்கு
அனுமதி இலவசம்

ஏற்பாடு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
அத்துடன். அன்றைய தினம் மாலை 4.00 மணியிலிருந்து யாழ்ப்பாணம். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறும்
தென்னிந்திய பாடகர்
கலாநிதி. டீ. உன்னிகிருஷ்ணன் அவர்கள்
கலந்து சிறப்பிக்கும்
“ஹம்சத்வனி”
இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து இன்புறுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.
“ஹம்சத்வனி” இன்னிசை நிகழ்ச்சியினை பார்வையிடுவதற்கான நுழைவுச்சீட்டினை (TICKET) கல்லூரி நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்
ஏற்பாடு
கலை மற்றும் கலாசார அமைச்சு,
(கலாசார அலுவல்கள் திணைக்களம்)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
மற்றும்
ஜேக்ஸ் அசோஷியேட்ஸ் தனியார் நிறுவனம்
(C/16699)

## கொழும்பில் 147 சனசமூக நல வைத்திய நிபுணர்கள் கடமை

### ஏனைய மாவட்டங்களில் பணிபுரிய எவரும் இல்லை

கொழும்பு, ஒக்.6
சுகாதார அமைச்சுடன் இணைந்துள்ள சனசமூக நல சுகாதார வைத்திய நிபுணர்கள் 150 பேருள் 147 பேருமே கொழும்பு மாவட்டத்திலேயே சேவையாற்றி வருவதாக சுகாதார அமைச்சின் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.

எஞ்சியுள்ள மூவரும் கண்டிப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் சார்ந்து சேவையாற்றி வருவதோடு இலங்கையின் வேறு எந்தவொரு மாகாணத்திலும் சனசமூக சுகாதார வைத்திய நிபுணர்கள் சேவையில் இல்லைய என்றும்-சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கொழும்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் சேவையாற்றிவரும் குறித்த 147 சனசமூக சுகாதார வைத்திய நிபுணர்களுள் அதிகளவானோர் சுகாதார அமைச்சின் பல்வேறு பிரிவுகளுடன் சார்ந்து சேவையாற்றி வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள மாகாணங்கள் அனைத்துக்குமான சனசமூக சுகாதார வைத்திய நிபுணர்கள் 300 பேர் கடமையாற்ற வேண்டியிருந்தாலும்கூட தற்போதுள்ள இந்த வைத்திய நிபுணர்கள் தரப்பும்கூட இவ்விதம் பிரதேசம் ஒன்றில் சேவையாற்றுவதானது சனசமூகநல சுகாதார சேவைக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

அவர்களது கடமைகளான சிறுநீரக நோய்த் தடுப்பு செயற்பாடுகள், தாய்மார் மற்றும் குழந்தைகள் சுகாதாரத்தை மேம்படுத்தல் பிரதேசங்கள் ரீதியான உயிர்க் கொல்லி நோய் நிவாரணம் போன்றே டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளும்கூட இதன் காரணமாக முடங்கிப் போவதாகவும் அவர் மேலும் கூறினார். (வ-22)



# முதலிடத்தைத் தக்க வைக்குமா இந்தியா?

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை முழுமையாகக் கைப்பற்றுவதன் மூலம் ஐ.சி.சி.யின் ஒருநாள் ஆட்டங்களிற்கான தரவரிசையில் முதலிடத்தைத் தக்கவைப்பதற்கான வாய்ப்பு இந்திய அணிக்கு கிடைக்கும்.

சர்வதேச ஒருநாள் ஆட்டங்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன் தினம் வெளியிட்டது. இதில் இந்திய அணியும், தென்னாபிரிக்காவும் தலா 113 புள்ளிகள் பெற்றுள்ளன. இருப்பினும் தசம புள்ளிகள் வித்தியாசத்தில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்க அணி இரண்டாவது இடத்தில் உள்ளது. மூன்றாவது, நான்காவது இடங்களில் முறையே இலங்கை, ஆஸ்திரேலியா தலா 111 புள்ளிகளுடன் உள்ளன.

இந்த நிலையில், இந்தியா சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இத்தொடரை, இந்தியா 5:0 எனக் கைப்பற்றும் பட்சத்தில், தரவரிசையில் முதலிடத்தை 116 புள்ளிகளுடன் தனியாக கைப்பற்றலாம். அதேவேளை, பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் 3:0 என ஆஸ்திரேலியாவும், மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான தொடரில் இந்தியா 4 :1 எனவும் வென்றுவிட்டால், இரு அணிகளும் 114 புள்ளிகளை பெற்றுக்கொள்ளும். இருப்பினும், தசம புள்ளிகள் வித்தியாசத்தில் இந்திய அணியே முதலிடத்தை பிடிக்கும்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் விராட் கோஹ்லி 3ஆவது இடத்தில் உள்ளார். முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களில் முறையே தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ், அம்லா ஆகியோர் உள்ளனர். இலங்கை வீரர்களான சங்கக்கார 5ஆவது இடத்திலும், டில்சான் 8ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய அணித்தலைவர் டோனி ஆறாவது இடத்திலும், சிகார் தவான் 7ஆவது இடத்திலும் உள்ளனர். மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் கோஹ்லி அசத்தும் பட்சத்தில் மீண்டும் முதலிடத்தை எட்டலாம்.

பந்து வீச்சாளர்களுக்கான பட்டியலில் சர்வதேச ஆட்டங்களில் பந்து வீசத் தடைவிதிக்கப்பட்ட பாகிஸ்தானின் சயீட் அஜ்மல் முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் சர்ச்சைகளுக்கு உள்ளாகியுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியின் சுனில் நரைன் உள்ளார். இந்திய வீரர் ஜடேஜா 5ஆவது இடத்தில் உள்ளார். இலங்கைப் பந்து வீச்சாளர்கள் எவரும் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெறவில்லை. (ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# ஆஸ்திரேலியா வெற்றி

பந்து வீச்சில் அசத்திய ஆஸ்திரேலிய அணி, பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒரேயொரு ரி- 20 ஆட்டத்தை 6 இலக்குகளால் வெற்றி கொண்டது.

பாகிஸ்தான் மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதிக்கொண்ட ஒரேயொரு ரி- 20 ஆட்டம் நேற்று டுபாயில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன் படி முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் முன்வரிசை வீரர்கள் மக்ஸ்வெல்லின் சுழலைத் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறினர். அவைஸ் சியா 3ஓட்டங்களுடனும், உமர் அமின் மற்றும் சொகைப் மக்சூட் ஓட்டமெதனையும் பெறாமலும் மக்ஸ்வெல் பந்தினால் வெளியேறினர். ஆரம்பத்திலேயே இலக்குகளை இழந்து தடுமாறிய பாகிஸ்தான் அணியின் ஏனைய வீரர்களும் பிரகாசிக்கத் தவறினர். சீரான இடைவெளிகளில் இலக்குகள் சரிக்கப்பட, 20 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 9இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக சாட் நஸிம் 25 ஓட்டங்களையும், வகாப் ரியாஷ் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஆஸ்திரேலியாவின் கிளைன் மக்ஸ்வெல் 3 இலக்குகளையும், கமரூன் போய்ஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கை பதிலுக்கு விரட்டிய ஆஸ்திரேலிய அணி வோர்னரின் உதவியுடன் 14ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. வோர்னர் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 17 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார்.

**வாகனம் வாடகைக்கு**

2013 Model TATA Super AC வாகனம் சாரதியுடன் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:- 077 9806403

**விசேட கருத்தரங்குகள்**

அடுத்து திங்கள் (6/10), புதன் (8/10) தினங்களில் காலை 9 – மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளன. பின்வரும் பரீட்சைகளுக்கு

11ம், 12ம் 18ம் திகதி நடைபெறவுள்ள கணக்காய்வாளர்

19ம் திகதி நடைபெறவுள்ள கணக்காளர்

12ம் திகதி நடைபெறவுள்ள புகையிரத உதவி அத்தியட்சகர் பரீட்சைகளுக்கு

T.P- 0754164564

யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு, (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷியல் வங்கியருகே)

# மரண அறிவித்தல்



## சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

(முன்னாள் நடத்துநர், கண்டி ஸ்ரோர்ஸ், சிவசக்தி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பலாலி கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க நிர்வாக உறுப்பினர்)

யாழ்ப்பாணம் பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் 02.10.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நெம்பர் தம்பிஜயா- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் ராஜகிருஷ்ணன் (ராசா- இலங்கை), ராஜமோகன் (லண்டன்), ராஜ சோபனா (இலங்கை), ராஜமனோகரன் (லண்டன்), ராஜமயூரன் (இலங்கை), ராஜஜீவா (லண்டன்), ராஜபவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் சின்னத்துரை, நல்லம்மா, இராசதுரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யதுஷன்(இத்தாலி), நிதீஷன் (இத்தாலி), சுதாகரன் (பிரான்ஸ்), பகீரதன் (லண்டன்), குகலினி (லண்டன்), பஞ்சகுமார் (லண்டன்), நந்தகுமார், மனோரமா, றஞ்சினி, நந்தகுமார் (லண்டன்), நந்தினி, ஸ்ரீலோகநாதன் (பிரான்ஸ்), றஜிக்குமார் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), தனிஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனும், சுபாஜினி, சுதாகரன், சுகந்தினி ஆகியோரின் சிறிய தந்தையும், சுபதினி, சுசீலன் (லண்டன்), சுமிதா, சுவீந்திரன் (லண்டன்), சுகந்தன் (லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், விமலாதேவி மற்றும் பாலசுப்பிரமணியம், அன்னப்பிள்ளை, செல்வநாயகம் (இத்தாலி), புஸ்பராணி (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி,
அச்சுவேலி.

**தகவல்:**
**இராஜேஸ்வரி (மனைவி), ராஜமோகன் (மகன்)**
**தொ.பே- 0771708661**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.